

சிரியாவில் மயிர்க் கூச்செறியும் கூட்டுப் படுகொலைகள்! 09



ஆசியாவின் ஆச்சரியம் தொடர்கின்றது! 05



07 எம்.எச்.ஏ. ஹலீம்
முஸ்லிம் சமய விவகாரம் மற்றும் தபால் துறை அமைச்சர்

ஹஜ் ஒரு இபாதத் முகவர்களே! நியாயமான முறையில் சம்பாதியுங்கள்


# மீள்பார்வை

මීල්පාර්වෙ

Meelparvai Fortnightly
www.meelparvai.net

සමාජ වෙනසකට නගන හඬ
சமூக மாற்றத்திற்கான குரல்

Registered as a newspaper in Sri Lanka
GPO-QD/63/NEWS/2016 - ISSN 2012-5038

இதழ் - 350 • 26 ஒகஸ்ட் 2016 வெள்ளிக்கிழமை • துல் கஃதா 1437 • விலை 40.00







# ஐ.நா. செயலாளரின் விஜயம்

## முஸ்லிம் தலைமைகள் பயன்படுத்திக் கொள்ளுமா?



ஜெனீவாவில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் 32 ஆவது கூட்டத் தொடரின் போது வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர விடுத்த வேண்டுகோளுக்கு இணங்க, ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் பான் கீ மூன் செப்டம்பர் 01 ஆம் திகதி இலங்கை வரவுள்ளார்.

இந்த ஆண்டு இறுதியுடன் ஐ.நா. பொதுச்செயலர் பதவியில் இருந்து ஓய்வு பெறவுள்ள நிலையில் பான் கீ மூன் இலங்கைக்கான தனது இரண்டாவது பயணத்தை மேற்கொள்ளவிருக்கிறார்.

தனது மூன்று நாள் உத்தியோக பூர்வ விஜயத்தின் போது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் அரசாங்க பிரதிநிதிகள் பலரையும் எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் மற்றும் ஐ.நா மற்றும் அனைத்துலக தொண்டர் நிறுவனங்களின் பிரதிநிதிகளையும் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார்.

இலங்கையின் மனித உரிமைகள் நிலையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் மற்றும் ஜெனிவா தீர்மானத்தை நடைமுறைப்படுத்தப்படுவதில் எட்டப்பட்டுள்ள முன்னேற்றங்கள் என்பனவற்றில் அவர் கவனம் செலுத்துவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

(பக்.14)



இனங்களுக்கு மத்தியில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் வகையில் உருவாக்கப்படவுள்ள நல்லிணக்கப் பொறிமுறைக்கு மக்கள் கருத்தறியும் அமர்வு 24-08-2016 அன்று ஏறாவூர் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

## கொழும்பு நிதி நகரம் துபாயை விட கவர்ச்சிகரமாகும்



கொழும்பு நகரை மையமாக வைத்து மேல் மாகாணத்தை மாநகரமாக (மெகாபொலிஸ்) உருவாக்கி உலகில் வர்த்தக மத்திய நிலையமாக இலங்கையை மாற்ற நடவடிக்கை எடுத்து வருவதாக மேல் மாகாண அபிவிருத்தி மற்றும் மாநகர அமைச்சர் சம்பிக ரணவக்க தெரிவித்தார்.

லண்டன், நியூயோர்க், அண்மைக் காலத்தில் உருவாக்கப்பட்ட ஹொங்கொங், சிங்கப்பூர் மற்றும் டுபாய் என்பவற்றின் அனுபவங்களை பெற்று அதனை விட கவர்ச்சி மிக்க இடமாக கொழும்பு நிதி நகரம் உருவாக்கப்படும். துறைமுகம், விமான நிலையம் மற்றும் நிதி நகரத்தை அண்டியதாக மாநகர திட்டம் முன்னெடுக்கப்படும்.

எமது தேசிய பூகோள வரைபடத்தை மீள தயாரித்து அடுத்த வருடம் வெளியிட இருக்கிறோம். இதனுடன் இணைந்ததாக ஹம்பாந்தோட்டை, காலி, கண்டி, அநுராதபுரம், பொலன்நறுவை, திருகோணமலை, யாழ்ப்பாணம் என்பவற்றை முன்னேற்ற உள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார். (பக்.12)






## கொழும்பு நிதி நகரம் நாட்டுக்கு நல்லதல்ல



சுற்றாடல் பாதிப்பு, பொருளாதார இழப்பு, சர்வதேச உறவுகள் பாதிப்பு என பல பக்கங்களிலும் துறைமுக நகரம் நாட்டுக்கு பாதிப்பையே ஏற்படுத்தும் என ஜே.வி.பி. தலைவர் அநுர குமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

மஹிந்தவின் காலத்தில் இது ஆரம்பிக்கப்பட்டபோது எதிர்க்கட்சியில் இருந்த ரணில் விக்கிரமசிங்க, தான் பதவிக்கு வந்தால் இதனை நிறுத்திவிடுவதாகத் தெரிவித்தார். இதற்கு அவரும் இது போன்ற பல காரணங்களைக் கூறினார். பின்னர் அவர் ஆட்சியில் அமர்ந்த்தும் இந்தத் திட்டத்தினை நிறுத்தினார். தற்பொழுது இதனை அவரே மீண்டும் ஆரம்பித்திருக்கிறார்.

இந்தத் திட்டத்தில் ஏற்கனவே இருந்த ஹோட்டல்கள், கசினோ கிளப்புகள், பந்தயக் கார் தடங்கள் உள்ளிட்ட உல்லாச விடயங்கள் நீக்கப்பட்டு தற்போது இது நிதி நகரமாக மாற்றப்பட்டுள்ளதாக அவர் கூறுகிறார். இந்தத் திட்ட அறிக்கையில் நிதி நகரமொன்றுக்கான திட்டமெதுவும் இல்லை. நிதி நகரமொன்று ஏன் கடலை நிரப்பி அமைக்கப்பட வேண்டும்?

நிதிநகரத் திட்டத்துக்குத் தேவையான 3.4 மில்லியன் கன மீட்டர் கருங்கல் கடுவெல,

(பக்.12)

## மீண்டும் வருகிறது எட்கா



இவ்வருட இறுதிக்குள் கைச்சாத்தாகவுள்ள இந்திய இலங்கை பொருளாதார தொழில்நுட்ப ஒத்துழைப்பு ஒப்பந்தம் (ETCA) தொடர்பிலான பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன. இந்தியத் தரப்பின் நால்வர் கொண்ட தூதுக் குழுவுடன் இந்தப் பேச்சு வார்த்தைகள் துவங்கப்பட்டுள்ளன. (பக்.12)

## வட்டார எல்லைப் பிரிப்பில் பாரபட்சம்



(எம்.எஸ். அப்துல் ஹலீம்)

திருகோணமலை மாவட்டத்தில் சிறுபான்மையினர் வாழும் பிரதேசங்களில், வட்டார எல்லைப் பிரிப்பில் பாரபட்சம் காட்டப்பட்டுள்ளமையினால், அதற்கு உரிய தீர்வு கிடைக்க வேண்டுமென, கிண்ணியா மஜ்லிஸ் ஷூரா தலைவர் அஷ்ஷெய்க் ஏ.எம். ஹிதாயத்துல்லாஹ் தெரிவித்தார். (பக்.12)








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





மாத்தறை, மீயல்லை கிராமத்தின் வரலாற்றில் முதன் முறையாக ஏற்பாடு செய்யப்பட்ட இரத்த தான நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

மீயல்லையைச் சேர்ந்த ஆண்கள் ,பெண்கள் , பக்கத்து ஊர் பௌத்த விகாரையின் பிரதான பிக்கு சங்கைக்குரிய நந்தாலோக அவர்கள் ,பக்கத்து ஊரைச் சேர்ந்த பிற மத சகோதர சகோதரிகள் உட்பட சுமார் 100 க்கும் அதிகமானோர் இதில் கலந்து கொண்டனர். 60 பேர் இரத்த தானம் செய்தனர் .இதில் 14 முஸ்லிம் சகோதரிகளும் 3 பௌத்த சகோதரிகளும் அடங்குவர்.

உணவு , சிற்றுண்டி உட்பட அனைத்து செலவுகளும் அனுசரணையும் ஓய்வு பெற்ற ஆசிரியர் ராபி மற்றும் ஓய்வு பெற்ற ஆசிரியை சுல்பா பீபி அவர்களின் குடும்பத்தினரால் வழங்கப்பட்டது.

(ஹரீஸ் ஸாலிஹ்)





இலங்கை வருகைதந்த, சிங்கப்பூரின் ''புதிய நிலா'' சர்வதேச சஞ்சிகையின் ஆசிரியரும், பிரபல எழுத்தாளரும், சிங்கபூர் பணமாற்றல் சங்கங்களின் ஸ்தாபகருமான அல்-ஹாஜ் எம்.செய்யத் ஜஹான்கீர் அவர்களின் 'தேசிய ஐக்கியம் மற்றும் ஊடக செயற்பாடுகள்' பற்றிய பகிரங்க உரை அண்மையில் மருதானை AMYS கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம் ஏற்பாடு செய்த இந்த நிகழ்வு அதன் தலைவர் என்.எம்.அமீன் தலைமையில் நடைபெற்றது. உரையின் முடிவில் இன நல்லிணக்கம் தொடர்பான கேள்வி-பதில் நிகழ்வும் இடம்பெற்றது.

(அனஸ் அப்பாஸ்)

After A/Ls

Become a

Certified Islamic Banker

4 Months

-Lead your career in a progressing industry-

**The Islamic Banking & Finance industry has been identified as one of the fastest growing sectors within the global economy. There is a great demand for professionals to serve this industry both locally and globally.**



*"Join the Islamic Finance journey with FGA to master the skills in your chosen field. I recommend FGA is the best place to qualify and develop your career in Islamic Banking & Finance"*

*Mohamed Ishrath, Amana Bank PLC*

CISI ACCREDITED TRAINING PARTNER

FGA Registered with TVEC under A05375

CLASS COMMENCEMENT
Date : 04 - September - 2016
Time : 9.30 am - 10.30 am

SPECIAL DISCOUNT
Register on or before 8-Sep-2016

**JOB**
Guaranteed Paid Internship of 3 months in leading Islamic Banks & Financial Institutions in Sri Lanka.

**RECOGNITION**
This programme will lead to the Islamic Finance Qualification (IFQ) offered by CISI-UK.

**EXEMPTION**
this programe will offer exemption for Diploma in Islamic Banking & Finance (DIBF) offered by FGA.

Classes will be conducted in **Colombo, Nintavur & Kalmunai**

REGISTER NOW 077-7703567 077-4616710

First Global Academy (FGA)
#4, Level 1, Collingwood Place,
Colombo 06, Sri Lanka:

+94 11 7395090-3
www.firstglobalacademy.com

## கொழும்பு நிதி.... (1ம் பக்கத் தொடர்)



நாட்டின் சூழல் மற்றும் பொருளாதாரத்துக்கு கொழும்பு துறைமுகத் திட்டத்தினால் பாரிய பாதிப்பு ஏற்படப் போவதாக அமைச்சர் சம்பிக்க உள்ளிட்ட தரப்பினர் கடந்த தேர்தல் காலங் களின் போது நாட்டு மக்களுக்கு எடுத்துரைத்தனர். தற்போது இந்தத் திட்டம் நிதி நகரம் என்ற வேறு பெயரில் அமுல்படுத்தப்படுகிறது.

இதேவேளை ஹம்பாந்தோட்டை யில் சீனாவின் முதலீட்டில் பாரிய கைத்தொழில் வலயத்தை அமைப்பது தொடர்பான ஆய்வுக்காக விஷேட பணிகளுக் கான அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம சீனாவுக்குப் பயணமாகியுள்ளார்.

சீனாவில் கட்டப்பட்டுள்ள கைத்தொழில் பூங்காக்கள் தொடர்பாக இவர்கள் அங்கு ஆய்வு செய்வர்.

ஹம்பாந்தோட்டையில் சீனாவின் உதவியுடன் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ள கைத்தொழில் வலயம் தொடர்பாக அண்மையில் பிரதமர் தலைமையில் கள ஆய்வுப் பயணத்தை மேற் கொண்டிருந்தபோது சீன தூதுவர் விடுத்த அழைப் பின்பேரிலேயே இந்தப்பயணம் இடம்பெற்றுள்ளது.

கைத்தொழில் பூங்காக்களின் கட்டு மாணம், முகாமைத்துவம் மற்றும் விரிவான அபிவிருத்தி தொடர்பான சீனாவின் அனுபவங்களை இந்தக் குழுவினர் கேட்டறிந்து கொள்வர்.

கண்டி மற்றும் திஹாரியில்

Diploma in **Sales Management**
- Indoor Sales
- Outdoor Sales
- Introduction to Business Management
- Human Resource Management (HRM)
- Marketing Management
- Business Communication
- Personal Development as a Manager

Duration 4 Months
பாடநெறி ஆரம்பம் 19th - Sep

Diploma in **ENGLISH + IT**
English - | Reading | Writing | | Listening | Speaking |
IT - MS-OFFICE HARDWARE COMP-ACCOUNTING
Duration 2 Months
பாடநெறி ஆரம்பம் 8th - Sep
Mon - Fri 8.30 a.m - 4. 30 p.m
Full Time / Part Time

HOT LINE 0777 222 529

Diploma in **Teacher Training Program**
- DIPLOMA IN MONTESSORI TEACHER TRAINING -(AMI)
- DIPLOMA IN CHILD PSYCHOLOGY
- DIP. IN PRE SCHOOL TEACHER TRAINING

AMI
பாடநெறி ஆரம்பம் 10th Sep
*Well qualified panel of Lecturers with American Qualification*
Duration 6 Months

SATISFACTION 100% GUARANTEE

Diploma in **ERP WITH Computerized ACCOUNTING**
- INTRO to Computer Accounting
- INTRO to ERP
- MS EXCEL
- MS Access
- Quick Book Premier
- M.Y.O.B. Premier
- Sage- 50 Proffessional
- Peach Tree by Sage
- Tally ERP

பாடநெறி ஆரம்பம் 5th - Sep
Duration 2 Months

Diploma in **Air Conditioning & Refrigeration**
- Assembling & Dismantling
- Trouble Shooting
- Handling of Tools
- Copper Tube Brazing, Bending and Fixing
- Handling of Digitel and Analog Meters

பாடநெறி ஆரம்பம் 19st Sep
Duration - 1 Month - Full time -with minimum of 168 hours

Diploma in **Hotel Management**
- *Front office*
- *Food & Beverages*
- *International Cookery*
- *House Keeping*
- *Pastry & Bakery*
- *Languages - French & English*

Duration 4 Months
பாடநெறி ஆரம்பம் 8th - Sep

பாடநெறி முடிவில் ISO தரச்சான்றிதழ்கள் உற்பட 3 DIPLOMA சான்றிதழ்கள் வழங்கப்படும்.
இப்பாடநெறிகலை பூர்த்தி செய்பவர்களுக்கு சிறந்த சம்பளத்துடன் 100% தொழில் பெற்றுத்தரப்படும்.
ஆண் /பெண் இருபாலாருக்கும் வெவ்வேறான பாதுகாப்பான தங்குமிட வசதி - Hostel Available

GOLDEN COLLEGE
No : 548, Peradeniya Road, Kandy. | No : 126, Kandy Road, Thihariya.
www.goldencollege.lk
081 2 205 544 | 0777 222 529
033 2 245 515 | 0777 222 528

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வெள்ளவத்தை முஸ்லிம் காணியில் இனவாதிகளின் ஆக்கிரமிப்பு!

## அதிகாரிகளின் கவனத்திற்கு!

ஹெட்டி ரம்ஸி

இனவாதத்திற்கு ஜாதி பேதமில்லை. எல்லா இனப்பிரிவிலும் அதிகாரம், பொருளாதாரம் அல்லது வேறு தேவைகளுக்காக வேண்டி இனவாதத்தை விதைப்பவர்கள் உள்ளார்கள். அதைப் போசிப்பவர்கள் அதற்குரிய காரணத்தை தெரிந்தவர்களாக உள்ளார்கள். ஆனால் இனவாதத்திற்கு பலியாகுபவர்கள் எதனையும் அறியாமல் உள்ளார்கள். நாங்கள் கூற வருகின்ற விவகாரமும் அவ்வாறுதான். மேலால் பௌத்தப் பற்றார்வமிக்க கருத்தியலொன்றை போஷிப்பதாகத் தெரிந்தாலும் உள்ரங்கத்தில் ஒரு காணிப் பிரச்சினை புரையோடியிருப்பதனை அவதானிக்க முடிகிறது.

வெள்ளவத்தையில் ஈ.ஏ. குரே மாவத்தையும் சமுத்ர மாவத்தையும் சந்திக்கும் இடத்தில் தற்பொழுது காணிப் பிரச்சினையொன்று சூடுபிடிக்க ஆரம்பித்துள்ளது. அதை மூடி மறைப்பதற்கு இனவாதத்தை எவ்வாறு கேடயமாக பயன்படுத்திக் கொண்டுள்ளார்கள் என்பது பற்றி ஆராய்வதற்கே நாங்கள் தயாராகிறோம்.

இரண்டரை பர்சஸ் காணி சமுத்ர மாவத்தைக்கு முன்னால் உள்ளது. முன்னர் இக்காணி பன்னிரண்டரை பர்ச்சஸ் நிலமாக காணப்பட்ட போதிலும் வீதி அகலிப்புப் பணிகளுக்காக வேண்டி கூடுதலான நிலப்பகுதி காவு கொள்ளப்பட்டது. இரண்டரை பர்ச்சஸ் காணித்துண்டு மாத்திரமே எஞ்சியது. வீதி' அகலிப்புக்காக வேண்டி அக் காணியில் பெருமளவு நிலப்பகுதி கைப்பற்றப்பட்டதனால் இச்சிறிய காணித் துண்டுக்கு ஏற்றுக்கொள்ளப் பட்ட காணியொன்றுக்குரிய சகல வரப்பிரசாதங்களும் உள்ளது. இது வரையில் இந்நிலப்பகுதியில் எவ்வித கட்டுமாணப் பணிகளும் மேற்கொள்ளப் பட வில்லை. 2014 ஆம் ஆண்டு தொடக்கம் முஹம்மத் ஹஸன் அமானுல்லாஹ் என்பவருக்கு இக்காணித் துண்டு சொந்தமாக உள்ளது.

இதற்கருகாமையில் மற்றுமொரு இடம் டாக்டர் ஈ.ஏ. குரே மாவத்தைக்கு



முன்பாக அமைந்துள்ளது. அங்கு ஒரு வீடு கட்டப்பட்டுள்ளது. அது பௌத்தப் பெண்கள் சங்கத்திற்கு கீழ் உள்ளதென தெரிய வருகிறது. இது பன்சலையொன்றல்ல. என்றாலும் அங்கு ஒரு தேரர் அடிக்கடி வந்து செல்வதுடன் அவ்விடத்தை அவர் வேறொருவரிடம் ஒப்படைப்பதற்கான முயற்சிகளில் ஈடுபடுகிறார் என்பது தெரிய வர, அப்போதைய பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷவினது தலையீட்டில் அவ்விடத்திலிருந்த அத்தேரர் அகற்றப்பட்டு சிவில் பாதுகாப்பு படையணியைச் சேர்ந்த இராணுவ வீரர்களின் உறைவிடமாக அவ்விடம் மாற்றப்பட்டது.

யுத்தம் முடிவுற்றதும் குறித்த இராணுவ வீரர்கள் அவ்விடத்திலிருந்து அப்புறப்படுத்தப்பட்டதுடன் அவ்விடம் வெள்ளவத்தை பொலிஸாரின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது.

2015 ஜனவரி 8 ஆம் திகதி ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தின் பின்னர் மீண்டும் அவ்விடத்திற்கு தேரர் ஒருவர் அடிக்கடி வந்து போக ஆரம்பித்திருக்கிறார். அவ்வேளையில் முஹம்மத் ஹஸன் அமானுல்லாவுக்கு சொந்தமான காணியில் இரண்டு மாடிக்கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்கான முன்னாயத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளதோடு அக்கட்டிட நிர்மாணத் திட்டத்திற்கு 2011ஆம் ஆண்டு மாநகர சபை அனுமதியும் வழங்கியிருந்தது.

இச்சந்தர்ப்பத்திலேயே பிரச்சினை மேலெழுகிறது. கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட பொழுது கட்டிடத் திட்ட வரைபு அனுமதிக்கப்பட்டு 3 வருடங்களுக்கும் அதிகமான காலம் கடந்திருந்ததனால் முன்னாயத்த நடவடிக்கைகளின் போதே மீண்டும் ஒரு திட்டத்திற்குரிய அனுமதி பெறப்படுகிறது.

அவ்வாறு அனுமதி கிடைக்கப் பெற்ற திட்டத்திற்கு அமைய மேற்குறிப்பிட்ட நிலப்பகுதியில் 2016 பெப்ரவரி மாதத்தில் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அவ்வேளையில் குறிப்பிட்ட இடத்தை சந்தேகத்திற்குரிய ஒரு சிலர் கைப்பற்றிக்கொண்டுள்ளதாகவும் அதில் தலையிடுமாறும் பொலிஸ் நிலையத்தில் ஒரு முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. அதற்கு அண்மித்த நாட்களில் பௌத்த தேரர் தங்கியிருந்த வீட்டிலும் கட்டுமாணப் பணிகள் இடம் பெற ஆரம்பித்துள்ளது. அது நாம் முன்னர் குறிப்பிட்ட இரண்டரை பர்ச்சஸ் காணி அமைந்துள்ள இடத்திற்கு அடுத்தாற்போல் (நெருங்கிய வகையில்) அமைக்கப்பட்டுள்ள மதிலுக்கு உட்புறத்திலாகும்.

அதனைத் தொடர்ந்து சில தினங்களில் அவ்வாறு கட்டப்பட்ட ஒரு தூணொன்றுக்கு மேலால் ஒரு புத்தர் சிலை வைக்கப்பட்டுள்ளது. அதன் பின்னர் இரண்டு காணிகளையும் வேறாக்கும் வகையில் அமைக்கப்பட்டிருந்த மதிலின் கற்கள் அகற்றப்பட்டு சிலை விளங்கும் வகையில் ஒரு திறப்பு அமைக்கப்பட்டுள்ளது. இச்சம்பவம் குறித்து ஹஸன் அமானுல்லாஹ் பொலிஸ் நிலையத்தில் ஒரு முறைப்பாட்டை செய்துள்ளார். இது விடயம் தொடர்பில் பொலிஸார் கண்காணிப்பு அறிக்கையொன்றையும் தயாரித்துள்ளனர்.

மேற்படி காணிப்பிரச்சினை தொடர்பில் நீதிமன்றத்திலும் ஒரு வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது. இவ்வழக்கு 106 ஆவது பந்திக்கமைய பொலிஸாரினால் மக்கள் குழப்பத்தை ஏற்படுத்தும் ஒரு சம்பவத்திற்குரிய வழக்கொன்றாக பதிவுசெய்யப்பட்டிருந்தது. இச்சம்பவம் மக்கள் குழப்பத்திற்குரிய சம்பவம் ஒன்றல்ல என்றும் தனிப்பட்ட இருவருக்கிடையிலான காணிச் சச்சரவொன்றுடன் தொடர்புடைய சம்பவமொன்று என்பதாகவும் அதனால், சிவில் நீதிமன்றத்தில் வழக்கொன்றை பதிவுசெய்து பிரச்சினையை சுமுகமான முறையில் முடித்துக் கொள்ளுமாறும் கூறி நீதிமன்றம் வழக்கை தள்ளுபடி செய்தது.

அதன் பின்னர் மேற்படி புத்தர் சிலையுடன் தொடர்புபட்ட நிர்மாணப் பணிகளை நிறுத்துமாறு நீதவான் நீதிமன்றத்தினால் தடையுத்தரவு ஒன்றும் பிறப்பிக்கப்பட்டது. ஆனாலும் கட்டுமாணப் பணிகள் நிறுத்தப்படவில்லை. அமானுல்லாவின் காணியில் பௌத்த கொடிகள் பறக்கவிடப்படுகிறது. பொலிஸாரின் தலையீட்டிலேயே அவை மீள அகற்றப்பட்டன. இக்காணிப் பிரச்சினை இன்னும் முடிவடையவில்லை. அதனை அவர்களே தீர்த்துக்கொள்ள வேண்டும். உள்ளால் ஒரு காணிப்பிரச்சினையாக இருந்த போதிலும் வெளிப்படையில் இனவாதச் சிந்தனையொன்று போசிக்கப்பட்டு வருவதானது மிகவும் கவலைக்குரிய விடயமாகும்.

சமூக வளைதளங்களிலும் இது தொடர்பிலான உரையாடலொன்று உருப்பெற்றுள்ளது. அதாவது ஒரு பௌத்த விகாரையை மறைத்து இறைச்சிக் கடையொன்றை கட்ட முயற்சிக்கிறார்கள் என்கின்ற கருத்தொன்று கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது. வில்பத்து சரணாலயத்தை பாதுகாத்தமை தொடர்பில் குறித்த தேரருக்கு அச்சுறுத்தல் ஒன்று இருப்பதாகவும் மேற்படி பேஸ்புக் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆனாலும் இச்சம்பவத்துக்கு பின்னால் வில்பத்து அல்லது வேறொரு நிகழ்வு தொடர்புபடுவதில்லை. உண்மையில் இங்கு தனிப்பட்ட காணிப் பிரச்சினையே உள்ளது. அவ்விடத்தில் பௌத்த விகாரையொன்றும் அமைந்திருக்கவில்லை. ஒரு சில மாதங்களுக்கு முன்னர் ஸ்தாபிக்கப்பட்ட புத்தர் சிலையொன்று மாத்திரமே உள்ளது. அவர்கள் விகாரையொன்று என்பதாக குறிப்பிடுகின்ற காணிக்கு உரிமையாளர் ஒருவரோ அல்லது குறித்த விகாரையில் வழிபாடு செய்வதற்குரிய அத்தாட்சிகளோ இல்லை.

இக்காணியின் உண்மையான சொந்தக்காரர் ஒரு வகையான மானசீக நோயால் பாதிக்கப்பட்ட ஒருவர் என்பதாகவும் அதற்கு உரிமை கோருவதற்கு ஒருவரும் முன் வராததன் காரணத்தினாலும் அவ்வகையில் சட்ட ரீதியான உரிமையொன்று இல்லாமல் இக்காணியை அவ்வப்போது பல்வேறு குழுக்கள் அரசியல் அதிகாரத்தை பயன்படுத்தி அனுபவித்திருப்பதாகவும் எமக்கு தெரிய வந்துள்ளது.

இதனால் எமக்கு ஒரு விடயத்தை சொல்ல முடிகிறது. எந்தவொரு இடத்திலும் காணிப்பிரச்சினைகள் ஏற்படலாம் என்பதோடு அவ்வாறான நிலைமைகளின்போது நாட்டில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள சட்டங்களின் பிரகாரமே அப்பிரச்சினைகளை தீர்த்துக்கொள்ளப்பட வேண்டும். அதுவல்லாமல் அப்பிரச்சினையை தீர்த்துக் கொள்வதற்கு இனவாத்தையோ அல்லது மதவாதத்தையோ பயன்படுத்துவது பாரதூரமானதொரு சமூகப் பிரச்சினைக்கு வழிகோலும் என்பதுடன் அவ்வாறான செயல்கள் தடுக்கப்பட வேண்டியுள்ளது. பௌத்தரோ அல்லது இஸ்லாமியரோ அல்லது பிறிதொரு மதத்தவரோ எவராக இருந்தாலும் அதனை நன்றாக புரிந்து கொள்ள வேண்டும்.

# இளம் தலைமுறையினரை அழிக்கும் போதைப்பொருள்

எம்.எஸ். அமீர் ஹுசைன்

ஒவ்வொரு சமூகத்திலும் இளம் தலைமுறையினரை போதைப் பொருள் பாவனைக்கு அடிமையாதலில் இருந்து பாதுகாப்பதற்காக கடுமையான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இலங்கைக்குள் கொண்டு வரப்படுகின்ற போதைப் பொருள் தொடர்பாக அவதானிக்கையில், இத்தகைய குற்றச் செயல்களில் ஈடுபட்டு கைது செய்யப்பட்டுள்ளவர்களில் சிங்களம், தமிழ், முஸ்லிம், கிறிஸ்தவர்கள் என்ற பாகுபாடின்றி, எல்லா இனத்தவர்களும் சம்பந்தப்பட்டுள்ளனர். ஜனாதிபதியின் நேரடி கண்காணிப்பின் கீழ் போதைப்பொருளுக்கு எதிரான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

குறிப்பாக போதைப்பொருள் காரணமாக முஸ்லிம் சமூகமும் வெகுவாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றது. மொத்த சனத்தொகையில் 100,000 பேருக்கு 400 பேர் என்ற அடிப்படையில் போதைப் பொருளுக்கு அடிமையானவர்களது விகிதம் இருப்பதாக புள்ளிவிபரங்கள் கூறுகின்றன. உத்தியோகபூர்வமான அறிக்கைகள் இவ்வாறு இருந்தாலும் இந்தத் தொகை மேலும் அதிகமாக இருக்கும் என்றே கருத முடிகின்றது.

போதைப்பொருளுக்கு அடிமையானவர்களின் வயதுப் பருவத்தை அவதானிக்கையில் 18 வயதுக்கும் 35 வயதுக்கும் இடைப்பட்டவர்களே அதிகம் உள்ளனர். அண்மைக் காலங்களில் ஏற்பட்டுள்ள நிலைமைகளை அவதானிக்கையில், படிப்படியாக முஸ்லிம் சமூகத்திற்குள்ளும் போதைப்பொருள் ஊடுருவி, கணிசமான இளைஞர்களை மிக மோசமாகப் பாதித்து வருவதை அவதானிக்க முடிகின்றது.

போதைப்பொருள் விற்பனை செய்பவர்கள் இளம் தலைமுறையினரை அதிலும் அதிகமாக பாடசாலை மாணவர்களை இலக்கு வைத்தே பரிமாற்றத்தை மேற்கொண்டு வருகின்றனர். ஹெரொய்ன், கொகெய்ன், ஹஸீசஸ், கஞ்சா, அபின், போதையூட்டப்பட்ட பாக்குத் தூள் வகைகள், பீடா வகைகள், இனிப்பு வகைகள், சுவிங்கம் வகைகள், மென்பானங்கள் என்று மனித சமூகத்திற்கு கேடு விளைவிக்கக் கூடிய ஏராளமான ஔடதங்கள் உள்ளன.

இவற்றை நாட்டுக்குள் கடத்தி வருவது, பரிமாறுவது, விற்பனை செய்வது, கைவசம் வைத்திருப்பது, பயன்படுத்துவது, அதற்காக அனுசரணை வழங்குவது உட்பட அனைத்து நடவடிக்கைகளும் தண்டனைக்குரிய குற்றமுமாகும். இத்தகைய குற்றச் செயல்களில் பெருமளவான முஸ்லிம்களும் ஈடுபட்டு வருவது புள்ளி விபரங்களிலிருந்து தெரிய வருகின்றது.

அண்மைக் காலமாக பாடசாலைப் பருவத்தினரை இலக்கு வைத்து போதையூட்டப்பட்ட பாக்குத்தூள் வகைள், பீடா, இனிப்பு வகைகள், சுவிங்கம் வகைகள், மென்பான வகைகள் உட்பட இவற்றோடு ஹெரோய்ன், கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருட்கள் விற்கப்பட்டு வருவது நாட்டில் பரவலாக கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றது. இத்தகைய வியாபாரத்தில்



ஈடுபடுபவர்கள் பாடசாலை மாணவர்களை விலையுயர்ந்த கையடக்க தொலைபேசிகள், பணம் போன்றவற்றை வழங்கி ஆசை காட்டி இத்தகைய பொருட்களின் விற்பனைக்கு பழக்கி வருகின்றனர். அவர்கள் ஊடாக ஏனைய மாணவர்கள் இலக்கு வைக்கப்பட்டு, இவற்றுக்கு அடிமையாக்கப்பட்டு வருகின்றனர்.

பாடசாலை மாணவர்களுக்கு சம்பந்த

வர்களை அணுகி, சுற்றுலாக்களை ஏற்பாடு செய்தும், களியாட்ட நிகழ்வுகளை ஏற்பாடு செய்தும் அல்லது தந்திரேபாயமான முறையில் சந்திப்புக்களை ஏற்பாடு செய்தும் பாடசாலைப் பருவத்தினரை போதைப் பொருளுடன் தொடர்புபடுத்தும் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றனர்.

அதிகமான பிரபல அல்லது முன்னணிப் பாடசாலை மாணவர்கள் இவ்வாறு போதைப்பொருளுக்கு அடிமையாகியுள்ள சம்பவங்கள் பல இடங்களில் நடைபெற்றுள்ளன. 'குறிப்பாக 06 ஆம் வகுப்பு முதல் 13 ஆம் வகுப்பு வரையான மாணவர்களை அதிகமாக இந்த' விடயங்களில் கவரச் செய்வதில் இத்தகைய பாதகச் செயல்களில் ஈடுபடுபவர்கள் கண்வைத்து செயற்பட்டுக் கொண்டிருக்கின்றனர்.

சில ஊர்களில் பாடசாலை மாணவிகள் கூட இதனால் பாதிக்கப்பட்டிருப்பது கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. அதிகமான ஊர்களில் பாடசாலைகளை 10 ஆம் தரம் முதல் உயர்தர வகுப்புகள் வரையில் எடுத்துக் கொண்டால், ஒரு வகுப்பில் குறைந்தபட்சம் ஏதாவதொரு போதைப் பொருள் விற்பனை அல்லது பாவனைக்கு அடிமையாகிய 04 பேருக்கு குறையாத மாணவர்கள் உள்ளனர் எனலாம்.

அதிகமான பாடசாலைகளில் இத்தகையவர்களை அடையாளம் கண்டாலும் எதிர்காலம் பாதிக்கப்பட்டு விடலாம் என்ற ஒரே காரணத்திற்காக கடுமையான நடவடிக்கைகள் எடுப்பதற்கு ஆசிரியர்களோ அதிபர்களோ முன்வருவதில்லை. ஆனாலும் சந்தர்ப்பத்தை சாதகமாக்கிக் கொள்ளும் இத்தகையவர்கள் ஏனைய மாணவர்களையும் இத்தீய பழக்கத்திற்கு அடிமையாக்கி விட்டால், அதன் பின்னர் பாதிக்கப்பட்டவரை சரிசெய்ய இயலாத நிலை ஏற்பட்டால், அது ஒரு குடும்பத்திற்கு மட்டுமல்லாமல் நீண்ட கால அடிப்படையில் முழுச் சமூகத்திற்கே பாதிப்பை ஏற்படுத்தவதாக அமைகின்றது.

போதைப்பொருள் அல்லது தீய பழக்க வழக்கங்கள் நடைபெறும் இடங்களாக ஒவ்வொரு ஊரிலும் உள்ள ஒதுக்குப்புறங்களான மக்கள் நடமாட்டம் இல்லாத இடங்கள், பெரியவர்களின் அல்லது பெற்றோரின் கண்காணிப்பு இல்லாத குடியிருப்புப் பகுதிகள், இரவு நேரங்களில் ஆங்காங்கே ஒரு சில இளைஞர்கள் தனிமையாக சந்திக்கும் இடங்கள், பொழுது போக்கிற்காக குறிப்பிட்ட மட்டத்தில் இளைஞர்கள் வந்து போகின்ற இடங்கள் என்பன போதைப்பொருட்கள் பரிமாறப்படுகின்ற இடங்களாகவும் இருக்கலாம். இரவு நேரங்களில் அதிகமாக இளைஞர்கள் கூடி காரணமின்றி அரட்டை அடிக்கும் சந்தர்ப்பங்களும் இத்தகைய நிலைமைகளுக்கு வழிவகுப்பதாக உள்ளன.

இவ்வாறு இளைஞர்கள் கடுமையாக போதைக்கு அடிமையாகும்போது நாளடைவில் நரம்புக் கோளாறுகள், மூளைச் செயற்பாட்டில் குழப்பத்திற்கு உள்ளானவர்களாகவும் இருப்பார்கள். படிப்படியாக சமூகம் எத்தகைய செயல்களை வெறுக்கின்றதோ அத்தகைய செயல்களில் அதிக நாட்டமும் ஈடுபாடும் உடையவர்களாக இருப்பார்கள். சுய உணர்வை இழந்தவர்களாக இருப்பதோடு (பக். 14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




49, St. Mahinda Dharma Mawatha (Perth Road), Colombo-09.
Tel: 0112 691258 077 222 7569
E-mail: meelparvai@gmail.com, Web: www.meelparvai.net

# இலங்கை முஸ்லிம்களும் சர்வதேச தீவிரவாதமும்

ஐஎஸ் தீவிரவாத இயக்கம் தொடர்பில் அண்மையில் அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா வெளியிட்ட பிரகடனம் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததொன்றாகும். ஐஎஸ் தீவிரவாத இயக்கத்தின் தோற்றம் முதற் கொண்டே அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா இந்த அமைப்புக் கெதிரான தனது நிலைப்பாட்டை வெளிப்படுத்தி வந்தது. இதனால் அப்போது இதற்கு மாற்றமான கருத்துக்களைக் கொண்டிருந்தவர்களினால் ஜம்மியதுல் உலமாவும் அதன் தலைவரும் எள்ளி நகையாடப்பட்ட சந்தர்ப்பமும் இருந்தது.

இருந்தபோதிலும் தனது நிலைப்பாட்டில் உறுதியாக இருந்ததன் பிரதிபலிப்பாக இறுதியாக நடைபெற்ற தனது வருடாந்த மாநாட்டில் ஐஎஸ் தீவிரவாத இயக்கத்தை இஸ்லாத்துக்கு முற்றிலும் விரோதமான அமைப்பாக ஜம்இய்யதுல் உலமா பிரகடனப்படுத்தியது. சமூகத்தின் எதிர்கால நலன் கருதி வெளியிடப்பட்ட இந்தத் தீர்மானத்தின் மூலம் முஸ்லிம்கள் மத்தியிலும் நாட்டு மக்கள் மத்தியிலும் இருந்த பல சந்தேகங்கள் தெளிவாக்கப்பட்டுள்ளன.

இலங்கையைப் பொறுத்தவரையில் அச்சுறுத்தலான வகையில் அல்லது இவ்வாறான பயங்கரவாத அமைப்புக்களுக்கு ஆதரவான வகையில் இலங்கை மக்கள் செயற்படவில்லை என தன்னால் உறுதியாகக் கூற முடியும் என பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜயவர்தனவும் தெரிவித்திருக்கிறார்.

பாதுகாப்பு இராஜாங்க அமைச்சரின் உறுதிமொழிக்குப் பின்னரும், உலமா சபையின் தீர்மானத்துக்குப் பின்னரும் ஐஎஸ்ஸை இலங்கை முஸ்லிம்களுடன் தொடர்புபடுத்துவதற்காக சிலர் முனைவது முஸ்லிம் சமூகத்தை கருவறுக்க நினைக்கின்ற சக்திகளின் உள்ளக்கிடக்கையையே வெளிப்படுத்துகிறது

முஸ்லிம்களுக்கெதிரான வெறுப்புப் பிரச்சாரங்கள் மடைதிறந்து விடப்பட்ட கடந்த கால ஆட்சியில், சிங்கள மக்களின் மனதில் முஸ்லிம்களைப் பற்றிய எதிர்ப்புணர்வை வளர்ப்பதற்கு தீவிரவாதிகள் பயன்படுத்திய அதே ஐஎஸ் ஆயுதத்தை இத்தனைக்குப் பின்னரும் முஸ்லிம் விரோத சக்திகள் தொடர்ந்தும் பயன்படுத்தி வருகின்றன.

வெளிநாடுகளில் இருந்து ஐஎஸ் தீவிரவாதிகள் நாட்டுக்குள் ஊடுருவி வருவதாக பொதுபலசேனாவின் டிலன்த விதானகே தெரிவித்திருக்கிறார். இந்தப் பயப்பிராந்தியை சிங்கள மக்கள் மத்தியில் விதைத்ததன் பின்னர், சிங்களவர்களுக்கெதிராக நடக்கும் எந்தச் சம்பவத்துக்குப் பின்னாலும் முஸ்லிம்களைத் தொடர்புபடுத்தி கலவரமொன்றுக்குத் தூபமிடுவது இவ்வாறான பிரச்சாரங்களின் பின்னணியாக அமைய முடியும்.

இதேவகையான கருத்துப் போக்குடனேயே இந்திய ஊடகங்களும் இந்திய புலனாய்வுப் பிரிவும் காய்நகர்த்துவதாகத் தெரிகிறது. தலைசிறந்த புலனாய்வுப் பிரிவு இலங்கையிடம் இருக்கிறது என்று பெருமைப்பட்டுக் கொள்ளும் நிலையில் இந்திய புலனாய்வுப் பிரிவினர் இலங்கையில் ஐஎஸ் தீவிரவாதிகள் சம்பந்தமாக இலங்கைப் புலனாய்வுப் பிரிவினரை உசுப்பேற்றி வருகின்றனர்.

அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகருவது போல ஐஎஸ் அமைப்பில் இணைந்து கொள்ளும் நபர்கள் இலங்கையை தளமாகப் பயன்படுத்துவது குறித்து வெளிவரும் தகவல்களை சாதாரணமாகக் கொள்ள முடியாது என இலங்கையின் பாதுகாப்புத் தரப்பு கருத்து வெளியிட்டு வருகிறது.

இலங்கை முஸ்லிம்களை ஐஎஸ் அமைப்புடன் பிணைத்துவிடுகின்ற தேசிய சர்வதேசிய சக்திகளையிட்டு நாங்கள் கவனமாக இருக்க வேண்டும். இலங்கை முஸ்லிம்கள் நாட்டின் அமைதியை சீர்குலைப்பவர்கள் அல்ல என பிரதமர் கூறிய கருத்தை மறுதலிக்கின்ற விதமாக இவ்வாறான சக்திகள் செயற்பட்டு, தமது முஸ்லிம் விரோத கருத்துக்களை பெரும்பான்மையினருக்கு மத்தியில் ஆழ விதைப்பதற்கு முயற்சிப்பதற்கு இடமிருக்கின்றது.

இதற்கு மாற்றமாக அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவின் தீர்மானத்தையும் பிரதமரின் கூற்றையும் மெய்ப்பிக்கின்ற விதமாக பொறுப்புடன் செயற்பட வேண்டியது இலங்கை முஸ்லிம்களின் கடமையாகும்.

இது தொடர்பாக இலங்கையின் ஏனைய சமூகங்களுடன் இணைந்து நாட்டுக்கான விசுவாசத்தை இலங்கை முஸ்லிம் சமூகம் வெளிப்படுத்த வேண்டிய சிறந்த தருணம் இதுவாகும்.

# முஸ்லிம் சமூகத்தின் தலைமைத்துவ நெருக்கடி



லத்தீப் பாரூக்

அரசாங்கத்தில் முஸ்லிம் சமூகத்தைப் பிரதிநிதித்துவம் செய்பவர்கள் யார்? ஆச்சரியத்தக்க வகையில் யாரும் இல்லை என்பதே இந்தக் கேள்விக்கான பதில்.

'அரசாங்கத்துக்குள் பல முஸ்லிம் அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்கள் இருக்கையில் எவ்வாறு அப்படிக் கூறலாம்' என்று யாராவது கேள்வி எழுப்பலாம். ஆம் பல முஸ்லிம் அமைச்சர்கள் இருக்கின்றார்கள் தான். ஆனால் அவர்கள் சமூகத்தைப் பிரதிநிதித்துவம் செய்யவில்லை. ஏனெனில், இவர்களுள் பலர் பின்கதவு கொடுக்கல் வாங்கல்களால் அரசாங்கத்தில் இணைந்து கொண்டவர்கள்.

உதாரணத்துக்கு அரசாங்கத்தில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரசன்னம் ஏமாற்றுத்தனமானது. அவர்கள் சமூகத்தை பிரதிநிதித்துவம் செய்யவில்லை. அவர்கள் தமக்கிடையிலான ஒரு உடன்பாட்டின் மூலம் ஐக்கிய தேசியக் கட்சியில் போட்டியிட்டு வெற்றியீட்டி அரசுக்குள் இடம்பிடித்தவர்கள்.

ஸ்ரீ.ல.மு.கா இன் ஸ்தாபகத் தலைவர் தனது அரசியல் பலத்தைக் காட்டி சிங்கள அரசியல் கட்சிகளுடன் அரசை அமைப்பதற்கு அவர்களுக்கு வழங்கும் ஆதரவுக்கு பதிலாக பேரம் பேசி பதவிகளையும் ஏனைய வசதிகளையும் பெற்றுக் கொண்டார். அது தான் ஆரம்பம். இதன் மூலம் சிங்கள அரசியல் தலைமைகள் மறைமுகமாக அச்சுறுத்தப்பட்டு, கடைசியில் அவை கைவிடப்பட்டும் உள்ளன.

அஷ்ரப்பின் மறைவுக்குப் பின் கட்சிக்குள் தலைமைத்துவ நெருக்கடிகள் தோன்றி ஸ்ரீ.ல.மு.கா பல கூறுகளாக பிளவு பட்டு ஒவ்வொரு பிரிவும் தமக்கு தேவையானவர்களை ஆதரிக்கும் நிலை ஏற்பட்டது.

தவிர்க்க முடியாத வகையில் அந்தப் பிளவுகள் இன்னும் முடிவடையவில்லை. இன்று வரை அது தொடர்கின்றது. சமூகத்துக்கு அது கெட்ட பெயரையும் அழிவையுமே கொண்டு வருகின்றது. பெரும்பான்மை சமூகத்துடனான முஸ்லிம்களின் நல்லிணக்கத்துக்கும் அது பாதகமாகின்றது.

முஸ்லிம்கள் மு.கா மீது தற்போது பெரும் விரக்தி அடைந்துள்ளனர். மாகாண சபை தேர்தல்களின்போது பதுளை மாவட்டத்தில் அளிக்கப்பட்ட வாக்குகள் இதை நிரூபிக்கின்றன. அங்கு வாழும் சுமார் 50000 முஸ்லிம்களில் ஐயாயிரம் பேர் அளவில் மட்டுமே மு.கா.வுக்கு வாக்களித்திருந்தனர்.

மு.கா தோல்வியுற்ற மஹிந்த அணியின் ஒரு அங்கமாகவே இருந்தது. முஸ்லிம்களுக்கு எதிராக மஹிந்த தரப்பு இழைத்த அநீதிகள் எல்லாவற்றையும் மீறி இந்த நிலை நீடித்தது. 2015 ஜனவரி 8 தேர்தலின்போது அமைச்சர் றிஷாட் பதியுத்தீன் தலைமையிலான அணி மைத்திரிபால சிறிசேன முகாமில் இணைந்து கொண்டது. இதன் பின்னணியிலும் சில பேரம் பேசல்கள் உள்ளதாகவே கூறப்படுகின்றது. முஸ்லிம் சமூகம் மைத்திரிபால சிறிசேனவை ஆதரிக்க முடிவு செய்து விட்டது என்பதைத் தெரிந்து கொண்டே அவர்களும் இந்த முடிவுக்கு வந்தனர்.


கடந்த சில மாதங்களில் மு.காவின் உட்கட்சி மோதல்கள் உச்ச கட்டத்துக்கு வந்துள்ளன. முடிவற்ற இந்த உட்கட்சி மோதல்களை அடிப்படையாக வைத்துப் பார்க்கின்றபோது ஊழல் மோசடிகள் பற்றி வெட்கக்கேடான குற்றச்சாட்டுக்கள், பதவி மோகம், அதிகார மோகம், பதவிகளுக்கான ஓட்டம் என பல விடயங்கள் வெளிவருகின்றன. இவற்றை கேள்விப்படுகின்றபோது மு.காவினர் தம்மை முஸ்லிம்கள் என அழைத்துக் கொள்ளலாமா என்ற சந்தேகமே எழுகின்றது.


சுமார் 30 வருடங்களுக்கு முன் இஸ்லாம் ஒற்றுமை மற்றும் இன்னோரன்ன கோஷங்களை முன்வைத்து அரசியலுக்கு வந்த மு.கா சமூகத்துக்கே ஒரு பெரும் சோகமாக மாறியுள்ளது. அவர்கள் அரை டசனுக்கும் அதிக [illegible] றுமை பற்றிப் பேசுவதுதான் வேடிக்கை.

இதனால் சமூகம் ஒரு சீர்கேடான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. அங்கு தவிர்க்க முடியாத ஒரு தலைமைத்துவ நெருக்கடியும் இடைவெளியும் ஏற்பட்டுள்ளது. இன்று முஸ்லிம் சமூகம் அரசியல் ரீதியாக பல குழுக்களாக பிளவுபட்டுள்ளது. இது முஸ்லிம்களின் நிலையை ஒரு மோசமான கட்டத்துக்கு கொண்டு வந்துள்ளது. யாரும் எளிதாக அவர்களை தமது தேவைக்கு ஏற்ப கையாளலாம் என்ற அபாய நிலை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

முஸ்லிம்கள் மத்தியில் அதிகரித்து வரும் பிரச்சினைகளைக் கையாள்வதாகக் கூறிக் கொண்டு தமது சொந்த நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்ப முஸ்லிம் சமூகத்தை யாரும் வளைத்துப் போடலாம் என்ற நிலை ஏற்பட்டுள்ளது. சமூகத்தைக் காட்டிக் கொடுப்பவர்களும் சந்தர்ப்பவாதிகளும் இந்த நிலையைப் பயன்படுத்தி வருகின்றனர். இவர்களுள் ஒரு பிரிவினர் தமது வடிவமைப்புக்களை அமுல் செய்வதற்காக உலமா சபையின் சர்ச்சைக்குரிய தலைவர் மௌலவி றிஸ்வி அவர்களை சமூகத் தலைவராக காட்ட முனைகின்றனர்.

ஆனால் சமூகத்தின் முக்கிய உறுப்பினர்களின் கருத்துப்படி இது பேரழிவை ஏற்படுத்தக் கூடியது.





உதாரணத்துக்கு உலமா சபை தலைவரின் தலைமையின் கீழ் முஸ்லிம்களின் ஒரு தூதுக் குழு குறுகிய கால அறிவிப்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை அண்மையில் சந்தித்தது. முஸ்லிம்களின் சமூக மட்டப் பிரச்சினைகள் பற்றி கலந்துரையாடவே இந்தச் சந்திப்பு இடம்பெற்றதாகக் கூறப்படுகின்றது. இத்தகைய ஒரு தூதுக் குழுவை குறுகிய கால அழைப்பில் ஏற்பாடு செய்திருக்கக் கூடாது. இத்தகைய ஒரு சந்திப்புக்கு முன்னால் பல்வேறு மட்டங்களிலும் நிபுணத்துவம் வாய்ந்த பிரிவினரைச் சந்தித்து நிலைமைகளை பல்வேறு மட்டத்தில் ஆழமாக ஆராய்ந்திருக்க வேண்டும். அதன் மூலம் ஜனாதிபதியிடம் கையளிப்பதற்கான ஒரு விரிவான அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்க வேண்டும்.

இதன் விளைவாக இந்த சமூக மட்ட பிரதிநிதிகள் என்று சொல்லப்படுகின்றவர்கள் இங்கு பேசிய பல விடயங்கள் ஏற்கனவே விரிவாக ஆராயப்படாத விடயங்களாகவே உள்ளன. உதாரணத்துக்கு முஸ்லிம் பாடசாலைகள் பற்றி இங்கு பேசப்பட்ட விடயங்கள் முஸ்லிம் சமூகத்தின் கருத்துக்களாகப் பிரதிபலிக்கவில்லை. அவை ஒரு சில தனிநபர்களின் கருத்துக்களாகவே இருந்தன.

முன்னாள் கல்வி அமைச்சர் சுசில் பிரேம் ஜயந்தவால் தயாரிக்கப்பட்டதாகக் கூறப்படும் ஒரு கல்வி அறிக்கை பற்றி மௌலவி றிஸ்வி உரையாற்றியுள்ளார். ஆனாலும் அதில் குறிப்பிடப்பட்டுள்ள விதந்துரைகள் பற்றி அவர் அறிந்து வைத்திருக்கவில்லை என்றே பலரும் நம்புகின்றனர்.

கல்வி விவகாரங்கள் பற்றிய விடயங்களைக் கையாள்வது உலமா சபையின் வேலையா என்பதே இங்கு பலரும் எழுப்பும் கேள்வியாகும். முஸ்லிம் ஆசிரியர் வெற்றிடங்கள், வெறுப்புப் பிரசாரம், சட்ட ஏற்பாடுகள், தென் மாகாணத்தில் கல்விப் பிரச்சினை, சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அம்பாறையில் கட்டப்பட்ட 500 வீடுகள் கையளிக்கப்படாமை என இன்னும் பல விடயங்கள் பற்றியும் இங்கு பேசப்பட்டுள்ளது.

இதில் வெறுப்புணர்வுகளுக்கு எதிராக அமுல் செய்யக் கூடிய சட்டப் பிரமாணங்கள் பற்றிப் பேசிய நபரின் நம்பகத் தன்மையைப் பார்க்கின்றபோது ஜனாதிபதியை சந்தித்த இந்த ஒட்டுமொத்த பிரதிநிதிகள் குழுவினதும் நம்பகத்தன்மை கேள்விக்குறியாகின்றது. இவர்தான் முன்னாள் பாது காப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ வின் மிகவும் விசுவாசத்துக்குரிய சட்டத் தரணி. அவர் கோத்தாபயவுடன் இருந்த காலத்தில் இந்த சட்ட ஏற்பாடுகள் பற்றி ஒரு முறையேனும் வாய் திறக்கவில்லை.

இவற்றின் நடுவே பாதுகாப்பு ராஜாங்க அமைச்சருக்கும் சில தனிநபர்கள் கூடி ஒரு வரவேற்பை ஏற்பாடு செய்திருந்தனர். 2015 ஆகஸ்ட்டில் தற்போதைய அரசாங்கம் ஏற்படுத்தப்பட்டு சுமார் ஒரு வருட காலத்தின் பின் இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. சில சுயநல விரும்பிகளின் அரசியல் இலக்குகளை அடைந்து கொள்வதற்கான ஒரு முயற்சியாகவே இதை பலரும் பார்க்கின்றனர். இங்கும் உலமா சபை தலைவர்தான் முக்கிய பேச்சாளராகப் பங்கேற்றுள்ளார்.

இந்த நாட்டின் முஸ்லிம் சமூகத்தின் அரசியல் வங்குரோத்து நிலையாகவே இதைப் பார்க்க வேண்டியுள்ளது.

அரசியலில் உலமா சபை தலைமைத்துவத்தின் ஈடுபாடு, ஊழல் மோசடிகளுக்கு பெயர் போன அரசியல்வாதிகளுடனான ஈடுபாடு, முறைகேடான அரசியல் கொடுக்கல் வாங்கல்கள், பேரம் பேசல்கள் என்பன முஸ்லிம் சமூகத்தின் சகல பிரிவினரும் கவனம் செலுத்த வேண்டிய முக்கிய பிரச்சினைகளாக உள்ளன. முஸ்லிம் சமூகத்தின் இன்றைய நிலைமையில் ஆழமான அக்கறை கொண்டுள்ளவர்கள் இந்த விடயங்கள் பற்றியே சிந்திக்கின்றனர்.

உலமா சபை ஒரு தனியார் வரையறுக்கப்பட்ட கம்பனி அல்ல. அது ஒரு சமய ரீதியான அமைப்பு. சமயம் சார்ந்த விடயங்களில் மக்களை வழிநடத்துவதே அதன் தலையாய கடமை. தன்னை மற்றவர்கள் தமது தேவைக்கு ஏற்ப கையாள உலமா சபை விரும்பியோ விரும்பாமலோ அல்லது தெரிந்தோ தெரியாமலோ இடமளிக்கின்றது. இதனால் முஸ்லிம் அரசியல்வாதிகள் மட்டும் அல்ல முஸ்லிம் அல்லாத அரசியல்வாதிகள் கூட தமது சொந்த தேவைகளை உலமா சபை மூலம் நிறைவேற்றிக் கொள்ளும் நிலை ஏற்பட்டுள்ளது.

உலமா சபை ஊழல், வர்த்தக மயமாக்கல், இனவாதம், குற்றங்கள் நிறைந்த அரசியல் என்பனவற்றில் இருந்து விலகி இருக்க வேண்டும் என்பதே பலரதும் வற்புறுத்தலாக உள்ளது. இருப்பினும் உலமா சபை அதன் வரையறைகளைத் தாண்டி அரசியலுக்குள்ளும் ஏனைய விடயங்களிலும் பிரவேசித்துள்ளது.

புலிகளுடனான யுத்தத்தின்போது இழைக்கப்பட்டதாகக் கூறப்படும் யுத்தக் குற்றங்கள் பற்றிய இலங்கை அரசின் மீதான குற்றச்சாட்டுக்கள் தொடர்பான மிகவும் உணர்வுபூர்வமான விடயத்தில் இலங்கை அரசுக்கு வக்காளத்து வாங்குவதற்காக உலமா சபை ஜெனீவாவுக்கு மேற்கொண்ட விஜயம் மிகவும் நாசகாரமான ஒரு அரசியல் ஈடுபாடு கொண்ட விஜயம் என்பதை பலரும் சுட்டிக் காட்டி உள்ளனர்.

ஒரு மார்க்க ரீதியான அமைப்பு என்ற வகையில் உலமா சபை இந்த விடயத்தில் தலையிட்டிருக்கக் கூடாது. தமிழ் சமூகத்தின் மத்தியில் முஸ்லிம்கள் பற்றிய வெறுப்புணர்வையும் கசப்புணர்வையும் இது அதிகரித்தது. முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் வேண்டுகோளின் பேரில் இந்த விஜயம் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படுகின்றது. ஆனால் அதற்கு என்ன காரணம் என்பதை உலமா சபை தலைவர் மட்டுமே நன்கு அறிவார்.

மறுபுறத்தில் யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் என்ன நடந்தது என்பதை உலமா சபை எப்படி அறியும்? என்ற (பக். 14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஆசியாவின் ஆச்சரியம் தொடர்கின்றது!

இலங்கையின் கடன் தொகையை தனது பத்தாண்டு கால ஆட்சியில் மூன்று மடங்காகப் பெருக்கிய மஹிந்த ராஜபக்ஷ, இலங்கையை ''ஆசியாவின் அதிசயம்'' என்று முழங்கினார். முழக்கங்களால் ஒரு நாடு முன்னேறிய வரலாறு இல்லை.

1960 களில் இன்றைய சிங்கப்பூர் போலிருந்த இலங்கை இப்போது சிப்பாவேயாக மாறி வருகின்றது. 1960 களில் எமக்கு வாக்களித்தால் சிங்கப்பூரை இலங்கையாக மாற்றுவோம் என்று தேர்தல் மேடைகளில் வாக்குறுதியளித்தனர் சிங்கப்பூர் அரசியல்வாதிகள். மக்கள் வாக்களித்தனர். அரசாங்கம் வாக்குறுதியை நிறைவேற்றியது.

60 களுக்குப் பிந்திய இலங்கையின் ஒவ்வொரு தசாப்தத்திலும் இலங்கையின் பொருளாதாரமும் அரசியல் ஸ்திரமும் சிறிது சிறிதாகச் சிதைந்து சின்னா பின்னமாகிப் போனது.

வகைதொகையற்ற வெளிநாட்டுக் கடன்களை அதிகூடிய வட்டி வீதத்தில் பெற்று பாதைகளையும் பாலங்களையும் அபிவிருத்தி செய்து விடுவதால் நாடு முன்னேறி விட்டது என்று அர்த்தமல்ல. அதிகாரத்தில் இருக்கும்வரை வெளிநாடுகளிலிருந்து கடன் பெறுவதும், வெளிநாடுகளுக்கு உள்ளூர் வளங்களை அடகு வைப்பதும் மாறி மாறி வந்த அரசாங்கங்களின் ஒரே வகையான அரசியல் கைங்கரியமாக இருந்து வந்துள்ளன.

இலங்கையின் நிலங்களை 100 ஆண்டுகளுக்கு வெளிநாட்டுக் கம்பனிகளுக்கு குத்தகைக்கு விடும் அரசியல்வாதிகள் 6 வருடங்களில் மிகப் பெரும் இலாப முதலீட்டோடு வீடு சென்று விடுவர். சுமைகளையும் வலிகளையும் தாங்க வேண்டியவர்கள் மக்கள்தான். இதுதான் இலங்கையில் நடக்கும் பெரிய அதிசயம்.

ஒரு குறிப்பிட்ட அரசியல்வாதி அதிகாரத்தைப் பிரயோகித்து, தான் நினைக்கும் மாத்திரத்தில் எந்தவொரு இடத்தையும் வெளிநாட்டவருக்கு விற்று அல்லது குத்தகைக்குக் கொடுத்து பணம் பெற்ற அதிசயம் கடந்த பத்தாண்டுகளில் சர்வசாதாரணமாகவே இங்கு இடம்பெற்றது.

இலங்கையின் கனிய வளங்கள், அதன் கேந்திர முக்கியம் வாய்ந்த அமைவிடம், இயற்கை வளங்கள், இதுவரை பயன்படுத்தப்படாத மூல வளங்கள் என்பவற்றை முறையாகக் கணிப்பிட்டால் அரசியல் தூரநோக்கும் திட்டமிடலும் பிரஜைகளின் நலன் காக்கும் உண்மையான தேச பக்தியும் அரசியல் தலைவர்களுக்கு இல்லாமல் போனமையே நமது பின்னடைவுக்குக் காரணம் என்பதை வெகுவாகப் புரிந்துகொள்ளலாம்.





நமது தேசத்திற்கு நிலையானதொரு பொருளாதாரக் கொள்கை இல்லை. ஒரு நீடித்த கல்விக் கொள்கை இல்லை. சாதகமானதோர் வெளிநாட்டுக் கொள்கையும் இல்லை. கொள்கையற்ற கூடாரங்களாகவே அரசியல் கட்சிகள் இயங்குகின்றன. கடன் தரும் நாடுகளின் பக்கம் சாய்வதும் கடனோடு சேர்த்து திணிக்கப்படும் நிபந்தனைகளுக்கு அடிபணியும் கொத்தடிமைத் தனத்திற்கு ஆளாகின்றோம்.

நமக்கென்று ஒரு பொருளாதாரக் கொள்கை இல்லாமையினால் வரவு-செலவுத் திட்டத்தின் மூலம் ஒவ்வொரு ஆண்டையும் ஒப்பேற்றுவதிலேயே முனைப்பாக உள்ளோம். இத்தனைக்கும் பொருளாதாரத் திட்டமிடல் கொள்கை வகுப்பு அமைச்சொன்றும் நூற்றுக்கணக்கான ஊழியர்களோடு இயங்குகின்றது.

ஒரு நாட்டின் மத்திய வங்கி ஆளுனராக ஒரு பொருளியல் நிபுணர் (Economist) இருக்க வேண்டும். ஏனெனில் நாட்டின் பொருளாதார நடவடிக்கைகளை அவரே திட்டமிட வேண்டும். இலங்கையில் ஆளுநர்களாக வெறும் கணக்காளர்களே (Accountant) அமர்த்தப்படுவது ஆசியாவின் இன்னொரு அதிசயமாகும்.

இலங்கையின் மூல வளங்களை உச்சளவில் பயன்படுத்துவதற்கான கொள்கை வகுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. இலங்கையின் தேவைக்கு ஏற்ப உற்பத்தித்துறை விரிவுபடுத்தப்படவில்லை. வெளிநாட்டுக் கம்பனிகளே மூலப் பொருட்கள் மீது ஆதிக்கம் கொண்டுள்ளன. இதனால், அவை எமக்கே உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்து மீதியை ஏற்றுமதி செய்கின்றன. வாழ்க்கைச் செலவீனம் தூக்கி நிறுத்த முடியாத நிலையில் தள்ளாடிக் கொண்டிருப்பதற்கான காரணம் என்ன? உற்பத்தித் துறையில் உள்ள வீழ்ச்சியே. ஒரு விவசாய நாடு என்ற வகையில் குறைந்தபட்சம் விவசாயத்திலேனும் தன்னிறைவு அடைந்துள்ளோமா? நடுத்தரமான அரிசி கிலோ ஒன்றிற்கு குறைந்தது 120 ரூபாவை ஒதுக்க வேண்டியுள்ளது.

அரிசி, கோழி, இறைச்சி, மீன், முட்டை போன்ற பிரதான உணவுப் பொருட்களின் விலை கடந்த பத்தாண்டில் வேகமாக அதிகரித்துள்ளது. இலங்கையில் மிகக் குறைந்த விலையில் தாராளமாக உண்பதற்கான பழ வகைகளோ தானிய வகைகளோ இல்லை. தமிழகத்துடன் ஒப்பிடும்போது உணவுப் பொருட்களுக்கான வாழ்க்கைச் செலவீனம் நமது நாட்டில் பல மடங்கு எகிறிப் பாய்வதைப் பார்த்து புருவம் உயர்த்த வேண்டும். இதுதான் ஆசியாவின் பெரிய ஆச்சரியம்.

பாகிஸ்தானிலும் இந்தியாவிலுமிருந்து 'பாஸ்மதி' அரசியை இறக்குமதி செய்கின்றோம். இவ்விரு நாடுகளின் அதே காலநிலையைக் கொண்ட இலங்கையில் இது போன்ற அரிசியை உற்பத்தி செய்வதிலிருந்து ஏன் ஒதுங்கியிருக்கின்றோம் என்ற கேள்வி ஆச்சரியமாய் எழுகின்றது.

இன்னும் பம்பாய் வெங்காயத்தையும் உருளைக் கிழங்கையும் இறக்குமதி செய்து, நள்ளிரவில் நிதியமைச்சு அதன் இறக்குமதித் தீர்வையை உயர்த்துகின்றது. உணவுப் பொருட்களுக்காக வருடாந்தம் பல பில்லியன் ரூபாய்களை செலவு செய்கின்றோம். இத்தனைக்கும் விவசாய நாடு என்று எம்மை அழைக்கின்றோம். இதுதான் ஆசியாவின் மிகப் பெரிய அதிசயம்.

இலங்கை கடலால் சூழப்பட்ட ஒரு தீவு. மீன் பிடிப்பதற்குத் தாராளமாக வசதி கொண்டு நாடு. ஆனால், இலங்கைக் கடலில் வெளிநாட்டவர்கள் பிடிக்கும் மீனின் அளவோடு உள்ளூர் மீனவர்களின் அளவை ஒப்பிட்டால் நைலுக்கும் மகாவலிக்கும் உள்ள வித்தியாசம் துலங்கும்.

தரமான, ருசியான பாறை போன்ற மீன் உள்ளூர் சந்தையில் 1000 முதல் 1200 ரூபாய் வரை விற்கப்படுகின்றது. இதேவேளை, சீனக் கம்பனி வரையறுக்கப்பட்ட மணித்தியாலங்களில் பல மில்லியன் டொன் மீனை தமது தொழில் நுணுக்கங்களைக் கையாண்டு இலங்கைக் கடலில் அள்ளுகின்றார்கள். இலங்கையில் வாழும் மக்களுக்கு ஆகக் குறைந்தது கடல் மீன்களையேனும் குறைந்த விலையில் உண்பதற்கான வாய்ப்பு இல்லை. இதுதான் ஆசியாவின் மிகப் பெரிய அதிசயம்.

முற்றிலும் கடலால் சூழப்பட்ட நமது நாட்டு மக்கள் மீன் பிடிப்பதற்கு தாராளமான வசதி கொண்டிருக்கும் நிலையில், இன்னும் சிலி மற்றும் ஆஜன்டீனா போன்ற நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் டப்பாவில் அடைக்கப்பட்ட (Caned Fish) மீனை உண்கிறார்கள் என்பதுதான் ஆசியாவின் பெரிய அதிசயம்.

ஹம்பாந்தோட்டையில் கறக்கப்படும் பால் நுவரெலியாவிற்கு லொறிகளில் ஏற்றிச் செல்லப்பட்டு அங்குள்ள தொழிலகங்களில் பால் மாவாக மாற்றப்பட்டு, மீளவும் ஹம்பாந்தோட்டையில் வாழும் பாமர மக்களுக்கே அவர்களின் பால், மாவாக பெரும் விலைக்கு விநியோகிக்கப்படுவது எவ்வளவு பெரிய வேடிக்கை. இதற்காக செலவுசெய்யப்பட்ட பணம் எவ்வளவு அனாவசியம் என்பதை எப்பொழுதேனும் நாம் கணிப்பிட்டிருக்கிறோமா? இப்படி ஆச்சரியத்திற்கு மேல் ஆச்சரியங்களால் ஆடிப் போயிருக்கும் நாடு நம்முடையது.

அரசியல்வாதிகளின் அசட்டைத் தனத்தால் அதல பாதாளத்தில் வீழ்ந்து கொண்டிருக்கும் பொருளாதாரம் ஒரு பக்கம். ஊழல் பெருச்சாளிகளின் பகற் கொள்ளை இன்னொரு பக்கம். இப்படி பின்னடைவின் எல்லாப் பள்ளத்தாக்கிலும் நாம் வீழ்ந்து கிடக்கின்றோம்.

ஒரு கொள்கை சார் கருத்தியல் மாற்றத்தின் மூலமே (Paradigm Shift) இந்த ஆச்சரியங்களின் புதிர்களை நாம் அவிழ்க்கலாம். குடிமக்களின் மனங்களில் முதலில் இந்த மாற்றம் வேண்டும். இந்த மாற்றத்திற்கு நாம் தயாராக இருக்கிறோமா?

# உயர் கல்வி நிறுவனங்களும் பகிடிவதையும்



இலங்கையில் கடந்த மூன்று மாதங்களில் பல்கலைக்கழக மாணவர்கள் சிலர் பகிடிவதை தொடர்பாக கைதுசெய்யப்பட்டு, நீதிமன்ற விசாரணையை எதிர்கொண்டுள்ளனர். குற்றம் பல்கலைக்கழகத்தில் நிகழ்ந்தாலும் குற்றவாளிகள் தண்டிக்கப்படுவர் என காவல்துறையினர் கடுமையாக எச்சரித்துள்ளனர்.

களனி பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த 5 மாணவர்கள் ஒரு மாணவியை மோசமாக சொல் ரீதியிலும் செயல் ரீதியிலும் பகிடிவதைக்கு உட்படுத்தினர் என்ற குற்றச்சாட்டின் பெயரிலேயே கைதுசெய்யப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளனர். எனினும், நீதிமன்ற விசாரணைகள் முடியவில்லை. உயர் கல்வி அமைச்சும் பகிடிவதை தொடர்பாக கடும் நடவடிக்கைகளை மேற்கொள்ளப் போவதாக எச்சரித்துள்ளது.

கடந்த கால இலங்கையில் பல்கலைக்கழகங்களிலும் உயர் கல்வி நிறுவனங்களிலும் இடம்பெற்று வந்த பகிடிவதைகளுக்கு ஒரு நீண்ட வரலாறு உள்ளது. 1975 இல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் விவசாய பீட மாணவி ஒருவர் ராமநாதன் கட்டடத்தின் 2 ஆம் மாடியிலிருந்து தள்ளிவிடப்பட்டதனால் பாரிசவாதத்திற்கு உட்பட்டார். 1993 இல் ருஹுனு பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த சமிந்த புன்சி ஹேவா எனப்படும் மாணவன் பகிடிவதையின் காரணமாக உயிரிழந்தான்.

1997 இல் பேராதனைப் பல்கலைக்கழக எந்திரவியல் பீட தமிழ் மாணவன் 21 வயதான வரப் பிரகாஷ் கொல்லப்பட்ட சம்பவம் பேரதிர்ச்சியை ஏற்படுத்தியது. இதே ஆண்டில் ருஹுனு பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த மாணவி பகிடிவதை தாங்க முடியாமல் தற்கொலை செய்து கொண்டார். அதே ஆண்டில் அம்பாறையிலுள்ள ஹாடி தொழில்நுட்பக் கல்லூரியில் நடந்த பகிடிவதை காரணமாக கெலும் திஸார எனப்படும் மாணவன் உயிரிழந்தான்.

2002 இல் ஜயவர்தனபுர பல்கலைக்கழக 3 ஆம் வருட மாணவன் சமந்த விதானகே பகிடிவதையினால் பாரிசவாதத்திற்கு உட்பட்டார். இவ்வாறு பல்கலைக்கழக பகிடிவதையினால் மரணித்த, பாரிசவாதத்திற்கு உட்பட்ட, தற்கொலை செய்துகொண்ட மாணவ மாணவிகளுக்கு ஒரு நீண்ட பட்டியல் உள்ளது.

பல்கலைக்கழக பகிடிவதை பிரித்தானிய காலனித்துவ காலத்திலேயே இலங்கையில் அறிமுகமாகியுள்ளது. ஐவர் ஜெனிங்ஸ் என்பவரைத் தலைவராகக் கொண்ட பேராதனைப் பல்கலைக்கழகம் உருவாக்கப்பட முன்னரேயே இலங்கையில் இயங்கி வந்த ஆங்கிலேயரினால் ஸ்தாபிக்கப்பட்ட கல்விக் கல்லூரிகளில் இந்நடைமுறை இருந்து வந்துள்ளது.

பிரித்தானிய இராணுவ வீரர்கள் இராணுவ முகாம்களில் கலந்துகொண்ட போது பகிடிவதைக்கு உட்படுத்தப்பட்டனர். பின்னர் அவர்கள் கல்விக் கல்லூரிகளில் இந்நடைமுறையை அறிமுகம் செய்தனர். சிரேஷ்ட மாணவர்கள் புதிதாக நுழையும் மாணவர்களை நான்கு தொடக்கம் ஆறு மாதங்கள் பல்வேறு வகையில் இம்சைப்படுத்துவதே பகிடிவதை எனப்படுகிறது.

தமிழில் உள்ள இச்சொற்கள் மிகவும் முரண்பாடானவை. ஏனெனில், எந்த உயர் கல்வி நிறுவனத்திலும் 'பகிடி' இல்லை. 'வதை' மாத்திரமே உள்ளது. புதிய மாணவர்களின் ஆடைகளைக் களைதல், அல்லது சேதப்படுத்தல், சொல் ரீதியாக இம்சித்தல், உடல் ரீதியாக நோவினை செய்தல், பாலியல் ரீதியில் வதை செய்தல் என பல்வேறு வடிவங்களில் இது நிலவுகின்றது. பகிடிவதைக்குப் பின்னால் மோசமான சமூக உளவியலும் அதிகாரக் கட்டமைப்பும் செயல்படுகின்றது. மாணவர்கள் கட்சி அரசியல் மயமாக்கப்பட்டிருப்பதும் குழுவாத அடிப்படையில் செயல்படுவதும் இதற்குப் பங்களிக்கின்றன. சமீபத்திய சம்பவங்கள் இதனையே உணர்த்துகின்றன.

இலங்கையில் பகிடிவதையைக் கட்டுப்படுத்துவதற்கு இரண்டு வகையான சட்ட ஏற்பாடுகள் உள்ளபோதும் அவை எதிர்பார்த்த விளைவைத் தரவில்லை. 1978 ஆம் ஆண்டின் அரசியலமைப்புச் சட்டத்தின் 176 ஆம் பிரிவு அடிப்படை மனித உரிமை மீறல் குறித்து பாதுகாப்பளிக்கின்றது. இது பல்கலைக்கழக சூழலிலும் பிரயோகிக்கப்படக் கூடியது. பல்கலைக்கழக சூழலில் தமது அடிப்படை உரிமைகள் சிரேஷ்ட மாணவர்களால் மீறப்படும்போது அதற்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்து, தகுந்த நிவாரணம் பெறுவதற்கான வாய்ப்பை அரசியல் சட்டம் கொண்டுள்ளது. எனினும், நடைமுறையில் அத்தகைய வழக்குகள் எதுவும் பதிவுசெய்யப்பட்டதாகத் தெரியவில்லை. காரணம் பல.

அவ்வாறான வழக்குத் தாக்கல்களின் பின்னர் பல்கலைக்கழகங்களில் தொடர்ந்தும் கற்பது பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு முன்னாலுள்ள பெரும் சவாலாகும். மட்டுமன்றி, வறுமைப்பட்ட மாணவர்கள் உச்ச நீதிமன்றத்தை நாடிச் செல்வது நடைமுறையில் சாத்தியமற்றது.

1997 இல் நடந்த தொடரான பல பகிடிவதைச் சம்பவங்களை அடுத்து அப்போதிருந்த அரசாங்கம் உஷாரடைந்தது. 1998 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்கச் சட்டம் இதன் விளைவாகும். இலங்கையில் கல்வி நிறுவனங்களில் பகிடிவதைகளையும் ஏனைய வன்முறைகளையும் தடுப்பதற்கான சட்டம், அவ்வாண்டில் இலங்கைப் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

ஆயினும், இந்தச் சட்டத்தின் படியேனும் எவரும் கடினமாகத் தண்டிக்கப்பட்ட வரலாறு இல்லை. சட்டத்திலுள்ள இந்த நெகிழ்ச்சியும் ஓட்டைகளும் பல்கலைக்கழக சூழலில் பகிடிவதைக் குற்றத்தில் ஈடுபடும் மாணவர்களை அதிலிருந்து தடுப்பதற்குத் தவறிவிட்டன. தாம் அனுபவித்த பகிடிவதையை தமது கனிஷ்ட மாணவர்கள் மீது திணிக்க வேண்டும் என்ற வெறித் தனம் பகிடிவதையை நீடிக்கச் செய்கின்றது.

கடும் சட்ட அமுலாக்கத்தின் மூலமே பகிடி வதையை ஒழிக்க முடியும். அதே வேளை, கல்வியின் விழுமியங்கள் குறித்து பாடசாலைகளிலிருந்தே மாணவர்கள் விழிப்பூட்டப்பட்டு, முறையாக வளர்க்கப்பட வேண்டும். அதன் மூலமே பகிடிவதைகளை ஒழிக்கலாம். இது இரவோடு இரவாக அவசரமாக சாத்தியப்படப் போவதுமில்லை. படிமுறையான செயற் திட்டங்களின் மூலம் கவனமான வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படும்போதே இதனை ஒழிக்கலாம். இலங்கையில் பல்கலைக்கழக மாணவர்களின் மனோநிலையில் மட்டுமன்றி கல்வியியலாளர்களின் மனோநிலையிலும் மாற்றம் ஏற்பட வேண்டும். அதன் மூலமே பகிடிவதை எனும் சாபக்கேட்டை இலங்கைப் பல்கலைக்கழகங்களிலிருந்து தூக்கி வீசலாம். கல்வியமைச்சு இது குறித்து சீரியஸாகவும் தொடர்ச்சியாகவும் செயல்பட வேண்டியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடுவது நலம்



இஸ்மாயில் பக்கீர் மக்கார்

## துருக்கியை உதாரணமாகக் கொள்ள வேண்டும்

கடந்த ஒகஸ்ட் 14ம் திகதி துருக்கிக்கான சுவீடன் தூதுவர் 'மாக்ரட் வோல்ஸ் ட்ரோம்' தனது டுவிட்டர் பக்கத்தில் 15 வயதுக்கு குறைவான பிள்ளைகளுக்கு பாலியல் உறவு கொள்ள அனுமதி வழங்கியிருப்பதனை துருக்கி வாபஸ் பெற வேண்டும், பிள்ளைகளுக்கு பாதுகாப்பு முக்கியம் என்பதாகக் குறிப்பிட்டிருந்தார். இது பொய்யான கருத்து, அப்படியொரு நிலை துருக்கியில் இல்லை என்றும் துருக்கியின் சுயரூபத்தை சிதைப்பதற்காகவே இதுபோன்ற கருத்துகள் வெளியிடுப்படுகின்றதாகவும் துருக்கி அதற்கு பதிலளித்திருந்தது.

ஒகஸ்ட் 15ம் திகதி சுவீடனிலுள்ள துருக்கிக்கான தூதுவர் 'மொஹமட் சின்சென்' தெளிவாகவே நீங்கள் தவறான தகவல்களைக் கொண்டுள்ளீர்கள். அது போன்றதொரு மடமையான நிலையொன்று துருக்கியில் இல்லை. தயவு செய்து நீங்கள் உங்களது நிலைப்பாட்டை மாற்றிக் கொள்ளுங்கள் என்பதாக தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவு செய்திருந்தார்.

ஒஸ்ட்ரியா நாட்டின் சான்ஸலர் 'கிறிஸ்டியன் கேர்ன்' துருக்கியை ஐரோப்பிய ஒன்றியத்திற்குள் இணைத்துக் கொள்வதற்கு நடாத்தப்பட்டு வருகின்ற பேச்சுவார்த்தை களை முடிவுக்கு கொண்டு வர வேண்டும் எனக் கூறியிருந்தார். அதற்கு துருக்கி வெளிவிவகார அமைச்சர் 'மொஹமட் கவுசோ ஒக்லு' இன்று ஒஸ்ட்ரியா இனவாதத்தின் தலைநகராக (Capital of Radical Racialism) மாறிப்போயுள்ளது என்பதாகவும் ஒஸ்ட்ரியா அரசாங்கம் தனது நாட்டை மீளத் திரும்பிப் பார்க்க வேண்டும் என்றும் மனித உரிமைகளின் பெறுமதியை சிதைக்கும் கொள்கையை பின்பற்றி வருவதாகவும் அங்கு இனவாதமே துளிர் விட்டிருப்பதாகவும் குறிப்பிட்டிருந்தார்.

இதற்குப் பதிலளிக்கும் முகமாக ஒஸ்ட்ரிய வெளிவிவகார அமைச்சர், துருக்கி தங்களுக்குகளையும் செயற்பாடு களையும் நவீனமயப்படுத்திக் கொள்ள வேண்டும் என்ப தாகக் குறிப்பிட்டிருந்தார். அதற்கு துருக்கி, ஐரோப்பா விலுள்ள அகதிகள் வெளிச் செல்லாமல் இருப்பதற்கு ஐரோப்பா எதிர்பார்க்கின்ற எல்லாவற்றையும் துருக்கி செய்துள்ளது. ஆனால் ஐரோப்பிய ஒன்றியத்தில் உறுப்புரிமை பெறுவதற்குரிய பேச்சுவார்த்தைகள் இன்னும் முறையாக முன்னெடுக்கப்படவில்லை என்றும் ஒரு தரப்பு மாத்திரம் தனது பொறுப்பை செய்வதில் அர்த்தமில்லை. இரு தரப்பும் தங்களது பொறுப்புக்களை செய்ய வேண்டும் எனத் தெரிவித்திருந்தது.

நான் சொல்வது என்னவெனில், துருக்கிக்கும் மேற்கு நாடுகளுக்குமிடையிலான கருத்து மோதல்களுக்கு ஒரு வரலாறு உள்ளது. உஸ்மானிய பேரரசு சிதைவுற்றதன் பின்னர் துருக்கியின் ஆட்சியாளராக வந்த முஸ்தபா கமாலின் ஆட்சிக் காலத்தில் மிகவும் சூசகமாக திட்டமிட்ட அமைப் பில் இஸ்லாமிய உரிமைகளை துருக்கியில் கருவருக்கப் பட்டன. ஆண்கள் தலைப்பாகை அணிவது மற்றும் பெண்கள் ஹிஜாப் அணிவது போன்ற மார்க்க விடயங்கள் தடைசெய்யப்பட்டன. துருக்கி யாப்பில் அரச மதமென் றாகக் குறிப்பிடப்பட்டிருந்த இஸ்லாம் அதிலிருந்து நீக்கப் பட்டது. அறபு எழுத்தணி லத்தீன் எழுத்தணியாக மாற்றப் பட்டது. அறபு மொழியில் அதான் கூறுவது நிறுத்தப்பட்டது.

1950 இல் ஜனநாயக ரீதியாக ஆட்சிக்கு வந்த அத்னான் மன்தரீஸ் பல மாற்றங்களை நாட்டில் ஏற்படுத்தி வந்தார். ஆன போதிலும் 1960களில் இராணுவப் புரட்சியில் அவர் பதவி கவிழ்க்கப்பட்டார். 1996 இல் ஆட்சிக்கு வந்த அர்பகானின் ஆட்சியும் கவிழ்க்கப்பட்டது. தற்பொழுது அர்துகான் துருக்கி இழந்த உரிமைகளை படிப்படியாக மீட்டு வருகிறார்.

இது மேற்கு நாடுகளுக்கு ஜீரணிப்பதில்லை. மேற்கு ஊடகங்கள் அவரை ஒரு ஏகாதிபத்தியவாதியாக சித்தரிக் கிறது. மேற்கு நாடுகளின் அனுசரணையில் அண்மையில் துருக்கியில் இராணுவப் புரட்சியொன்றும் அரங்கேற்றப்பட்டு அது தோல்வியில் முடிவடைந்தது.

இன்று துருக்கியில் இடம்பெற்று வருகின்ற நிலவரங்களை தனியாக ஆராய முடியாது. வரலாறு நெடுகிலுமாக துருக்கிக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுள்ள இன்னல்களுக்கூடாகவே நாம் துருக்கியின் இன்றைய நிலைமைகளை ஆராய்ந்து படிப்பினை பெற வேண்டும். இன்றைய சமுதாயத்தினருக்கு துருக்கி ஒரு சிறந்த படிப்பினையாக உள்ளது.

வேறுபாடுகளுக்கு இடமளிக்கின்ற மனோநிலைக்குப் பதிலாக முழு உலகிற்கும் ஒரு கலாசாரம், ஓர் அரசியல் முறை, ஒரே வலையமைப்பு என்கின்ற இடத்தையே மேற்குலகம் அடைய பார்க்கிறது. இங்கு ஜனநாயகம் இல்லை என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். ஜனநாயகத்தின் பெயரால் ஏகாதிபத்தியமே முன்னகர்த்தப்படுகிறது.

எனவே இன்றைய சந்ததியினர் தங்களது பல்வகைமை களையும் உரிமைகளையும் பாதுகாத்து ஜனநாயக உலகொன்றை ஏற்படுத்துவதற்கு வரலாற்றிலிருந்தும் நிகழ்கால சம்பவங்களிலிருந்தும் பாடம் கற்றுக்கொள்ள வேண்டும்.



# "முஸ்லிம்களும் சக வாழ்வுக்கான எதிர்பார்ப்பும்"

**தொகுப்பு: மிப்றாஷ் முஸ்தபா**

## உலக இஸ்லாமிய மாநாட்டின் இறுதித் தீர்மானங்கள்

றாபிததுல் ஆலம் அல் இஸ்லாமி (Muslim World League) அமைப்பினால் ஏற்பாடு செய் யப்பட்ட உலக இஸ்லாமிய மாநாடு "முஸ்லிம் களும் சக வாழ்வுக்கான எதிர்பார்ப்பும்" என்ற தொனிப் பொருளில் ஒகஸ்ட் 11, 12 ஆம் திகதிகளில் கொழும்பில் இடம்பெற்றது.

மாநாட்டை தொடக்கி வைத்து உரையாற்றிய பிரதமர் ரணில் விக்ரமசிங்க, எமது அரசாங்கம் இலங்கையில் வாழ்கின்ற சமூகங்களிடையே சமாதானத்தையும் அமைதியையும் ஏற்படுத்த பல்வேறு செயற்திட்டங்களை முன்னெடுத்து வருவதோடு சமாதானத்தை நிலைநாட்ட மதத் தலைவர்களோடு இணைந்து செயற்படவும் தயாராக இருப்பதாகக் குறிப்பிட்டார்.

தொடர்ந்து உரையாற்றிய றாபிததுல் ஆலம் அல் இஸ்லாமியின் பொதுச் செயலாளர் கலாநிதி அப்துல்லாஹ் பின் அப்துல் முஹ்ஸின் அத்துர்கி, "பயங்கரவாதம் மிக மோசமான வழிமுறை என்றும் பயங்கரவாதத்தை தூண்டக் கூடிய பிரச்சினைகளை கையாள்வதில் சர்வ தேசத்தின் தவறான அணுகுமுறைகள்தான் பயங்கரவாதம் உருவாகுவதற்கான காரணம்" எனவும் வலியுறுத்தினார்.

தெற்காசிய நாடுகளில் வாழ்கின்ற முஸ் லிம்கள் ஏனைய சமூகங்களோடு சக வாழ் வோடு வாழ்வதற்கான சாத்தியப்பாடுகள் தொடர்பில் இந்த மாநாட்டில் விரிவாக ஆராயப்பட்டதோடு, இந்தப் பிராந்தியத்தில் முஸ்லிம்கள் எதிர்கொள்கின்ற அச்சுறுத்தல்கள் தொடர்பிலும் விசேட கவனம் செலுத்தப்பட் டது. இந்த மாநாட்டில் வலியுறுத்தப்பட்ட சில முக்கிய அம்சங்கள்:

- மனிதர்கள் அனைவரும் ஆதம் (அலை) அவர்களின் சந்ததிகள் என்ற உண்மையை வலியுறுத்தல். அல்லாஹ் தனது திருமறையிலே பின்வருமாறு குறிப்பிடுகின்றான்: "அவன்தான் உங்களை பூமியில் முன் சென்றவர்களின் இடத்தில் வைத்தான். அன்றி, உங்களில் சிலரை மற்றவர்களை விட அந்தஸ்தில் உயர்த்தியும் இருக்கிறான். (இதன் மூலம்) உங்களுக்குக் கொடுத்தவற்றில் (நீங்கள் எவ்வாறு நடந்து கொள்கின்றீர்கள் என்று) உங்களைச் சோதிக் கிறான்" (அல் அன்ஆம் - 165)

அந்தவகையில், மனிதர்கள் அனைவரும் ஆதம் (அலை) அவர்களின் சந்ததிகள் என்ற அடிப்படையில் அனைத்து மதங்களும் மக் களை சமாதானம், சமூக நல்லிணக்கத்தை நோக்கியே அழைப்பதோடு, இனவாதம், கொள்கை வெறி என்பவற்றை அடியோடு நிராகரிக்கின்றது.

- அரசியல் முரண்பாடுகள் மற்றும் ஒரு இனக் குழு சார்ந்த பிரச்சினைகளின் விளை வாக உருவாகும் பயங்கரவாதம் மனிதாபி மானத்தை வேரறுக்கும் பாரிய குற்றமாகும். எனவே முஸ்லிம்கள் பயங்கரவாத செயற்பாடு களை முற்று முழுதாக நிராகரிப்பதுடன் பூமி யில் அநியை ஏற்படுத்தும் எத்தகைய செயற் பாடுகளையும் அவர்கள் ஏற்றுக்கொள்வதில்லை.

- இஸ்லாம் மனித வர்க்கத்தைப் படைத்த இறைவனை வணங்குமாறே முழு மனிதர் களையும் பணிக்கின்றது. மேலும் அது சமா தானத்தை வலுப்படுத்தக் கூடிய உன்னதப் பண்புகளை மனித உள்ளங்களில் விதைக்கிறது. ஏனெனில் இஸ்லாத்தில் முஸ்லிம்களுக்கும் முஸ்லிமல்லாதவர்களுக்கும் இடையிலான தொடர்பு சமாதானம், சமூக நீதி மற்றும் புரிந்துணர்வு என்பவற்றின் அடிப்படையி லேயே கட்டியெழுப்பப்பட்டுள்ளது.

இதனைப் பின்வரும் அல் குர்ஆன் வசனம் தெளிவுபடுத்துகின்றது: "(நம்பிக்கையாளர் களே!) மார்க்க விடயத்தில் உங்களுடன் எதிர்த் துப் போர் புரியாதவர்களுக்கும், உங்கள் இல்லத்திலிருந்து உங்களை வெளியேற்றாத வர்களுக்கும் நீங்கள் நன்மை செய்வதையும், அவர்களுடன் நீங்கள் நீதமாக நடந்து கொள் வதையும் அல்லாஹ் தடுக்கவில்லை. நிச்சய மாக அல்லாஹ் நீதமாக நடப்போரை நேசிப்ப வனாக இருக்கின்றான்" (அல் மும்தஹினா-08)

- மனிதர்கள் வெவ்வேறு பிரிவினராகவும் வெவ்வேறு [illegible]

மதக் குழுக்களிடையே கலந்துரையாட லுக்கான வாயிலைத் திறப்பது சமூக ஒரு மைப்பாட்டை அடைந்து கொள்வதற்கு துணைபுரிகின்றது.

- இஸ்லாத்தை சரியான முறையில் விளங்குவதன் மூலம் இஸ்லாம் தொடர்பாக இனவாதிகள் முன்வைக்கும் குற்றச்சாட்டுக் கள் எத்தகைய அடிப்படைகளும் அற்றது என்பதை தெளிவாக அறிந்துகொள்ள முடி யும். இஸ்லாத்தையும் அதன் தூய கொள்கை களையும் தெளிவுபடுத்துவது மார்க்கத்தைக் கற்றறிந்த அறிஞர்களின் பொறுப்பாகும்.

- மனித நாகரிகங்களை கட்டியெழுப்பு வது தொடர்பாக முஸ்லிம்கள் ஏனைய மதங் களைச் சேர்ந்த புத்திஜீவிகளுடன் கலந்துரை யாடல்களை நடாத்துவது முஸ்லிம்கள் பற் றிய நல்லெண்ணத்தை ஏனைய சமூகத்தின ருக்கு வெளிப்படுத்துவதுடன் அவர்களுட னான உறவுகளை பலப்படுத்துவதற்கும் வாய்ப்பாக அமையும்.

- இஸ்லாத்தைப் பின்பற்றுவதானது நாட் டிற்கு விசுவாசமாக நடத்தல், நாட்டின் அபி விருத்திப் பணிகளில் பங்கெடுத்தல், ஊழல் மோசடிகளுக்கு எதிராக போராடுதல் மற்றும் நாட்டின் பொது இலக்குகளை அடைந்து கொள்வதற்காக ஏனைய சமூகங்களோடு புரிந்துணர்வோடு செயற்படுதல் என்பவற் றோடு எந்த விதத்திலும் முரண்படாது.

இதனை அல்லாஹ் தனது திருமறையிலே பின்வருமாறு குறிப்பிடுகின்றான்: "அன்றி, நன்மைக்கும் இறை அச்சத்திற்கும் நீங்கள் ஒருவருக்கொருவர் உதவியாக இருங்கள். பாவத்திற்கும் அத்துமீறல்களுக்கும் நீங்கள் ஒருவருக்கொருவர் உதவியாக இருக்க வேண்டாம்." (அல் மாயிதா: 02)

- இன்று சமூகத்தில் பொதுவான பிரச்சி னைகளாகக் காணப்படும் பண்பாட்டு வீழ்ச்சி, குடும்ப சீரழிவுகள், சமூகக் குற்றங்கள் என் பவற்றுக்கு தீர்வுகளை முன்வைப்பதில் முழு மனித சமூகமும் பங்களிப்புச் செய்ய வேண் டும். இதனை அல் குர்ஆனும் வலியுறுத்திக் கூறுகின்றது:

"மனிதர்களின் கைகள் தேடிக் கொண்டதன் காரணமாக கடலிலும் தரையிலும் அழிவு வேலைகள் பரவி விட்டன. அதிலிருந்து அவர் கள் விலகிக் கொள்வதற்காக அவர்களின் தீய செயல்களில் சிலவற்றின் தண்டனையை அவர்கள் (இம்மையிலும்) சுவைக்கும்படி அவன் செய்ய வேண்டியதாகிறது" (அர்ரூம்: 41)

அதேபோன்று பல்லின சமூகங்கள் வாழ் கின்ற தெற்காசியப் பிராந்தியத்தில் சக வாழ்வை ஏற்படுத்துவதற்காக மூன்று மிக முக்கியமான செயற்திட்டங்கள் இம்மாநாட் டில் பரிந்துரை செய்யப்பட்டது.

**முதலாவது:** தெற்காசியப் பிராந்தியத்தில் காணப்படும் இஸ்லாமிய நிலையங்கள் பின்வரும் விடயங்களை நடைமுறைப்படுத்த வேண்டும் என இந்த மாநாட்டில் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

- தெற்காசியப் பிராந்தியத்தில் முஸ்லிம் கள் மத ரீதியான பிரச்சினைகளை எதிர் நோக்கும் போது இஸ்லாமிய அறிஞர்கள், துறைசார் நிபுணர்கள், பல்கலைக்கழகங்கள் மற்றும் தஃவா அமைப்புக்கள் என்பவற்றோடு தொடர்புகளை ஏற்படுத்தி குறிப்பிட்ட பிராந்தியத்தில் முஸ்லிம்களின் வரலாறு மற்றும் அங்கு இஸ்லாமிய கலாசாரம் ஏற் படுத்திய தாக்கங்கள் என்பவற்றை ஏனைய சமூகங்களுக்கு தெளிவு படுத்தல்.

- அனைத்து மக்களையும் ஐக்கியத்தின் பக்கம் ஒன்று சேர்ப்பதோடு முஸ்லிம்களுக்கு எதிராக இஸ்லாத்தின் எதிரிகள் முன்னெடுக் கும் விஷமத்தனமான நடவடிக்கைகளில் இருந்து மக்களை விழிப்புணர்வூட்டல்.

- இளம் முஸ்லிம் சந்ததியினரிடையே இஸ்லாமிய கலாசார அம்சங்களை அறிமுகப் படுத்துவதோடு எமது முன்னோர்களின் விஞ்

ஞான, அறிவியல், கலாசார பங்களிப்புக்களை யும், மனித நாகரிக வளர்ச்சிக்கு முஸ்லிம்களின் சேவைகளையும் விளங்கப்படுத்தல்.

- பல்வேறு நாடுகளோடும் சமூகங்க ளோடும் புரிந்துணர்வோடு செயற்பட வேண் டும் என்ற இஸ்லாத்தின் கொள்கையை மக்க ளுக்கு மத்தியில் பரப்புவதோடு இஸ்லாம் பயங்கரவாதத்தை கடுமையாக எதிர்க்கும் மார்க்கம் என்பதையும் மக்களுக்கு உணர்த்தல். அல்லாஹ் தனது திருமறையிலே இவ்வாறு குறிப்பிடுகின்றான்: "(எவரையும் கொலை செய்வது கூடாதென்று) அல்லாஹ் தடுத்திருக்க நீங்கள் எம்மனிதனையும் நியாயமின்றி கொலை செய்து விடாதீர்கள்" (அல் இஸ்ரா - 33)

- ஏனைய சமூகங்களைச் சேர்ந்த மக்க ளோடு தொடர்புகளை ஏற்படுத்தி இஸ்லாம் தொடர்பாகவும் முஸ்லிம்களது மத உரிமைகள் தொடர்பாகவும் தெளிவுகளை வழங்குவதற்கான நிகழ்வுகளை ஒழுங்கு செய்தல்.

- ஏனைய மத அமைப்புகளோடு இணைந்து சகவாழ்வு, சமூக நீதி என்பவற்றை கட்டி யெழுப்புவதற்காக செயற்படுதல். உயர்ந்த பண்பாடுகளை மனித உள்ளங்களில் விதைப் பதற்காகவே அல்லாஹ்வினால் தூதர்கள் அனுப்பப்பட்டார்கள்.

**இரண்டாவது:** தெற்காசியப் பிராந்தியத்தில் சக வாழ்வை ஏற்படுத்துவதற்காக தேசிய மற்றும் சர்வதேச அமைப்புக்கள் பின்வரும் விடயங்களில் கரிசனையோடு செயலாற்ற வேண்டுமென இந்த மாநாட்டில் பரிந்துரை செய்யப்பட்டது.

- மத ரீதியான கலந்துரையாடல்களை ஒழுங்கு செய்வதுடன் சகிப்புத்தன்மை, பரஸ்பர விட்டுக்கொடுப்பு என்பவற்றை ஏற்படுத்த பல்லின சமூகங்கள் வாழும் சூழலில் செயற் படுதல். மேலும் வன்முறை, கடும்போக்கு வாதம், பயங்கரவாதம் என்பவற்றுக்கு கடுமை யான எதிர்ப்பை வெளியிட்டு அவற்றை முறியடித்தல்.

- இஸ்லாம் தொடர்பான தப்பபிப்பிராயங் களை களைவதற்காக முஸ்லிம்களோடும் முஸ்லிம் அமைப்புக்களோடும் இணைந்து செயற்படுவதோடு, ஊடகங்களையும் அதற்காக பயன்படுத்தல்.

- பொதுவான மனித விழுமியங்களைப் பலப்படுத்தும் செயற்பாடுகளை மேற்கொள்வ தோடு, நீதி, சமத்துவம், புரிந்துணர்வு என்பவற்றை ஏற்படுத்துவதற்காக அனைத்து மக்களோடும் இணைந்து சேவையாற்றல்.

- மனித சமூகத்தின் பொதுவான இலக்கு களை அடைந்து கொள்வதற்காக ஏனைய மத அமைப்புகளோடு புரிந்துணர்வோடு செயற் படுதல்.

**மூன்றாவது:** தெற்காசியப் பிராந்தியத்தில் உள்ள சிவில் அமைப்புக்கள் சக வாழ்வை வலுப்படுத்த பின்வரும் அம்சங்களை கவனத் திற் கொள்ள வேண்டும் என இந்த மாநாட்டில் அழைப்பு விடுக்கப்பட்டது.

- இஸ்லாம் தொடர்பாகவும் மனித நாகரி கத்துக்கு அதன் பங்களிப்புக்கள் தொடர்பாக வும் மக்களுக்கு தெளிவுபடுத்துவதோடு இஸ் லாத்திற்கு எதிரான தப்பான கண்ணோட்டத்தை களைதல்.

- முஸ்லிம்களுக்கும் முஸ்லிமல்லாதவர் களுக்குமிடையான நீண்ட கால தொடர்புகளை ஞாபகப்படுத்துவதோடு, ஆரோக்கியமான கலந் துரையாடல்கள் மூலமாக முரண்பாடுகளைத் தீர்த்துக் கொள்ளல்.

- நாட்டின் உயர்ந்த இலக்குகளை அடைந்து கொள்வதற்காக இதயசுத்தியுடன் செயலாற்று வதுடன் இனவாதம், கொள்கை வெறி என்ப வற்றை முற்றாக நிராகரித்து அதனை அடியோடு ஒழிப்பதற்காக செயற்படல்.

- எதிர்கால சந்ததியினரின் நலனைக் கருதிற் கொண்டு சூழல் பாதுகாப்பு தொடர்பான விடயங்களில் அக்கறையோடு செயற்படுதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முஸ்லிம் சமய விவகார அமைச்சின் எதிர்காலத் திட்டங்கள் குறித்தும் ஹஜ் கோட்டா விவகாரம் குறித்தும் முஸ்லிம் அரசியல்வாதிகள் ஒருங்கிணைந்து செயற்பட வேண்டியதன் அவசியம் குறித்தும் முஸ்லிம் சமய விவகாரம் மற்றும் தபால் துறை அமைச்சர் எம்.எச்.ஏ. ஹலீம் அவர்களிடம் மீள்பார்வை பத்திரிகை மேற்கொண்ட நேர்காணல் இங்கு தரப்படுகிறது.

நேர்காணல்:
ஹெட்டி ரம்ஸி

# ஹஜ் ஒரு இபாதத் முகவர்களே! நியாயமான முறையில் சம்பாதியுங்கள்

**எம்.எச்.ஏ. ஹலீம்**
முஸ்லிம் சமய விவகாரம் மற்றும் தபால் துறை அமைச்சர்

- **முஸ்லிம் சமய விவகார அமைச்சு இம்முறை புதிதாக தாபிக்கப்பட்டுள்ளது. நல்லாட்சி அரசாங்கம் நல்லிணக்கத்திற்குரிய திட்டங்களை முன்கொண்டு செல்லும் இவ்வேளையில் முஸ்லிம் சமய விவகார அமைச்சு எவ்வாறான திட்டங்களை அதற்குள் முன்வைத்துள்ளது?**

முஸ்லிம் சமய விவகாரங்களை கவனிக்கவென அரசாங்கம் இம்முறையே முஸ்லிம் சமய விவகார அமைச்சை நிறுவியுள்ளது. இதற்கு முன்னர் ஒரு திணைக்களமாகவும் ராஜாங்க அமைச்சரொருவருக்கு கீழாலும் முஸ்லிம் சமய விவகாரங்கள் கவனிக்கப்பட்டு வந்துள்ளன. எனவே எமக்கு துவக்கத்திலிருந்தே பல விடயங்களை ஆரம்பிக்க வேண்டியிருந்தன. முன்னர் இவ்விடயங்கள் ஒரு ஒழுங்கமைப்பில் இருக்கவில்லை. தற்பொழுது நாம் சரியான முறையில் ஆராய்ந்து திணைக்களத்திடம் உள்ள ஒவ்வொரு வேலையையும் அழகான முறையில் ஒழுங்குபடுத்தி வருகின்றோம்.

சமூகங்களுக்கிடையில் ஐக்கியத்தை ஏற்படுத்துவதில் நல்லாட்சி அரசாங்கம் முன்னின்று செயற்படுகிறது. இது தொடர்பில் சர்வதேச மட்டத்திலான மாநாடொன்றை நவம்பர் மாதமளவில் நாம் கொழும்பில் நடாத்தவுள்ளோம். இனங்களுக்களுக்கிடையில் ஒற்றுமையுடன் செயலாற்றுவது குறித்துக் கவனஞ் செலுத்துமாறு நாம் பள்ளிவாயல்கள், மத்ரஸாக்களுக்கு அறிவுறுத்தியுள்ளோம்.

முன்னரை விட நாம் பாரியளவிலான மாற்றங்களைக் கண்டு வருகிறோம். தற்பொழுது ஏனைய இனங்களுடனான பிரச்சினைகள் குறைவு. நாம் அவர்களுக்கு மார்க்கத்தை பற்றிய சரியான விளக்கங்களைக் கொடுக்க வேண்டும். பிழையான விளக்கங்களைக் கொடுக்கும் போதே பிரச்சினைகள் மூழ்கின்றன.

பள்ளிவாயல்களில் உள்ள கதீப்மார்கள் கூட குத்பா பிரசங்கங்கள் மற்றும் பயான்களை நடாத்துகின்ற பொழுது தேவையற்ற விடயங்களையெல்லாம் பெரிதுபடுத்திக் கூறுகிறார்கள்.

நான் கேள்விப்பட்டேன், இரண்டு வாரங்களுக்கு முன்னர் ஒரு குத்பா பிரசங்கத்தில் ஒரு இமாம் நாசா ஆய்வு மையம் ஒரு கண்டுபிடிப்பை செய்திருப்பதாகவும், அது தூர இடங்களைப் பார்க்க கூடிய டெலஸ்கோப் போன்றதொரு கருவி என்பதாகவும், அக்கருவியால் பார்க்கும் போது சுவர்க்கம் நரகம் தெரிவதாகவும் குறிப்பிட்டிருந்தார். அவர் ஒரு விஞ்ஞானி போன்று அக்கருத்தை கூறியிருந்தார்.

இது போன்ற பல பிரச்சினைகள் உள்ளன. இதனால் அவற்றை சரியான முறையில் சொல்லிக் கொடுத்து அவர்களை நெறிப்படுத்த வேண்டும். எமது பள்ளிவாயல்களில் உள்ள கதீப்மார்களை பயிற்றுவிப்பதற்குரிய திட்டங்களை நாம் முன்னெடுத்துள்ளோம். அதற்கு துருக்கி அரசாங்கம் உதவ முன்வந்துள்ளது.

- **ஹஜ்ஜுக்கு ஒதுக்கப்படுகின்ற கோட்டாக்கள் தொடர்பில் சில வித்தியாசமான பார்வைகள் உள்ளன. கோட்டா கூடிக் குறைவதற்கான காரணங்கள் என்ன? இது தொடர்பில் உங்களுடைய நிலைப்பாடு என்ன?**

பொதுவாக மக்கள் தொகையை பொறுத்தே கோட்டாக்கள் கிடைக்கின்றன. அதன்படி எமக்கு 2140 கோட்டாக்கள் வழமையாக கிடைத்து வருகின்றன. முன்னர் 4000 கோட்டாக்கள் கிடைத்த சந்தர்ப்பங்களும் உள்ளன. ஆனால் தற்பொழுது சவூதி அரசாங்கம் முஸ்லிம் மக்கள் தொகையை பொறுத்து கோட்டாக்களை வழங்குவதாகவும் கட்டுமானப் பணிகள் இன்னும் நிறைவுபெறாமல் கூடுதலானோரை எடுத்துக் கொள்ள முடியாது என்பதாகவும் கூறி வருகிறது.

சென்றமுறையும் எமக்கு 2140 கோட்டாக்கள் கிடைத்தன. நாம் திரும்பத் திரும்ப வலியுறுத்திக் கேட்டதனால் இறுதி நேரத்தில் இன்னும் 600 மேலதிக கோட்டாக்களை தந்தார்கள்.

முன்னர் ஹஜ்ஜுக்காக வேண்டி கூடுதலான கட்டணத் தொகைகள் அறவிடப்பட்டன. சென்றமுறை 8-9 இலட்சங்கள் வரையில் அறவிட்டார்கள். இது அவ்வளவு செலவுக்குரிய விடயமொன்று அல்ல என்பது எமக்கு தெரியும். இதுவொரு இபாதத் என்பதை நான் ஹஜ் முகவர்களுக்கு அடிக்கடி வலியுறுத்தி வருகிறேன். அதை வைத்து நீங்கள் நியாயமான முறையில் சம்பாதியுங்கள் என்பதாகவும் நான் அவர்களுக்கு கூறினேன்.

ஆனாலும் அவர்கள் ஹஜ்ஜுக்காக அறவிட்டு வந்த தொகையைக் குறைக்கவில்லை, அதனால் நான் அவர்கள் எல்லோரையும் அழைத்து நீங்கள் குறைப்பதாகத் தெரியவில்லை, அதனால் நான் இந்த முறையை மாற்றப் போகிறேன். அப்போது கட்டணங்கள் குறையும் என்பதாகக் கூறினேன். அதற்கு ஒருவரும் மறுப்புத் தெரிவிக்கவுமில்லை. நான் முறையை மாற்றினேன். அதன் பிறகு கட்டணத் தொகை 4 இலட்சமாக குறைந்தது.

ஹஜ் முகவர்களுக்கு சரியான முறையில் சந்தர்ப்பங்கள் கிடைக்கவில்லை. நாம் அவர்களை சரியான முறையில் இனங்கண்டுகொள்ள வேண்டும். அவர்களிடம் பண வசதிகள் உள்ளதா? அவர்களுடைய வங்கிக் கணக்குகள் ஒழுங்காக உள்ளதா? ஹாஜிகளுக்கு உதவி செய்யும் அளவுக்கு நிதித்தொகைகள் உள்ளதா? கடந்த கால நிலைமைகள் எவ்வாறிருந்தது? எல்லாவற்றையும் நாம் அவதானித்தோம்.

அதேபோன்று சில ஹஜ் முகவர்கள் பல வாக்குறுதிகளை சொல்லி ஹஜ் செய்வதற்கு மக்களை அழைத்துச் செல்கிறார்கள். ஆனால் அங்கு சென்றதும் அவ்வாக்குறுதிகள் நிறைவேற்றப்படுவதில்லை. இறுதியில் ஹஜ் கிரியைகள் முடிந்தவுடன் எல்லோரையும் அழைத்து ஒரு மௌலவியை பிடித்து அழுது துஆ கேட்டு நாம் இப்போது ஹஜ்ஜாஜிகள், சில விடயங்கள் நடந்தன. இன்னும் சில நடக்கவில்லை. அதை மறந்துவிடுங்கள், மன்னித்து விடுங்கள் என்பார்கள். எனவே முறைப்பாடுகளை முன்வைத்தவர்களும் அதனை வாபஸ்பெற்று விடுவார்கள்.

எனவே இம்முறை நான் கூறினேன், முறைப்பாடுகள் ஏதும் கிடைத்தால் கண்டிப்பாக விசாரிப்பேன் என்று. அதேபோன்று ஓய்வு பெற்ற நீதியரசர் சலாம் அவர்கள் [illegible] முறைப்பாடுகளை நான் விசாரித்தேன். அதில் ஏமாற்றிய ஒரிரு முகவர்கள் அகப்பட்டார்கள். குறித்த தொகைகளை செலுத்த அவர்கள் பணிக்கப்பட்டார்கள். அதன் பிறகே அவர்களுக்கான வாய்ப்புக்கள் வழங்கப்படும்.

- **கண்டி லைன் பள்ளி வாயல் விவகாரத்தை நீங்கள் மகாநாயக்க தேரர்களுடன் கதைத்து ஒரு முடிவுக்கு கொண்டு வந்தீர்கள். இது போன்று நாட்டின் ஏனைய இடங்களிலும் முஸ்லிம் சமய விவகாரங்களோடு தொடர்புடைய கட்டிட நிர்மாணப் பணிகள் இடம்பெறுகையில் இனவாதிகள் தடங்கல் விளைவித்தால் இது போன்ற சந்தர்ப்பங்களில் முஸ்லிம்கள் விட்டுக்கொடுப்பவர்களாகத்தான் இருக்க வேண்டும்?**

கண்டி பள்ளிவாயல் விவகாரம் வித்தியாசமானது. குறித்த பள்ளிவாயல் கட்டப்பட்ட பொழுது நிதிப் பிரச்சினையால் கூபா நிர்மாணப் பணிகள் நிறுத்தப்பட்டிருந்தது. அண்மையில் பாகிஸ்தான் பிரதமர் இலங்கை வந்திருந்த பொழுது வழங்கப்பட்ட நன்கொடைத் தொகையை வைத்து மினாராவை கட்ட ஆரம்பித்தார்கள். மினாராவை உயர்ந்ததாக கட்டுவதற்கு கிரேன் போன்ற உபகரணங்களை பயன்படுத்திய பொழுது இவர்கள் பெரிதாக ஏதோவொன்றைக் கட்டப் போகிறார்கள் என ஏனைய சமுதாயத்தினர் அச்சப்பட ஆரம்பித்தார்கள்.

இவ்விடயம் இனவாதிகளுக்கு கொளுத்த தீனியாய் அமைந்தது. கொழும்பில் இருந்து வந்த சிங்களே அமைப்பு தலதா மாளிகைக்கு உயர்வாக முஸ்லிம்கள் பள்ளிவாயலை உயர்த்துகிறார்கள் என்கின்ற பிரசாரத்தை கொண்டு சென்றார்கள். எனவே அங்கு பதட்டமானதொரு சூழல் உருப்பெற்றிருந்தது.

நான் பள்ளிவாயலின் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கதைத்து அவர்களையும் மகாநாயக்க தேரர்களிடம் அழைத்துச் சென்று நாங்கள் கட்டப்போகின்ற மினாரா தலதா மாளிகையை விட 20 அடி கீழாகவே அமையவுள்ளது. இதுவெல்லாம் பொய்ப் பிரச்சாரம். சாதாரணமாக பள்ளிவாயல்களில் கட்டப்படுகின்ற அமைப்பே அது என விளக்கமளித்தோம். அப்போது அவர் அதை இப்போது கட்டாமல் பிறகு கட்டுங்கள். ஒரு சிலர் வீணாக பிரச்சினையை மூட்டப் பார்க்கிறார்கள். தற்பொழுது நாம் நிலைமையை சமாளித்துக் கொள்வோம் என்றார்.


இதுபோன்ற பிரச்சினைகள் ஏனைய இடங்களிலும் இடம்பெற்று வருகின்றது. எனவே நான் இவ்விவகாரங்களை பிரதமரின் கவனத்திற்குக் கொண்டு சென்றேன். அவரின் ஆலோசனைக்கமைய மதங்கள் சார்பாக உள்ள அமைச்சர்கள் ஒன்று கூடி, மத வழிபாடுகளை பிரச்சினைகள் இல்லாமல் செய்வதற்கும் கட்டிடங்கள் தொடர்பாகவும் ஒரு நிலைப்பாட்டிற்கு வருவதற்குரிய பேச்சுவார்த்தைகளை நடாத்தினோம். ஒரு முறை நாம் ஒன்று கூடினோம். அதில் விஜயதாஸ ராஜபக்ஷ அடுத்த கூட்டத்தில் நல்லதொரு முறையை அறிமுகப்படுத்துவதாகக் கூறினார்.

- **யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசாங்கம் நிறைய சேவைகளை செய்து வருகின்றது. பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கும் தமிழ் சமுகத்தைச் சார்ந்த பிரதிநிதிகள் உதவிகளைச் செய்துகொண்டுள்ளார்கள். ஆனால் யுத்தத்தால் பாதிக்கப்பட்டு 1990களில் வெளியேற்றப்பட்டு தற்பொழுது மீள்குடியேறி வருகின்ற முஸ்லிம்களுடைய கலாசார விடயங்களை விருத்தி செய்வதற்கு முஸ்லிம் சமய விவகார அமைச்சு எவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது?**

இந்தப் பிரச்சினை இருந்து வருவது எமக்குத் தெரியும். ஆனால் இது சம்பந்தமாக எங்களுடன் யாரும் அணுகியதாகத் தெரியவில்லை. இது தொடர்பாக ரிஷாத், ஹக்கீம் போன்றவர்கள் வட கிழக்குப் பிரதேசங்களுடன் தொடர்புற்றிருந்தார்கள் என்ற வகையில் அவர்கள் சம்பந்தப்பட்டிருந்தார்கள். ஆனால் எம்மைப் பொறுத்த வரையில் எமக்கு நியாயம் கூறி நிற்பதற்கு எப்போதும் பின்வாங்கப் போவதில்லை.

- **முஸ்லிம் அரசியல்வாதிகள் ஏன் ஒருமித்துச் செயற்படுவதில்லை?**

என்னைப் பொறுத்தவரையில் அப்படி ஒரு பிரச்சினையில்லை. சிலர் அரசியல் ரீதியாக முன்னே வர வேண்டும் என்பதற்கு (பக்.14)



எழுவாய், பயமிலை

அபூ ஷாமில்

## இரண்டு கண்கள் இரண்டு காட்சியா?

மொழி வழக்கில் நாங்கள் மஸ்ஜிதை பள்ளிவாசல் என்கிறோம். பாடசாலையை பள்ளிக் கூடம் என்கிறோம். இரண்டு சொற்களுக்கும் பொதுவான பள்ளி என்ற சொல்லை எடுத்து விட்டால் வாசல் என்பதும் கூடம் என்பதும்தான் மிஞ்சும். வாசலும் கூடமும் ஒரே வீட்டின் இன்றியமையாத இரண்டு பகுதிகள்.

அதேபோல பள்ளிவாசலும் பள்ளிக் கூடமும் ஒரு ஊரின் இரண்டு கண்கள் என்பார்கள். இரண்டு கண்களுமே முன்னோக்கியே இருக்கின்றன. முன்னால் ஒரு கண்ணும் பிடரியில் பின்னால் ஒரு கண்ணும் அமைவதில்லை. இரண்டு கண்களும் இரண்டு காட்சி காணமுடியாது. எண்ணிக்கையில் இரண்டாக இருந்தாலும் அவை ஒரே பார்வையில் ஒரே காட்சியையே காண்கின்றன.

முஸ்லிம் சமூகத்தின் ஒழுங்கில்லாத பகுதிகளில் இந்த இரண்டு கண்களும் ஒன்று. முஸ்லிம் சமூகத்தின் ஒரு கண் நெற்றியிலும் மறு கண் பிடரியிலும் இருக்கிறது. பள்ளிவாசலும் பள்ளிக் கூடமும் இரு வேறு காட்சிகளையே காண்கின்றன. பள்ளிவாசல் விடயத்தில் பள்ளிக் கூடம் கண்ணை மூடிக் கொள்கிறது. பள்ளிக் கூடத்தின் விடயத்தில் பள்ளிவாசல் குருடாகிவிடுகிறது. ஒரே காட்சியை காண்பதை விட முரணான காட்சிகளையே முஸ்லிம் சமூகத்தின் கண்கள் பார்க்கின்றன. இதனால் முஸ்லிம் சமூகம் பார்வைக் கோளாறினால் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறது.

எதிர்காலம் பற்றிய தூர நோக்கு அதனிடம் இல்லை. சமூக மாற்றம் பற்றிய தெளிவான பார்வை அதனிடம் இல்லை. நாடு எப்படி இருக்க வேண்டும், நாட்டிலே முஸ்லிம் சமூகம் எப்படி இருக்க வேண்டும் என்பதான புலக்காட்சிகள் இந்தச் சமூகத்தின் கண்களுக்குத் தெரிவதில்லை.

இதனால் பலமான வளமான இரண்டு கண்களையும் வைத்துக் கொண்டு சமூகம் எதிர்காலம் பற்றிய பார்வையின்றி இருட்டிலே குருட்டுத் தனமாகப் பயணிக்கிறது. ஒற்றைக் கண்ணுக்குத் தெரிவதை மட்டுமே காட்சியாக எடுத்துக் கொண்டு, நொண்டிப் பயணம் செய்கிறது. இந்தப் பயணம் எப்போது எங்கே போய் முடியும் என்று யாருக்கும் தெரியாது.

பள்ளிக் கூடத்தை துன்யாவுக்கானதாகவும் பள்ளிவாசலை ஆகிரத்துக்கானதாகவும் கருதுகின்ற சமூகமாக நாங்கள் இருக்கும் வரை இந்தக் குருட்டுப் பயணம் தொடரத்தான் போகிறது. அறிவின் மையங்களாக இருந்த பள்ளிவாசல்கள் அறிவு மையத்தை அடக்கம் செய்ததனால் தான் துன்யாவை நாடுவதற்கு சமூகம் தள்ளப்பட்டது. அறநெறி போதிக்கின்ற அஹதியாக்களைக் கூட பள்ளிவாசலுக்குள் உள்வாங்காமல் தூரமாக்குகின்ற அளவுக்கு சமூகத்தின் பார்வையில் கோளாறு ஏற்பட்டிருக்கிறது. இந்த இடத்தில் பெரும்பாலான பௌத்த தஹம் பாடசாலைகள் பௌத்த விகாரைகளில் தான் நடக்கிறது என்பதையும் சமூகத்தின் கண்களுக்கு எடுத்துக் காட்ட வேண்டியிருக்கிறது.

பள்ளிக் கூடங்களில் பாடம் நடக்கிறது. பரீட்சைகள் நடக்கின்றன. மனிதனின் வளர்ச்சிக் கட்டத்தில் முக்கியமான காலங்களை பள்ளிக் கூடங்கள் இந்த விடயங்களுக்காக எடுத்து விடுகின்றன. பாடங்கள், பரீட்சைகளுக்கு அப்பால், ஒரு இலட்சிய மனிதனை உருவாக்குகின்ற எஞ்சிய பணியையாவது ஏன் பள்ளிவாசல்கள் செய்யக் கூடாது ? பள்ளிக் கூடத்தில் கிடைக்கின்ற வழிகாட்டல்கள் தான் இந்த இளம் சந்ததியினருக்குக் கிடைக்கின்றன. இவர்களுக்கு இஸ்லாமிய விழுமியங்களைப் பழக்குகின்ற இடமாக பள்ளிவாசல்கள் ஏன் பள்ளிக் கூடங்களைப் பயன்படுத்தக் கூடாது?

பள்ளிக் கூடத்தில் திணிக்கப்படுகின்ற மேற்கத்தேயக் கல்வியையும், அதனூடாக வருகின்ற உலகாயுதப் பழக்க வழக்கங்களையும் கலாச்சாரத்தையும் நாங்கள் தவிர்க்க முடியாத நிலையில் இருக்கிறோம். இந்த இடத்தில் தான் சமூகம் கண் திறக்க வேண்டியிருக்கிறது. இவை அனைத்தையும் இளைஞர் சமூகம் உள்வாங்கும்வரை கண்ணை மூடிக் கொண்டிருந்துவிட்டு, உலகம் இருட்டாகிவிட்டது என்று மிம்பரில் ஏறிக் கூப்பாடு போடுவதனால் ஆகப் போவது எதுவும் இல்லை.

இந்த வகையில் சமூகம் தனது நெற்றிக் கண்ணைக் காட்டி குற்றத்திலிருந்து தப்பிக் கொள்ள முயற்சிப்பதை விடுத்து, ஒரே பார்வையில் சமூகத்தை வழிநடத்திச் செல்வதற்கு முயற்சிக்க வேண்டும். பாடசாலையும் பள்ளிவாசலும் சிறந்த பிரஜைகளை உருவாக்குதல் என்ற பொது நோக்கில் ஒரே கோட்டில் பயணிக்கின்றன. இதனை மையப் புள்ளியாக எடுத்து சமூகம் பயணிக்க வேண்டும்.

அல்லாது போனால் சிறந்த சமூகம் ஒன்றை உருவாக்குகின்ற அறிவு மையத்தினை அடக்கம் செய்கின்ற மையவாடியாகத்தான் நமது ஆளுகை மையங்கள் சமூகத்தில் இடம் பிடித்துவிடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீள்பார்வை விளையாட்டு

ஒலிம்பிக் வலம் Rio2016

இம்மாதம் 5 ஆம் திகதி பிரேஸிலின் ரியோ டி ஜெனிரோ நகரில் கோலாகலமாக ஆரம்பமான ஒலிம்பிக் திருவிழா கடந்த 21ஆம் திகதி ''மீண்டும் டோக்கியோவில் சந்திப்போம்'' என்ற செய்தியோடு நிறைவுக்கு வந்தது. 16 நாட்கள் இடம்பெற்ற 31ஆவது ஒலிம்பிக் அத்தியாயத்தில் பல்வேறு சாதனைகளும் சுவாரஸ்யமான நிகழ்வுகளும் மைதானத்தை அலங்கரித்தன. அவற்றை இங்கு சுருக்கமாக பகிர்ந்து கொள்கின்றோம்.

## மீண்டும் இலங்கைக்கு ஏமாற்றம்



இம்முறை ரியோவில் இடம்பெற்ற ஒலிம்பிக் போட்டிகளில் இலங்கைக்கு எந்தவிதமான பதக்கங்களும் கிடைக்கவில்லை. இதுவரை இலங்கை 17 ஒலிம்பிக் தொடர்களில் பங்குபற்றியுள்ள போதிலும் இரண்டு வெள்ளிப் பதக்கங்களை மாத்திரமே பெற்றுள்ளது. இலங்கை சார்பாக இம்முறை 9 வீர, வீராங்கனைகள் பங்குபற்றியதுடன் தேசிய சாதனையை நிலைநாட்டிய மரதன் ஓட்ட வீரர் அநுராத குரே இலங்கை அணிக்கு தலைமை தாங்கினார். இலங்கை வீரர்கள் இம்முறை ஒலிம்பிக் போட்டிகளில் பெற்றுக்கொண்ட முடிவுகள்:

| போட்டியாளர் | போட்டி | முடிவு |
|---|---|---|
| அநுராத குரே | மரதன் (ஆண்கள்) | 34 (2:17:06) |
| நிலுகா கீதானி ராஜசேகர | மரதன் (பெண்கள்) | 129 (3:11:05) |
| சுமத ரணசிங்க | ஈட்டி எறிதல் (ஆண்கள்) | 18 (71.93மீற்றர்) |
| நிலுக கருணாரத்ன | பெட்மின்டன் (ஆண்கள் ஒற்றையர் பிரிவு) | ஆரம்ப சுற்று தோல்வி |
| சாமர ரெபியல்லகே | ஜூடோ (ஆண்கள் - 73kg) | தோல்வி |
| மங்கள சமரகோன் | குறிபார்த்துச் சுடுதல் (ஆண்கள்) | தோல்வி |
| மத்தீவ் அபேசிங்க | நீச்சல் (ஆண்கள்) | 50 |
| கிமிகோ ரஹீம் | நீச்சல் (பெண்கள்) | 28 |
| சுதேஷ் பீரிஸ் | பளு தூக்குதல் (ஆண்கள் - 62kg) | - |

## கிரிக்கட் நிதி முறைகேடுகள் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பம்



இலங்கை கிரிக்கட் நிறுவனத்தில் 2010 தொடக்கம் முறைகேடுகள் இடம்பெற்றுள்ளதாக கிடைக்கப்பெற்றுள்ள முறைப்பாடுகள் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக நிதி மோசடிக் குற்ற விசாரணைப் பிரிவு கொழும்பு மேலதிக நீதவான் நிஷாந்த பீரிஸிடம் தகவல் தெரிவித்துள்ளது. பாராளுமன்ற உறுப்பினர் சுனில் ஹனதுன்னெத்தி முன்வைத்துள்ள முறைப்பாடொன்றுக்கமைய முன்னாள் விளையாட்டு அமைச்சரான மஹிந்தானந்த அளுத்கமகே, இலங்கை கிரிக்கட் நிறுவனத்தின் முன்னாள் செயலாளர் நிஷாந்த ரணதுங்க உள்ளிட்டோர் பல்வேறுபட்ட விதத்தில் நிதி முறைகேடுகளில் ஈடுபட்டிருப்பதை சுட்டிக்காட்டியிருப்பதாக நிதிக் குற்ற விசாரணை பிரிவு தனது அறிக்கையில் நீதிமன்றத்திடம் சுட்டிக்காட்டியுள்ளது.

அதன்படி இலங்கை கிரிக்கட் நிறுவனத்தின் மனித வள முகாமையாளர் மற்றும் நிதிப் பிரிவு பிரதானி ஆகியோரிடம் வாக்குமூலங்களை பெறப்பட்டு விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகவும் அதன் முன்னேற்றம் குறித்த தகவலை தெரிவிக்க ஒரு காலப்பகுதி வேண்டும் எனவும் நிதிக் குற்ற விசாரணைப் பிரிவு நீதிமன்றத்தில் தெரிவித்திருந்தது.

## ரியோ சம்பியனானது அமெரிக்கா



இம்முறை ரியோவில் இடம்பெற்ற ஒலிம்பிக் போட்டிகளில் 46 தங்கம் 37 வெள்ளி 38 வெண்கலப்பதக்கங்கள் உள்ளடங்கலாக மொத்தமா 121 பதக்கங்களை சுவீகரித்த அமெரிக்கா ஒலிம்பிக் சம்பியனாக முடி சூடிக் கொண்டது. நவீன ஒலிம்பிக் போட்டிகள் 1896ஆம் ஆண்டு ஏதென்ஸ் நகரில் ஆரம்பமானது முதல் அமெரிக்காவே ஆதிக்கம் செலுத்தி வருகின்றது.

இம்முறை அமெரிக்கா 121 பதக்கங்களை சுவீகரித்தமையானது அந்நாடு ஒலிம்பிக் போட்டிகளில் பெற்றுக் கொண்ட மூன்றாவது அதிகூடிய பதக்கங்களாக அமைந்ததோடு அமெரிக்காவுக்கு வெளியில் நடந்த ஒலிம்பிக் தொடரில் அதிகூடிய பதக்கங்களையும் அந்நாடு பெற்றுக்கொண்டது. இதற்கு முன் 1904இல் சென் லூயிஸில் இடம்பெற்ற ஒலிம் பிக்கில் 239 பதக்கங்களையும் 1984இல் லொஸ் ஏன்ஜலில் இடம்பெற்ற ஒலிம்பிக்கில் 174 பதக்கங்களையும் அமெரிக்கா பெற்றிருந்தது.

## ரியோவில் பதக்கம் வென்ற இளம் வீராங்கனை



டைவிங் போட்டியில் தங்கப்பதக்கம் வென்றதன் மூலம் சீனாவைச் சேர்ந்த 15 வயதான ரென் கியென் ரியோவில் இடம்பெற்ற ஒலிம்பிக் போட்டிகளில் மிகக்குறைந்த வயதில் பதக்கம் வென்ற வீராங்கனையாக தடம் பதித்தார். ஒலிம்பிக் வரலாற்றில் மிகக்குறைந்த வயதில் பதக்கம் வென்ற பெருமை கிரேக்க ஜிம்னாஸ்டிக் வீரர் டிமிட்ரியஸ் லோன்டர்ஸ் வசமே உள்ளது. அவர் 1896ஆம் ஆண்டு இடம்பெற்ற ஒலிம்பிக் ஜிம்னாஸ்டிக் போட்டியில் வெண்கலப்பதக்கத்தை சுவீகரித்தார். அப்போது அவருக்கு வயது 10 என்பது குறிப்பிடத்தக்கது.

## ஒலிம்பிக் புகட்டும் பாடம் என்ன?

2016 ரியோ ஒலிம்பிக் போட்டியில் கலந்து கொண்ட இலங்கை வீர வீராங்கனைகள் பெற்றுக்கொண்ட இடங்கள் இலங்கை விளையாட்டுத்துறையின் நிஜ சுயரூபத்தை பிரதிபலித்துக்காட்டுகிறது. அது தொடர்பில் வாதங்கள் ஏதும் இல்லை. ஒலிம்பிக் போட்டியில் பங்குபற்றிய பெரும்பாலான வீரர்கள் இலங்கை நாட்டை பிரதிநிதித்துவம் செய்திருந்தாலும் அவர்கள் இலங்கையில் வசிப்பர்கள் அல்ல. விளையாட்டுக்களுக்கு மாத்திரம் வந்து செல்பவர்கள். அமெரிக்காவில் வசித்து வருகின்ற மெதிவ்ஸ் அபேசிங்க வைல்ட் கார்ட் மூலம் ஒலிம்பிக் சென்றுள்ளார்.

ஒலிம்பிக் சங்கத்தில் உறுப்பினர் ஒருவராக உள்ள மெதிவ்ஸின் தந்தை விளையாட்டு அமைச்சர் தொட்டு ஏனைய அதிகாரிகள் வரையில் நெருக்கமான உறவுகளை வைத்துள்ளார். இம் முறை நீச்சல் போட்டியில் கலந்து கொண்ட மெதிவ்ஸ் 55 பேர்களுள் 50ஆவது இடத்தைப் பெற்றுள்ளார். அதேபோன்று கிமிகோ ரஹீம் 34 பேர்களுள் 28ஆவது இடத்தை பெற்றுள்ளார். மரதன் வீராங்கனை 120 ஆவது இடத்தையும் துப்பாக்கியால் குறி சுடும் வீரர் கடைசி இடத்தையும் பெற்றுள்ளார். ஏனைய போட்டியாளர்களைப் பற்றி சொல்ல வேண்டியதில்லை.

நாம் யாரையும் தரக்குறைவாக விமர்சிக்க முன்வரவில்லை. ஆனாலும் நாம் இப்பெறுபேறுகளால் பாடம் கற்க வேண்டும். பணமும் அதிகாரமும் படைத்தவர்களுக்கு மாத்திரம் தான் தேசிய சர்வதேசிய மட்டப் போட்டிகள் என் கின்ற நிலை மாற வேண்டும். ஒலிம்பிக்கில் கலந்து கொண்ட பெட்மிண்டன் வீரர் நிலூக கருணாரத்ன அழுது கொண்டே மறுதடவையும் ஒலிம்பிக்கில் பங்கு பற்றுவதாக குறிப்பிட்டிருந்தார். அது எதற்கு? இவர்கள் எல்லோரினதும் காலம் முடிவடைந்துள்ளது.



இவர்கள் எல்லோரும் மறுமுறை ஒலிம்பிக் வரும் வரையில் இந்நாட்டில் வீரர்களாக இருக்கலாம். அவசியம் என்றால் சாப் வலயத்திலும் வீரர்கள் ஆகலாம். ஆனால் அதற்கு அப்பால் இலங்கை வீர வீராங்கனைகளின் நிலைமைகள் என்ன? ஈட்டி எறிவது இலங்கை வீரர் ஒருவருக்கு இலகுவானதொரு விடயமல்ல என்பது இம் முறை ஒலிம்பிக்கில் ஒப்புவிக்கப்பட்டுள்ளது. ஆனால் அதன் கருத்து எமக்கு அவ்விளையாட்டுக்களை நெருங்கவும் முடியாது என்பதல்ல. நெருங்க முடியுமானதொரு வேலைதிட்டம் எம்மிடம் இல்லை என்பதே அதன் பொருள். முறையானதொரு பயிற்சித் திட்டம் எம்மிடம் இல்லை. சாப் போட்டிகளில் வெற்றி பெற முடியுமாக இருந்தபோதிலும் அது உலகை வெல்லும் அளவுக்கு போதாது என்பதை நினைவில் இருத்த வேண்டும்.

வீரர்களுக்கு முறையானதொரு இலக்கு இருக்க வேண்டும். அதற்கு அயராது உழைக்க வேண்டும். அவற்றை நெறிமுறைப்படுத்த சிறந்த தேசிய சர்வதேசிய பயிற்றுனர்கள் தேவை. பாடசாலை மற்றும் கிராமிய மட்டங்களில் நல்ல திறமைகளை வெளிப்படுத்தக் கூடிய வீர வீராங் கனைகள் இனங் காணப் பட வேண்டும். திறமைக்கு முதலிடம் கொடுத்து அவர்களை பயிற்றுவிக்க வேண்டும். அப்போதே எமக்கு உலகை வெல்வதற்குரிய வழி பிறக்கும்.

## முப்பெரும் நிகழ்வுகள்





காங்கேயனோடை பிர்லியன்ட் சமூக சேவை ஒன்றியத்தின் ஏற்பாட்டில் முப்பெரும் நிகழ்வுகள் (பிர்லியன்ட் வாசிகசாலை திறப்பு விழா பிர்லியன்ட் தலைமைக் காரியாலய திறப்பு விழா மற்றும் வறிய மாணவர்களுக்கான புலமைப் பரிசில் திட்ட ஆரம்ப விழா) கடந்த 12.08.2016ம் திகதி ஒன்றியத்தின் தலைவர் ஜனாப் ஏ.டபிள்யூ.எம்.றூமி அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வுகளில் மண்முனைப்பற்று பிரதேச செயலாளர் திருமதி என்.சத்தியானந்தி அவர்கள் பிரதம அதிதியாகவும் மண்முனைப் பற்று பிரதேச சபையின் செயலாளர் திரு என்.கிருஷ்னபிள்ளை, முன்னாள் காழி நீதிபதி ஜனாப் ஏ.ம்.ஹிழுறு(ஜே.பி) மற்றும் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் ஏ.எல்.எம்.முஜாஹித் ஆகியோர் கௌரவ அதிதிகளாக கலந்து சிறப்பித்தனர்.







'கிறிஸ்தவ ஸியோனிசமும் பலஸ்தீனப் பிரச்சினையும்' எனும் தலைப்பில் அஷ்ஷெய்க் பாஸிர் (நளீமி) அவர்களினால் திஹாரிய பாதிஹ் கல்வி நிறுவனத்தின் ஆய்வுக்கும் அபிவிருத்திக்குமான மையத்தின் மூன்றாவது ஆய்வு மன்றத்தின் ஆய்வுரை அண்மையில் இடம்பெற்றது.எதிர்வரும் காலங்களில் ஆய்வு மன்றத்தை விரிவுபடுத்தி இலங்கையின் பல் துறை சார் நிபுணர்களையும், புத்திஜீவிகளையும் உள்ளடக்கியதாக இதனை நடத்துவதற்கு பாதிஹ் கல்வி நிறுவனத்தின் ஆய்வுக்கும் அபிவிருத்திக்குமான மையம் உத்தேசித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்ரேல் காஸாவைத் தோற்கடிக்க முடியாது: மிஷ்அல்

இஸ்ரேல் காஸாவைத் தோற்கடிக்க முடியாது என கிழக்கு காஸாவுக்கு சமீபமாகவுள்ள அஷ்ஷுஜாஇய்யா நகர பள்ளிவாயலில் ஹமாஸ் இயக்கத்தின் அரசியல் பிரிவுத் தலைவர் காலித் மிஷ்அல் ஆற்றிய உரையொன்றில் தெரிவித்துள்ளார்.



அவர் அங்கு மேலும் கருத்து வெளியிடுகையில், காஸா பலமான காப்பரனாக மாறியுள்ளது. அது அனைத்து சூழ்ச்சித் திட்டங்களையும் தவிடு பொடியாக்கக் கூடியது.

அல் அக்ஸா பள்ளிவாயலைப் பாது காப்பதற்கு ஜெரூசலம் மக்கள் மேற்கொண்ட தியாகத்தையும் மிஷ்அல் பாராட்டியுள்ளார். அதேபோன்று ஷுஜாஇய்யா நகர மக்களின் வீரத்தையும் தியாகங்களையும் அவர் பாராட்டியுள்ளார்.

# யெமன் நெருக்கடிக்கு தவக்குல் கர்மானின் தீர்வுத் திட்டம்

யெமனில் நீடிக்கும் தேசிய அரசியல் நெருக்கடிக்கு அமைதிக்கான நோபல் பரிசு பெற்ற தவக்குல் கர்மான் சமாதானத் தீர்வுத் திட்டமொன்றை முன்வைத்துள்ளார். நிலைமாறும் அரசுக்கு அதிகாரங்களைப் பகிர்வதற்கும், போரில் கலந்து கொள்ளாத அனைத்துத் தரப்பினருக்கும் அரசியல் பங்கேற்பு உரிமையை வழங்குவதற்கும் அவரது யோசனைத் திட்டம் முன்னுரிமை வழங்குகின்றது.

''நான் ஒரு பிரஜை என்ற வகையில் நாட்டின் தற்போதைய சூழ்நிலையைக் கருத்திற் கொண்டு, எனது நாட்டில் சமாதானத்தை உறுதி செய்யும் வகையில் இந்தத் தீர்வுத் திட்டத்தை முன்மொழிகின்றேன்'' என அவர் குறிப்பிட்டார்.

''நாம் ஒரு சர்வதிகார ஆட்சியாளரை தூக்கியெறிந்தோம். ஒரு நிலை மாறும் அரசாங்கத்தை உருவாக்கினோம். ஒரு புதிய அரசியலமைப்புச் சட்டத்தை வரைவதற்குத் தொடங்கினோம். எனினும், ஹூதிகள் மேற்கொண்ட இராணுவப் புரட்சி அனைத்தையும் குழப்பிவிட்டது'' என அவர் மேலும் தெரிவித்தார்.



# சர்வதேசப் பார்வை

# சிரியாவில் மயிர்க் கூச்செறியும் கூட்டுப் படுகொலைகள்!

## அமைதி காக்கும் அறபு நாடுகள்



அலெப்போ நகர் மீது கூட்டு இராணுவ சக்திகள் மேற்கொண்டு வரும் கனரக விமானக் குண்டுவீச்சுத் தாக்குதலில் பல்லாயிரக்கணக்கான மக்கள் பலியாக்கப்பட்டுள்ளனர். ஒரு வாரத்தில் சுமார் 600 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

விமானக் குண்டுத் தாக்குதலில் கொல்லப்பட்டவர்களில் அநேகமானோர் பெண்களும் குழந்தைகளும் என மதிப்பிடப்பட்டுள்ளது. அலெப்போ ஊடக நிறுவனம் வெளியிட்டுள்ள சமூக வலைத் தள காட்சிகள் சிரியாவில் நடைபெறும் யுத்தம் எவ்வளவு குரூரமானது என்பதை மீளவும் உலகத்திற்கு உணர்த்தியுள்ளது.

உம்ரான் தக்னீஷ் எனப்படும் 5 வயது சிறுவன் இடிபாடுகளின் கீழிலிருந்து மீட்கப்படும் காட்சியும் அவனுக்கு சிகிச்சையளிக்கப்படும் காட்சிகளும் நெஞ்சை உருக வைக்கின்றன. நூற்றுக்கணக்கான குழந்தைகள் இவ்வாறு இடிபாடுகளின் கீழ் சிக்கியுள்ளதாக அலெப்போ ஊடக நிறுவனம் கூறுகின்றது.

இதேவேளை, உம்ரானின் மூத்த சகோதரன் தாக்குதலில் காயமடைந்து உயிரிழந்துள்ளான். அலெப்போ நகரை கைப்பற்றியதைத் தொடர்ந்து சிரிய அரச படையினரின் தாக்குதல் மூர்க்கத்தனமாகக் கட்டவிழ்க்கப்பட்டது. இத்தாக்குதலில் ஈரானின் புரட்சிகர இராணுவம், ஈராக்கின் அரச படையினர், லெபனானின் அரச படைக்கு வெளியில் செயல்படும் ஈரானின் கைக்கூலிகளால ஹிஸ்புல்லா இயக்கம், பஷ்ஷாரின் அரச படையினர் என நான்கு நாடுகளின் தாக்குதல்களுக்கு அலெப்போ இரையாக்கப்பட்டுள்ளது.

ரஷ்யாவின் தலையீடு நெருக்கடியை மென் மேலும் கூர்மைப் படுத்தியுள்ளதாக பாரிய குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன. ஈரானின் நுஜா விமானத் தளத்திலிருந்து ரஷ்ய விமானங்கள் அலெப்போவின் குடியிருப்புப் பகுதிகள் மீது மேற்கொண்ட தாக்குதலில் நூற்றுக்கணக்கான குழந்தைகள் உயிரிழந்துள்ளன.



5 வயதான உம்ரானின் வீட்டின் மீதும் ரஷ்ய விமானங்களே குண்டுத் தாக்குதலை நடத்தியுள்ளதாக கிளர்ச்சியாளர்கள் குற்றம் சாட்டுகின்றனர். ரஷ்யா இதை மறுத்துள்ளபோதும், சிரியாவில் ரஷ்யாவின் இராணுவத் தலையீட்டை எவ்வகையிலும் நியாயப்படுத்த முடியாது என மனித உரிமைகளுக்கான சிரியாவின் கண்காணிப்பகம் கூறுகின்றது.

வரலாற்றில் முன்னொருபோதும் இல்லாத வகையில் மிகக் குறைந்த காலப் பகுதிக்குள் பெருந்தொகை மக்கள் அலெப்போ நகரில் கொல்லப்படுவதற்கு மேற்குறித்த நான்கு நாடுகளோடு ரஷ்யாவும் இணைந்து கொண்டதே பிரதான காரணம் என இராணுவ ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

மேற்குறித்த நான்கு நாடுகளும் ஷீஆ கொள்கையை அரச கொள்கையாக கடைப்பிடித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. அலெப்போ நகர் எதிர்கொண்டுள்ள பாரிய மனிதாபிமான நெருக்கடிகளுக்கும் உயிர்ச் சேதங்களுக்கும் இந் நான்கு நாடுகளுடன் ரஷ்யாவும் பொறுப்புக் கூற வேண்டும் என அந்நிறுவனம் கூறுகின்றது.

இதேவேளை, யெமன் மீது கடந்த சில ஆண்டுகளாக வான் தாக்குதல்களை மேற்கொண்டு வரும் சவூதி அறேபியா தலைமையிலான வளைகுடா நாடுகளின் கூட்டமைப்பு அலெப்போ நகர் மீதான கூட்டுச் சக்திகளின் தாக்குதல் குறித்து மௌனம் காத்து வருவது மிக ஆபத்தான அறிகுறி என்று எச்சரிக்கப்படுகின்றது.

இவ்வாறான அறபு நாடுகளின் கூட்டணியொன்று சிரியாவின் விவகாரத்தைக் கையாள்வதற்கு களமிறங்குமானால் அது பிராந்தியத்தில் சுன்னி-ஷீஆ பதட்ட நிலையை மேலும் தீவிரப்படுத்தும் என அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

எவ்வாறாயினும், சிரியாவின் கொதி நிலையில் சர்வதேச சமூகம் உடனடியாக தலையீடு செய்ய வேண்டிய தேவையை அலெப்போ தாக்குதல்கள் வலியுறுத்தியுள்ளன.

## ஈரானின் விமானத் தளத்தை பயன்படுத்தி வரும் ரஷ்யா

சிரியா மீது தாக்குதல் நடத்துவதற்கு ரஷ்யா ஈரானிய விமானத் தளமொன்றை கடந்த காலங்களில் பயன்படுத்தி வந்துள்ளமை தெரிய வந்துள்ளது. கடந்த வாரம் ஈரானின் விமானத் தளத்திலிருந்தே ரஷ்யாவின் tupolev-22M3 குண்டுவீச்சு விமானங்களை ரஷ்யா இயக்கியது.

ஈரானின் ஹமதான் நகருக்கு சமீபமாகவுள்ள நுஜா விமானத் தளத்திலிருந்து சிரியாவை நோக்கி ரஷ்ய விமானங்கள் குண்டுத் தாக்குதல்களை மேற்கொண்டன. ரஷ்யாவின் நடவடிக்கை குறித்து கடும் விமர்சனங்கள் உள்ளூரிலும் சர்வதேச அளவிலும் எழுந்ததை அடுத்து இதற்கு மேல் ரஷ்யாவுக்கு விமானத் தளம் வழங்கப்பட மாட்டாது என ஈரான் அறிவித்துள்ளது. ஆயினும். இதை நம்ப முடியாது என அறபு நாடுகள் தெரிவித்துள்ளன.

அலெப்போவில் கடந்த வாரம் மேற்கொள்ளப்பட்ட கடும் வான் தாக்குதலில் ரஷ்ய விமானங்களும் ஈடுபட்டன. இதனால் உயிரிழந்தோர் தொகை ஒரு வாரத்தில் 600 இற்கும் அதிகம் என மதிப்பிடப்பட்டுள்ளது.

# ஈரான் எதிர்க்கட்சியினரை பிரான்ஸில் சந்தித்த சவூதி இளவரசர்



ஈரானின் எதிர்க்கட்சி இயக்கத்தை சவூதி அறேபியாவின் இளவரசர் துருக்கி அல் பைஸல் பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் சந்தித்து உரையாடியுள்ளார். பைஸல் சவூதி அறேபியாவின் முன்னாள் இராணுவத்துறை பணிப்பாளர். பாரிஸில் உரையாற்றிய அவர் 1979 ஈரானிய புரட்சியின் தலைவர் கொமைனியை குற்றம்சாட்டினார். ஈரானிய புரட்சியை வேறு பல நாடுகளுக்குப் பரப்புவதற்கு ஈரான் முயன்றது. இதனால் அந்நாடு தனிமைப்பட்டது. அதனால் இன்றைய ஈரானின் அரசியல் கட்சிகள் உள்ளிட்டு மத இனச் சிறுபான்மைகளும் ஈரானின் சர்வதிகார ஆட்சியை எதிர்க்கின்றனர் என அவர் குறிப்பிட்டார். கொமைனியின் முதல் பலிக்கடாக்கள் ஈரானிய மக்களே எனத் தெரிவித்த அவர், ஈரானிய மக்களை அறேபியர்கள் எப்பொழுதும் மதித்து வருகின்றனர் எனவும் குறிப்பிட்டார்.

ஈரான் எதிர்ப்பு தேசிய சபையின் தலைவர் மர்யம் ரஜாவி அங்கு உரையாற்றுகையில், ஒவ்வொரு நாளும் ஈரானிய அரசாங்கத்தின் மீதான மக்களின் அதிருப்தி அதிகரித்து வருவதாகக் குறிப்பிட்டார்.

# பலஸ்தீன் - இஸ்ரேல் பேச்சுவார்த்தைக்கு ரஷ்யா மத்தியஸ்தம்?



இஸ்ரேல் பிரதமர் நெடன் யாஹூவுக்கு பலஸ்தீன் ஜனாதிபதி மஹ்மூத் அப்பாஸுக்கும் இடையிலான உத்தேச அமைதிப் பேச்சுவார்த்தைக்கு மத்தியஸ்தம் வகிப்பதற்கு ரஷ்யா விருப்பம் திரிவித்துள்ளதாக எகிப்திய ஜனாதிபதி ஸீஸி தெரிவித்துள்ளார். ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் தன்னிடம் இவ் விருப்பத்தைத் தெரிவித்ததாக நேர்காணல் ஒன்றின் போது ஸீஸி தெரிவித்தார்.

பத்தாஹ் இயக்கத்திற்குள் நிலவும் உள்ளக முரண்பாடுகள் களையப்படுவதோடு, ஹமாஸ்-பத்தாஹ் இயக்கங்களுக்கிடையிலான கருத்து வேறுபாடுகளும் தீர்க்கப்பட வேண்டும் என ஸீஸி கூறினார். புட்டின் தன்னுடனான உரையாடலில் பின்வருமாறு கருத்து வெளியிட்டதாக ஸீஸி தெரிவிக்கின்றார்.

''சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்புகளோடும் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு நாம் தயாராகவுள்ளோம். அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் அகியவற்றோடு பேசுவதற்கும் நாம் தயார் என புட்டின் கூறியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எரிக்கப்பட்ட மஸ்ஜித் அக்ஸா நினைவுகளும் கடமைகளும்

**அஷ்ஷெய்க் யூ.கே.றமீஸ் (நளீமி)**
**விரிவுரையாளர், பாதிஹ் கல்வி நிறுவனம்**

21/08/1969 என்ற தினம் ஒரு முஸ்லிம் மறக்க கூடாத மறக்க முடியாத ஒரு தினமாகும். அன்றுதான் எமது முதல் கிப்லாவும் மூன்றாவது புனிதத்தலமுமான மஸ்ஜித் அக்ஸா தீ மூட்டப்பட்டதினமாகும். இன்று 47 வருடங்களாகிவிட்டன. இது ஏனைய பள்ளிவாசல்களை போன்று ஒரு சாதாரண பள்ளிவாசல் அல்ல. இது ஒரு சாதாரண பிரச்சினையுமல்ல. இது அகீதாவோடு தொடர்பான ஒரு முதன்மைப் பிரச்சினையாகும். இவ்வகையில் இதன் முக்கியத்துவம், இதன் மீதான எமது கடமைகள் போன்றவற்றை நோக்குவது மிகவும் பொருத்தமானது என்று கருதுகின்றேன்.

**மஸ்ஜித் அக்ஸாவின் முக்கியத்துவம்**

மக்காவில் உள்ள மஸ்ஜிதுல் ஹராம் மதீனாவிலுள்ள மஸ்ஜிதுன் நபவியை தொடர்ந்து இது முக்கியத்துவம் பெறுகின்றது. இப்பள்ளிவாசலை தரிசித்து வணக்க வழிபாடுகளில் ஈடுபடுவது சுன்னத்தாகும். புனித பயணம் மேற்கொள்ள அனுமதிக்கப்பட்ட மூன்று பள்ளிவாசல்களும் இவைதான். இங்கு தொழுவது 500 மடங்கு நன்மைகளை பெற்றுத்தரக்கூடியது.

மூன்று பள்ளிவாசல்கள் தவிர்ந்து ஏனைய இடங்களுக்கு புனித பயணம் மேற்கொள்ள கூடாது. அவை மஸ்ஜிதுல் ஹராம், எனது இந்தப்பள்ளிவாசல் (மஸ்ஜிதுன்நபவி) மஸ்ஜிதுல் அக்ஸா போன்ற வையாகும். (புகாரி/முஸ்லிம்/இப்னு மாஜா /அபூதாவுத்)

மஸ்ஜிதுல் ஹராமில் தொழுவது (ஒரு லட்சம் மடங்கு நன்மையை தரும். எனது பள்ளியில் (மஸ்ஜிதுன்னபவி) தொழுவது 1000 மடங்காகும். பைதுல் மக்திஸில் தொழுவது 500 மடங்கு நன்மைகளைத்தரும். (தபரானி)

நபி(ஸல்) அவர்கள் மதீனாவுக்கு முதலாவது முறை வந்தபோது அன்சாரிகளின் காணியில் இறங்கி பைதுல் மக்திஸை நோக்கி தொழுதார்கள். (புஹாரி)

நபி (ஸல்) அவர்கள் மக்காவில் இருக்கும்போது (ஹிஜ்ரத்துக்கு முன்னர்) பைதுல் மக்திஸை நோக்கி தொழுதார்கள். ஹிஜ்ரத்தின் பின்னர் 16 மாதங்கள் பைதுல் மக்திஸை நோக்கி தொழுதார்கள். பின்னர் கஃபாவை நோக்கி முகத்தை திருப்பினார்கள். (இமாம் தபரி தனது வரலாற்றில் அறிவிப்பவர் கதாதா(ரழி)

பூமியில் முதலாவது தோன்றியபள்ளிவாசல் எது? என்றுநான் நபி (ஸல்) அவர்களிடம் கேட்டேன். அதற்கவர் ''மஸ்ஜிதுல் ஹராம்''என்றார்கள். அதன்பிறகு எது என்று நான் கேட்டபோது'' அல் மஸ்ஜிதுல் அக்ஸா''என்றார்கள்.

பைதுல் மக்திஸ் தொடர்பாக எங்களுக்கு சொல்லுங்கள் என்று நாம் கேட்டபோது''அங்குசென்று தொழுகையை நிலைநாட்டுங்கள். உங்களுக்கு அங்குபோக முடியாவிட்டால், விளக்கெறிக்க எண்ணெய் அனுப்புங்கள் என்றார்கள். (அறிவிப்பாளர் மைமூனா (ரழி))

முஃமின்களின் தாயும் நபி (ஸல்) அவர்களின் மனைவியுமான உம்மு ஸலமா (ரழி) அவர்கள் அறிவிக்கும் ஹதீஸ் ''யார் மஸ்ஜிதுல் அக்ஸாவிலிருந்து உம்றாவுக்கு அல்லது ஹஜ்ஜுக்கு செல்கிறாரோ அவரது முன் பின் பாவங்கள் மன்னிக்கப்படும். அல்லது அவருக்கு சுவனம் கடமையாகி விட்டது என்று கூறிவிட்டு' 'வகிஃ அவர்களுக்கு அல்லாஹ் அருள்புரியட்டும். அவர் பைதுல் மக்திஸில் இஹ்ராம் கட்டிவிட்டு(மக்காவுக்குசென்றார்''என்றுநபி (ஸல்) அவர்கள் கூறியதை நான் செவிமடுத்தேன் என்றார்கள். (அபூ தாவுத்)

பைஹகி, இப்னு ஹிப்பான் போன்ற கிரந்தங்களில் வரும் ஹதீஸ் ''யார் மஸ்ஜிதுல் அக்ஸாவிலிருந்து உம்ராவுக்கு செல்கிறாரோ அவரது முன் பாவங்கள் மன்னிக்கப்படும் என்று நபியவர்கள் கூறினார்கள். இவ்வாறு கூறிவிட்டு உம்மு ஹகீம் அவர்கள் பைதுல் மக்திஸுக்கு சென்று அங்கிருந்து உம்ராவுக்கு வந்தார்கள் என்று கூறினார்.

எனது சமூகத்தில் ஒருசாரார் சத்தியத்தில் மிகைத்தும், எதிரிகளை அடக்கிக் கொண்டும் இருப்பார்கள். அவர்களோடு மோதுவது சில பலவீனங்கள் ஏற்படுவதை தவிர - பெரிய பாதிப்பு எதனையும் ஏற்படுத்தாது. அல்லாஹ்வின் கட்டளை வரும் வரை அவர்கள் அதே நிலையில் தொடர்ந்திருப்பார்கள். அப்போது சஹாபாக்கள் ''அவர்கள் எங்கு இருக்கிறார்கள்? என்றுகேட்ட போது ''பைதுல் மக்திஸிலும் அதனைச் சூழவுள்ள பிரதேசங்களிலும்'' என்று குறிப்பிட்டார்கள். (அஹ்மத்ஃதபறானி)

இது அருள்புரியப்பட்ட பூமி என்று அல்குர்ஆன் குறிப்பிடுகிறது. ''தனது அடியானை இரவில் மஸ்ஜிதுல் ஹராமிலிருந்துஅருள் சூழப்பட்ட மஸ்ஜிதுல் அக்ஸாவுக்கு அழைத்து சென்றவன் மிகவும் தூய்மையானவன்'' (இஸ்ரா-01) இங்கு மஸ்ஜிதுல் அக்ஸாவை சூழ அருள் செய்திருப்பதாக, பரகத் உள்ளதாக அல்லாஹ் குறிப்பிடுகிறான். இந்த அருள் அறிவு, பொருளாதாரம், ஆன் மீகம், உற்பத்தி போன்ற பல துறைகளில் காண்கிறோம்.

''நாம் அவரையும் (இப்றாஹீம் அலை) லூத் (அலை) அவர்களையும் அருள் செய்யப்பட்ட பூமியில் பாதுகாத்தோம். (அன்பியா 71) இது ஷாம் பூமியை குறிப்பதாக இமாம் இப்னு கஸீர் குறிப்பிடுகிறார். இது பலஸ்தீனை மிக குறிப்பாக குறித்துக்காட்டும் ஒரு வசனமாகும்.

**மஸ்ஜித் அக்ஸா என்பது எதனைக் குறிக்கும்?**

அக்ஸா என்பது உமைய ஆட்சியாளர் அப்துல் மலிக் இப்னு மர்வானால் நபியவர்கள் தடம்பதித்து இராப் பயணம் (மிஃராஜ்) சென்ற கற்பாறையின் மீது கட்டப்பட்டது. மட்டமுள்ள அழகிய கட்டிடமான குப்பது ஸக்ராவை (Dome of The Rock) குறிப்பதாக சிலர் நினைக்க அது உமர் (ரலி)அவர்களால் கட்டப்பட்ட மஸ்ஜிதுல் கிபலி என்று வேறு சிலர் வியாக்கியானம் கூறுகின்றனர். அக்ஸா வளாகத்தில் உள்ள முக்கியமான அடையாளங்களே இவையாகும்.

அக்ஸா என்பது வடக்காக 310 மீட்டர் அகலமும் கிழக்காக 362 மீட்டர் நீளமும் தெற்காக 281 மீட்டர் அகலமும் மேற்காக 491 மீட்டர் நீளமும் கொண்டநான்கு சுவர்களுக்கும் உட்பட்ட பகுதியாகும். இது குத்ஸ் நகரத்தில் அமைந்துள்ளது. குப்பது ஸக்ரா, மஸ்ஜிதுல் கிபலிஇந்த இரண்டில் எந்தவொன்றையும் அக்ஸா என்று குறிப்பிடுவதற்கு நாம் மறுப்பு சொல்ல தேவையில்லை. இரண்டின் மூலமும் அக்ஸா மீதானபற்றை ஏற்படுத்துவதுதான் எமது இலக்காக இருக்க வேண்டும்.



எரிக்கப்பட்டநிகழ்வுகள்

சுற்றுலாவிசாவில் பிரவேசித்த டெனிஸ் மைகல் ரொஹான் என்ற அவுஸ்திரேலிய நாட்டு பிரஜையும் யூத குழுக்களும் இணைந்து மேற்கொண்ட நாசகார செயல்பாட்டின் காரணமாக 21/08/1969 ஆம் தினத்தில் மஸ்ஜிதுல் அக்ஸாவில் அமைந்துள்ள மஸ்ஜிதுல் கிபலியின் தென்பகுதி பெரும் பாதிப்புக்குள்ளாகி விட்டது. அக்ஸாவின் சுவர்கள், தளபாடங்கள், நூருத்தீன் மஹ்மூத் ஸன்கி அவர்களால் தயாரிக்கப்பட்டு சலாஹுத்தீன் ஐயூபியினால் வைக்கப்பட்ட சிலுவையுத்த வெற்றியின் சின்னமான மிம்பர் உட்படமஸ்ஜித் கிப்லியின் 1/3 பகுதி (4500 மீட்டர் பரப்பில் 1500 மீட்டர் பரப்பு) எரிந்து நாசமாகியது. அதன் பழைமை பொருந்திய வேலைப்பாடுகள், தூன்களுக்கு கூட பெரும் பாதிப்பு ஏற்பட்டது. அதன் கூரையும் குப்பாவை சுமந்திருந்த இரண்டு பிரதான தூண்களும் இடிந்து விழுந்து விட்டன. வேலைப்பாடுகள் நிறைந்த தூய வெள்ளியினாலானமினுமினுப் பானகுப்பா, மிஹ்ராப், தென்சுவர், வர்ணம் தீட்டப்பட்ட கண்ணாடிகளாலான 74 யன்னல்கள், போன்றவையும் பலத்த சேதங்களுக்குட்பட்டன. சுஜூத் செய்வதற்கான விரிப்பு முற்றாக எரிந்து நாசமாகியது. இது 1969 இல் நிகழ்ந்த நிகழ்வாகும்.


இதன் பின்னரும் பல அநீதிகளை அதற்கு செய்துள்ளார்கள். பலஸ்தீனர்கள் அதனை இலகுவில் நெருங்க முடியாத பிரகாரம் மதில்களை அமைத்துள்ளனர். அதன் கீழால் சுரங்கங்களை தோண்டியுள்ளனர். அதற்குள் பிரவேசிக்க தடைவிதிக்கின்றார்கள். மேற்குப்புறவாயிலால் (Magarib Gate) அடிக்கடி நுழைந்து தௌராத்தியவணக்கங்களில் ஈடுபடுகின்றனர். இங்கு யூதர்கள் கூடி வணக்கங்களில் ஈடுபடுவதற்காக வேண்டி முஸ்லிம்கள் வந்து போக முடியாத பிரகாரம் பாலம் அமைத்துள்ளார்கள். பலாத்கார பிரவேசத்திற்கு அறைகூவல் விடுத்து ஆக்கிரமிப்பு இராணுவத்தின் துணையுடன் பலப் பிரவேசம் மேற்கொள்கின்றனர்.

இந்த ரமழானில் கூட(26/06/2016) மஸ்ஜிதுல் கிபலியில் ஆட்கள் பிரவேசிக்க முடியாமல் சங்கிலிகளால் பிணைத்து விட்டார்கள். உணர்வுள்ள இளைஞர்கள்

---

# பாலைவனச் சிங்கம்

**(சுலைமான் ஹாதிர்)**



**வரலாற்று நவீனம் அங்கம் - 14**

ஹமதானி


## சட்டம் ஒரு கழுதை

அரச வக்கீல் இதற்கு விடை கூறமுடியாமல் அதிலிருந்து நழுவும் விதத்தில் பின்வருமாறு கூறினார். ''ஆரம்பத்தில் அச்சத்தை ஏற்படுத்த துப்பாக்கியால் வானை நோக்கி சுட்டு அவர்களைக் கலைத்திருக்கலாமே''

உம்மாத் சுப்கி: ''அவர்களும் ஆயுதம் வைத்திருக்கும் பொழுது சுலைமான் வானை நோக்கி சுட்டு என்ன பயன்? சுலைமானிடமே இது பற்றி விசாரியுங்கள்''

அரச வக்கீல்: ''சுலைமான் அவர்களிடம் ஆயுதம் இருப்பதைக் கண்டாயா?''

சுலைமான்: ''அவர்களிடம் ஆயுதங்களிருந்தன. அவற்றைக் காட்டி மிரட்டியதிலிருந்து எமது ஆயுதங்களைப் பறித்து மைத் தாக்கத்தான் வருகின்றனர் எனக் கருதினேன். அவ்வேளை தான் உடமைகளையும் உயிரையும் ஏன் நாட்டின் எல்லையையும் பாதுகாக்க நாம் ஆயுதங்களைப் பிரயோகிப்பதைத் தவிர வேறு



வழி இருக்கவில்லை''

உம்மாத் சுப்கி: ''எமது நாட்டின் சட்ட அமைப்பே இவ்வாறான ஒரு சந்தர்ப்பத்திலே கொலை புரிவது குற்றமல்ல என்கின்றது. எகிப்திய தண்டனைச் சட்டம் இலக்கம் 249 மற்றும் 246 என்பவற்றுக்கிணங்க தனது உயிர் உடமை என்பவற்றைப் பாதுகாப்பதற்காக சட்டரீதியானதொரு உரிமையையே சுலைமான் ஹாதிர் பயன்படுத்தியுள்ளார். இச்சட்டங்கள் ஒருவர் தனது உயிர் மற்றும் உடமைக்கு திடீரென அபாயம் ஏற்படும் அல்லது ஏற்படலாம் என எதிர்பார்க்கும் அபாயம் என்பவற்றிலிருந்து தற்காத்துக்கொள்ள எதிரியைக் கொல்வது குற்றமல்ல. எதிரியினால் ஏற்படும் சேதம் எதிர்பார்த்ததைவிட சிறியதாக இருப்பினும் சரியே என்கின்றன. எனவே, எகிப்திய சட்டங்களும் சுலைமான் ஹாதிரின் செயலை அங்கீகரிக்கின்றதே''

அரச. வக்கீல்: '' சுலைமானே! உன்னை அவர்கள் கொன்று விடுவார்கள். ஆயுதங்களைப் பறிப்பார்கள் என்று கருதித்தானே துப்பாக்கிப் பிரயோகம் செய்தாய்?''

சுலைமான்: ''அந்த சூழ்நிலையில் அவர்களது நடவடிக்கைகள் அவ்வாறுதான் அமைந்திருந்தன''

உம்மாத் சுப்கி: ''அவர்கள் சுலைமானைத் தாக்கலாம் என்ற சூழ்நிலையில் அவர்கள் உண்மையிலே தாக்க முன் சுலைமான் துப்பாக்கியைப் பிரயோகித்ததும் சட்ட விரோதமானதல்ல. ஏனெனில், எமது நாட்டு அப்பீல் கோர்ட் வழங்கிய தீர்ப்பொன்று இவ்வாறு கூறுகிறது. ''சட்ட ரீதியான உரிமையைப் பயன்படுத்தி தன்னைத் தற்காத்துக் கொள்ள நாடுபவருக்கு அங்கே உண்மையான எதிரி இருக்க வேண்டும் என்பதில்லை, சூழ்நிலைகளைக் கவனத்தில் கொண்டு அவனால் எதிர்ப்பு ஏற்படலாம் எனக் கருதும்படியாக இருந்தாலே போதும்'' எனவே இப்பொழுது கூறுங்கள் சுலைமான் ஹாதிர் செய்தது குற்றம் தானா?

சுலைமானின் தரப்பு சட்டத்தரணி உம்மாத் சுப்கி கணைகளாகத் தொடுத்த கேள்விகளுக்கு அர சவக்கீல் சரியான விடை கூறாமல் சட்டம் சுலைமானைக் [illegible] வேண்டும் என்பதையே குறியாக வைத்து தாறுமாறான கேள்விகளைக் கேட்டார்.

''எல்லைப் புற இராணுவத் தளபதியின் அனுமதியைப் பெறாமலே சுலைமான் சட்டரீதியற்ற முறையில் துப்பாக்கியைப் பிரயோகித்துள்ளார். எனவே, அதன் மூலம் நிகழ்ந்த கொலையும் குற்றமே''

நிரபராதி சுலைமானை எப்படியும் குற்றம் பிடிக்க வேண்டும் என்பதிலேயே அநியாயக்காரர்கள் அழுங்குப் பிடியாக இருக்கும் வேளை, எப்படியும் தன்னால் இயன்ற முயற்சிகளைச் செய்து அவனைக் காப்பாற்ற வேண்டும் என்றதில் உம்மாத் சுப்கி முதலைப் பிடியாக நின்று வாதிக்கலானார்.

''இந்த வேளை சுலைமான் இராணுவத் தளபதியின் உத்தரவைப் பெறாதது குற்றமன்று. ஏனெனில், சுலைமான் நாட்டின் எல்லைப் பாதுகாப்புக்குப் பொறுப்பான இராணுவத்தினன் என்ற அடிப்படையில் பொதுவான ஒரு அதிகாரியாக இருக்கும் போதுதான் இதனைச் செய்தார். மேலும், தனது ஆளுமைக்குட்பட்ட ரீதியில் அதனை ஒரு நல்ல செயல் எனக் கருதியே செய்தார். மேலும், இவ்வாறு செய்யப்படும் செயல் குற்றமில்லை என எகிப்தின் 63ஆம் இலக்க சட்டம் கூறுகின்றது. அதாவது ''ஒரு பொது அதிகாரியின் மூலம் நடைபெறும் செயல்கள் இரு சந்தர்ப்பங்களில் குற்றங்களாகக் கருதப்படமாட்டாது.

ஒன்று- தலைவரின் கட்டளையை நிறைவேற்றச் செய்யும் செயல்.

அடுத்தது : தனது ஆளுமைக்கு உட்பட்ட ரீதியிலும் சட்டரீதியிலும் குறிப்பிட்ட ஒரு செயலைச் செய்வது குற்றமில்லை. வேறு ஒரு கோணத்தில் நோக்கினாலும் சுலைமான் செய்தது குற்றமன்று என்பது தெளிவாகும். அதாவது அகபாக் குடாப்பகுதயின் கிழக்குப் பகுதியில் எகிப்தின் எல்லையைப் பாதுகாக்கவும் கண் காணிக்கவும் சேவைபுரியவும் நிறுத்தப்பட்ட ஒரு இராணுவ வீரனுக்கு சட்டம் வழங்கும் அதிகார உரிமையை சுலைமான் ஹாதிர் பயன்படுத்தினார்.

இந்த அதிகார உரிமையை தேவைப்படும்போது நிறைவேற்றுவதற்காக ஆயுதங்கள் வழங்கப்பட்டே இருந்தன. மேற்படி சம்பவத்தின் போது துப்பாக்கியைப் பிரயோகித்தார் என்றால் அது அவரது அதிகார உரிமையை நிறைவேற்றியதாகவே அமையும். எனவே, இது குற்றமல்ல. ஏனெனில் எகிப்தின் 7ஆம் இலக்கச் தண்டனைச் சட்டத்தில் கீழ்வருமாறு குறிப்பிடப்படுகின்றது.

لاَ جَرِيْمَةَ إِذَا وَقَعَ الْفِعْلُ اسْتِعْمَالاً لِحَقٍّ مُقَرَّرٍ بِالشَّرِيْعَةِ

ஷரீஆ சட்டம் ஏற்றுள்ள ஒரு உரிமையைப் பயன்படுத்தும் நோக்கில் குறித்த செயல் நிகழ்ந்தால் அது குற்றமாகக் கருதப்படமாட்டாது! இவ்வாறாக வழக்கு தொடர்ந்தது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எகிப்தின் இராணுவக் கும்பல் மீது ஒரு சாட்டையடி

## மனித உரிமைக் கண்காணிப்பகம் வெளியிட்டுள்ள அறிக்கை



ரபா அல் அதவிய்ய மைதானத்தில் காலுடைந்து போய் அவதிப்பட்டுக் கொண்டிருக்கின்ற ஒருவரை அங்கிருந்த வைத்தியர் ஒருவர் இவருக்கு சிகிச்சையளிப்பதற்கு இங்கு வசதிகள் இல்லை என ஒரு இராணுவ வீரரிடம் தெரிவித்தபோது அவர் சொன்ன பதில் இது. ''வைத்தியரே கவலைப்பட வேண்டாம். நான் அவரது இதயத்தை உடைந்து விடுகிறேன். பின்னர் காலுடைந்தவர் மீது துப்பாக்கியை அவரது நெஞ்சில் வைத்து சுடுகின்றார் அந்த இராணுவ வீரர். உடனே அவர் அங்கு ஷஹீதாகி விடுகிறார்.

2013 ஜூலையில் எகிப்திய இராணுவம் தமது மக்கள் மீது கட்டவிழ்த்த இந்தக் கொடூரமான கொலை வெறித் தாக்குதல்கள் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டவை. நவீன எகிப்தின் வரலாற்றில் நடைபெற்ற மிக மோசமான சட்டவிரோதக் கொலைகள் இவை என மனித உரிமைக் கண்காணிப்பகம் வெளியிட்டுள்ள அறிக்கை இராணுவத்தை குலைநடுங்கச் செய்துள்ளது. அந்த அறிக்கையின் படி ஸீஸியும் அவனது இராணுவக் கும்பலும் செய்த அநியாயங்கள் மனித குலத்திற்கு எதிரான குற்றங்களாகும்.

2013 ஜூலை மற்றும் ஒகஸ்ட் மாதங்களில் இராணுவம் நடத்திய தேசிய பாதுகாப்புக் கூட்டங்கள் மற்றும் இரகசிய சந்திப்புக்களின் பின்னர் இராணுவப் புலனாய்வுத் துறையினர், பொலிஸ் அதிகாரிகள் மற்றும் சில அரசியல்வாதிகளை உள்ளடக்கிய குழுவொன்று நியமிக்கப்பட்டது. அதுவே கெய்ரோவில் அமைதி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த மக்கள் மீதும் கீஸாவில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் மீதும் துப்பாக்கிச் சூடு நடத்துவதற்கான பொறுப்பை ஏற்றுக்கொண்டிருந்தது.

ரபா அல் அதவிய்யா சதுக்கத்திலும் நஹ்ழா சதுக்கத்திலும் கொல்லப்பட்டோர் தொகை சரியாக எத்தனை என்று இது வரை தெரியவில்லை. அதை அறியும் ஆர்வமும் இராணுவத்திற்கு இல்லை. கொல்லப்பட்டோர் தொகை தொடர்பான தரவுகளைச் சேகரிப்பதற்கும் இராணுவம் தடைவிதித்துள்ளது.

எரிக்கப்பட்டு கொல்லப்பட்டவர்களின் குடும்பத்தினர் வைத்தியசாலைக்குச் சென்று ஜனாஸாக்களை பொறுப்பேற்பதற்கு அச்சம் தெரிவித்தனர். இராணுவ அரசின் சுகாதார அமைச்சு கொல்லப்பட்டோர் தொகை 600 என்கிறது. சகோதரத்துவ இயக்கம் 2500 இற்கும் அதிகம் என்கிறது. மனித உரிமைக் கண்காணிப்பகம் 1000 இற்கும் அதிகம் என்கிறது.

ஒரேயொரு விடயத்தில் எல்லோரும் உடன்படுகின்றனர். இத்தனை கொலைகளும் பத்து மணித்தியாலத்திலேயே இடம்பெற்றது என்பதுதான் உடன்பாடு. குடியரசுப் படை சதுக்கத்திலும் நஸ்ர் நகரிலும் நஹ்ழா சதுக்கத்திலும் இராணுவம் நடத்திய கொலைப் படலம் எகிப்தின் இன்றைய அரசாங்கத்தை ஆட்டம் காணச் செய்துள்ளது.

> ஜனநாயகத்தைப் பாதுகாப்பதாகக் கூறி வரும் மேற்குலகு எகிப்தில் நடந்த இராணுவப் புரட்சி அதனைத் தொடர்ந்து நடந்த கொலைகள் குறித்தும் கவனம் செலுத்த வேண்டும். ஜனநாயகம் என்பது தேச எல்லை கடந்த கருத்தியல் என்ற வகையில் நியூயோர்கில் அது எந்தளவு மதிக்கப்படுகின்றதோ அதே அளவுக்கு கெய்ரோவிலும் டமஸ்கஸிலும் திரிப்போலியிலும் அது மதிக்கப்பட வேண்டும்.

பூகோள ரீதியில் ஒரு நாட்டில் இடம்பெறும் அரசியல் படுகொலைகளுக்கு ஒரு நீண்ட அரசியல் தாக்கம் இருந்து வந்துள்ளது. 1972 இல் வடக்கு அயர்லாந்தில் 40 ஆர்ப்பாட்டக்காரர்களை பிரிட்டிஷ் இராணுவம் சுட்டுக் கொன்றமை அந்நாட்டில் பெரும் அரசியல் கொந்தளிப்பை உருவாக்கியது. பிரிட்டிஷ் இராணுவத்திற்கும் ஐரிஷ் குடியரசு இராணுவத்திற்கும் இடையில் மோதலைத் தோற்றுவித்தது. டேவிட் கெமரூனின் காலத்தில் (2010) பிரிட்டிஷ் அரசு இதற்கு மன்னிப்புக் கோரியது.

ஆஜன்டீனிய வரலாற்றில் 1976 இல் இராணுவ ஆட்சியாளர்கள் 30 பேரை படுகொலை செய்த சம்பவம் The Fatima Massacare எனப்படுகின்றது. 1985 இல் இக்கொலையில் ஈடுபட்ட இராணுவம் நீதிமன்ற விசாரணைக்கு உள்ளாக்கப்பட்டது. அதில் பலர் மரண தண்டனையை எதிர்கொண்டனர். அதில் முன்னாள் ஜனாதிபதிகளான ஜெனரல் லியோ போல்டோ, ஜெனரல் ஜோர்ஜ் விடலா போன்றவர்களும் அடங்குவர்.

அறபுலகிலும் இத்தகைய அரசியல் படுகொலைகள் நீண்ட காலமாக நிகழ்ந்து வருகின்றது. 1996 ஜூன் மாதம் கடாபியின் இராணுவம் லிபியாவில் மேற்கொண்ட அபூ ஸலீம் சிறைச்சாலைப் படுகொலை முக்கியமானது. இரண்டு நாள் நடைபெற்ற நர வேட்டையில் 1200 பேர் கொல்லப்பட்டனர். ஆனால், ஆஜன்டீனா, வட அயர்லாந்து போன்று லிபியா வில் யாரும் தண்டிக்கப்படவில்லை.

சத்தாம் ஹுஸைன் காலத்தில் துஜைல் படுகொலை என அறியப்படும் கொலைச் சம்பவத்தில் 148 துஜைல் பிரதேசவாசிகள் கொல்லப்பட்டனர். 1982 இல் நடைபெற்ற இச்சம்பவத்தை முன்னிறுத்தியே சத்தாமுக்கு அமெரிக்கா தூக்குத் தண்டனை வழங்கியது.

இப்போது இந்தப் படுகொலைகளின் புதிய அத்தியாயம் எகிப்தில் பலரை அதிர வைத்துள்ளது. இராணுவப் புரட்சியை நிறுத்த வேண்டும் என்று அமைதியாகக் கோரிய மக்கள் மீது துப்பாக்கிகள் திருப்பப்பட்டன. மேற்கு நாடுகளின் ஆதரவுடனான இராணுவமே இதன் பிரதான சூத்திரதாரிகள்.

எகிப்தில் நிலவும் அதிகாரச் சமநிலையின்மை அந்நாட்டில் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் நீதித் துறையை சுதந்திரமாக இயக்குவதற்கும் பாரிய சவாலாக மாறியுள்ளது. முர்ஸிக்கு ஆதரவான அமைதிப் பேரணியை கலைப்பதற்கு முன்னர் இராணுவம் மக்களைக் கலைப்பதற்கு வன்முறையைப் பிரயோகிக்க வேண்டும் என்று திட்டமிட்டிருந்தது. மக்களை பேச்சுவார்த்தை ஒன்றின் மூலம் கலைப்பதற்கான வாய்ப்பு இருந்தும்கூட, இராணுவம் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை.



முஹம்மத் அல்பராதி போன்றவர்கள் மக்கள் மீது இராணுவ அடக்குமுறையைக் கட்டவிழ்க்க வேண்டாம் எனக் கோரியிருந்தனர். வன்முறைகளைப் பிரயோகிக்காமல் அமைதி வழியில் மக்களைக் கலைப்பதற்கான திட்டமொன்றை சகோதரத்துவ இயக்கம் இராணுவத்திற்கு சமர்ப்பித்திருந்தது. இவை எதனையும் இராணுவம் கருத்திற்கொள்ளவில்லை. எனவே இராணுவம் மேற்கொண்ட தாக்குதல்களும் கொலைகளும் திட்டமிடப்பட்டவை என மனித உரிமை கண்காணிப்பகம் தனது அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.

குறிப்பாக ரபா அதவிய்யா சதுக்கத்தில் நடந்த இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டு சம்பவங்கள் ஏற்கனவே திட்டமிட்டது போன்றே நடந்து முடிந்தது. கடாபி மற்றும் ஹாபிஸ் அல் அஸத் போன்றே எகிப்தில் ஸீஸியின் இராணுவம் இன்று வரை செயல்படுகின்றது.

அரச நிறுவனங்களை ஜனநாயகமயப்படுத்துவதிலும் நாட்டின் அரசியல் நெருக்கடிக்குத் தீர்வு காண்பதிலும் இது பெரும் தடையாக உள்ளது. மக்களின் வாக்குகளை (Ballot) விட துப்பாக்கி வேட்டுக்கள் (Bullot) பலமானது என்றே இன்றுவரை ஸீஸி நம்புகின்றார். இதுதான் எகிப்தின் அரசியல் நெருக்கடி நீடிப்பதற்கான காரணமாகும்.

அறபு நாடுகளில் பொங்கியெழும் மக்களை ஆயுதம் கொண்டு அடக்குவது சிவில் சமூகங்களை வன்முறைகள் மூலம் கட்டுப்படுத்துவது உள்ளூர் மற்றும் பிராந்திய பயங்கரவாதங்களையும் ஆயுதக் குழுக்களையுமே உருவாக்கும் என்ற உண்மையை ஸீஸி மறந்துவிடக் கூடாது.

வாக்குகள், அரசியலமைப்பு, நல்லாட்சி, சமூக பொருளாதார அடைவுகள் என்பவைதான் ஆட்சியைத் தக்கவைப்பதற்கு முதன்மையான ஆயுதங்கள் என்பதை ஸீஸி அங்கீகரிக்க வேண்டும். ஆயுதங்களும் இராணுவ வன்முறைகளும் எந்தவொரு அறபு நாட்டினதும் பிரச்சினைக்குத் தீர்வல்ல. இந்த உண்மை லிபியாவுக்கு எப்படிப் பொருந்துமோ அது போன்று எகிப்துக்கும் பொருந்தும்.

ஜனநாயகத்தைப் பாதுகாப்பதாகக் கூறி வரும் மேற்குலகு எகிப்தில்' நடந்த இராணுவப் புரட்சி அதனைத் தொடர்ந்து நடந்த கொலைகள் குறித்தும் கவனம் செலுத்த வேண்டும். ஜனநாயகம் என்பது தேச எல்லை கடந்த கருத்தியல் என்ற வகையில் நியூயோர்கில் அது எந்தளவு மதிக்கப்படுகின்றதோ அதே அளவுக்கு கெய்ரோவிலும் டமஸ்கஸிலும் திரிப்போலியிலும் அது மதிக்கப்பட வேண்டும்.

# பொஸ்பரஸ் கரையினிலே...

## துருக்கியின் வீழ்ச்சியும் எழுச்சியும் - 03

கி.பி. 16 ஆம் நூற்றாண்டில் தென் மேற்கு ஆசியாவின் முக்கிய பகுதிகளையும் வட ஆபிரிக்காவின் முஸ்லிம் பிராந்தியங்களையும் உஸ்மானியர்கள் தமது ஆட்சியின் கீழ் கொண்டு வந்தனர். அந்த வகையில் லிபியா, தூனிசியா, அல்ஜீரியா, மொரோக்கோ, எகிப்து ஆகிய வடஆபிரிக்க பிரதேசங்களும் மத்திய கிழக்கில் தற்போதைய ஈராக்கின் முக்கிய பிரதேசங்களான பஸரா, பக்தாத், மௌசூல் என்பனவும் சிரியாவின் டமஸ்கஸ், எலெப்போ என்பனவும் அறபு தீபகற்பத்தின் ஹிஜாஸ், நஜ்த் என்பனவும் உஸ்மானியர் ஆட்சியின் கீழ் வந்தன. மத்திய கிழக்கில் யெமனும் முழுமையாக உஸ்மானியர் வசமாகியது.

கொன்ஸ்தாந்து நோபில் வெற்றியைத் தொடர்ந்து முக்கிய போல்கன் பிராந்தியங்கள் உள்ளிட்டு எட்ரியாட்ரிக் கடல் பிராந்தியமும் உஸ்மானியர் ஆதிக்கத்தின் கீழ் வந்தது. அந்த வகையில் ஏற்கனவே நாம் குறிப்பிட்டது போன்று கிரேக்கம், ஆர்மேனியா, உக்ரைன், ஜோர்ஜியா போன்ற துருக்கியின் எல்லைப் புற நாடுகளும், அல்பேனியா, சேர்பியா, மெசிடோனியா, பல்கேரியா, பொஸ்னியா ஹெஸகோவினா, ஸ்லோவேனியா, மொன்டநீக்ரோ ஆகியனவும் துருக்கிய உஸ்மானியர்களின் கட்டுப்பாட்டின் கீழ் வந்தது.

இதன் மூலம் உலக வரலாற்றில் மிகப் பெரும் நிலப்பரப்பை நூற்றாண்டுகள் ஆண்ட பெருமை உஸ்மானியர்களைச் சார்கின்றது. ஆசியா, ஐரோப்பா, ஆபிரிக்கா என மூன்று கண்டங்களிலும் சுமார் 30 நாடுகள் அவர்களின் ஆட்சியின் கீழ் இருந்தன. உஸ்மானிய கலீபா முஸ்லிம்களின் அரசியல் தலைவராக மட்டுமன்றி, ஆன்மீகத் தலைவராகவும் மதிக்கப்பட்டார்.

38 உஸ்மானிய ஆட்சியாளர்களில் வரலாற்றில் மிக முக்கியமானவராக நினைவுகூறப்படுகின்ற மற்றொருவர் கலீபா சுலைமான். இவரது ஆட்சி முஸ்லிம் அல்லாதோர்களாலும் போற்றப்பட்டது. இவரது காலமே உஸ்மானிய கிலாபத்தின் பொற்காலமாகக் கருதப்படுகின்றது. சுலைமான் அவர்களின் காலத்தில் அவர் மேற்கொண்ட பல அரசியல், பொருளாதார சீர்திருத்தங்களே இதற்கான காரணமாகும்.




உஸ்மானியர் ஆட்சி மூன்று கண்டங்களையும் உள்ளடக்கியிருந்ததனால் நூற்றுக்கும் மேற்பட்ட இனக் குழுமங்களும் பல்வேறு மொழிகளைப் பேசுகின்ற மக்களும் அவரது ஆட்சியின் கீழ் வாழ்ந்தனர். முஸ்லிம்கள் மட்டுமன்றி, முஸ்லிம் அல்லாதவர்களும் கணிசமான அளவு இருந்தனர். அவர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளத் தக்க அரசியலமைப்பொன்றை வரைவதில் சுலைமான் வெற்றி பெற்றார். இதனால்தான் அவர் 'அல்கானூனி' (சட்ட வல்லுனர்) என துருக்கிய வரலாற்றில் அறியப்படுகின்றார்.

உலகில் தலைசிறந்த 10 சட்டவாக்க அறிஞர்களின் பட்டியல் அமெரிக்க செனட் சபை கட்டடத்தில் தொங்கவிடப்பட்டுள்ளது. அவர்களுள் கலீபா சுலைமானின் பெயரும் இடம்பெற்றுள்ளது. இவர் தனது ஆட்சிக் காலத்தில் மேற்கு ஐரோப்பிய நாடான வியன்னா வரை படையெடுத்துச் சென்றார். ஒஸ்ரியாவின் கவர்னர் வரி செலுத்த இணங்கியதைத் தொடர்ந்து தனது படையைத் திரும்பப் பெற்றார்.

ஒரே நேரத்தில் 3 கண்டங்களையும் சேர்ந்த மக்களை சமத்துவமாகவும் சுபீட்சமாகவும் வாழ வைத்த பெருமை உஸ்மானியர்களுக்கு உண்டு. பெரும்பாலான ஆட்சியாளர்கள் இஸ்லாமிய ஷரீஆவின் அடிப்படையிலேயே தமது ஆட்சியை முன்னெடுத்துச் சென்றனர். மத, கலாசார, பன்மைத்துவத்தை ஏற்று முஸ்லிம் அல்லாதவர்களின் உரிமைகளுக்கும் உத்தரவாதமளித்தார். திம்மிகளுக்கு வழங்கப்படும் எல்லா உரிமைகளும் அவர்களுக்கு வழங்கப்பட்டன. இதன் சாதகமான பல விளைவுகளை உஸ்மானியர் ஆட்சியின்போதே அவர்கள் அனுபவித்தனர்.

கி.பி. 1140 இல் ஜோன் கொமன்ஸ் எனும் மன்னரின் மைத்துனன் முஸ்லிமாகி, இகோனியம் சுல்தான் மஸ்ஊதின் மகளை மணம் புரிந்துகொண்டார். 1703 இல் கொன்ஸ்தாந்து நோபிலில் அனேக கிறிஸ்தவ மதகுருக்கள் முஸ்லிம்களாக மாறினர். அவர்களுள் பிரான்சியப் பாதிரிமார்களும் சமர்னா மதகுருக்களும் இதர கத்தோலிக்கர்களும் குறிப்பிடத்தக்கவர்கள். ஏனெனில், அவர்கள் வைதீக கிறிஸ்தவத்தில் மூழ்கியவர்கள்.

முஸ்லிம்களின் எண்ணிக்கைப் பெருக்கம் ஐரோப்பியர்களிடையே ஒரு முக்கிய கேள்வியை எழுப்பியது. இறைவனின் அருள் இல்லாமல் இந்தளவு தூரம் இஸ்லாம் பரவுமா என்பதே அந்தக் கேள்வி. கிறிஸ்தவர்கள் இஸ்லாத்தின் போதனைகளையும் கொள்கைகளையும் அலசி ஆராய்ந்தனர். அதன் பலனாகவே இஸ்லாத்தை நோக்கி விரைந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாருஸ் ஸலாம்: யாருக்கு ஸலாம் போடுகிறது?



## முஜிபுர் ரஹ்மான் எம்.பி. வெளியிட்ட கண்டன அறிக்கை....



2015 ஆம் ஆண்டு ஆட்சி மாற்றத்தின் பின்னர் கொழும்பு மாவட்ட முஸ்லிம்களின் கல்வி முன்னேற்றம் குறித்து வேலைத் திட்டங்களை மேற்கொள்வதற்கான சந்தர்ப்பம் கிடைத்தது. இதனை பயன்படுத்தி ஜனாதிபதி, பிரதமர் மற்றும் கல்வி அமைச்சர் ஆகியோருக்கு எமது மக்களின் கல்வித் தரம் குறித்து நான் எடுத்துரைத்தேன். கொழும்பு மக்களின் கல்வி முன்னேற்றத்திற்கு முழுமையான பங்களிப்பை வழங்குவதாக பிரதமரும் கல்வியமைச்சரும் உறுதியளித்தனர்.

மத்திய கொழும்பிலுள்ள முஸ்லிம் மாணவர்களுக்கு கொழும்பிலுள்ள நாலந்தா, ஆனந்தா முதலான பிரபல பாடசாலைகளில் அனுமதி மறுக்கப்படுகின்றன. அத்துடன் கொழும்பு முஸ்லிம்களின் கல்வி மேம்பாட்டை கருத்திற் கொண்டு ஆளுமைமிக்க முன்னாள் முஸ்லிம் தலைமைகளின் முயற்சியினால் உருவாக்கப்பட்ட கொழும்பு ஸாஹிரா கல்லூரியிலும் முஸ்லிம் மாணவர்களுக்கு அனுமதி வழங்கப்படாதிருக்கின்றது.

இந்நிலையில் நல்லாட்சி அரசின் 'அருகிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை' திட்டத்தினூடாக பாடசாலையொன்றுக்கு 70 மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்து நான்கு வருடத்திற்குள் 'ஏ' தர பாடசாலையாக தரமுயர்த்துவதற்கான திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. இத்திட்டத்திற்காக மத்திய கொழும்பிலிருந்து 2 பாடசாலைகளை நான் பிரேரித்தேன். கல்வியில் பாரியளவில் அபிவிருத்தி மேற்கொள்ள வேண்டிய மாளிகாவத்தை தாருஸ் ஸலாம் வித்தியாலயம் மற்றும் ஹேமமாலி பாலிகா வித்தியாலயம் ஆகிய இரு பாடசாலைகளையும் இத்திட்டத்திற்குள் உள்ளீர்த்தேன்.

எனினும் தற்போது இதனை தடுப்பதற்கான வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படுவது மிகவும் கவலைக்குரிய விடயமாகும்.

இராஜாங்க அமைச்சர் பௌஸி மற்றும் அவரது புதல்வரான மாகாண சபை உறுப்பினர் நௌஸர் பௌஸி ஆகியோரே இவ்வாறு செயற்படுகின்றமை எமக்கு வருத்தமளிக்கிறது. அத்துடன் பௌஸுல் ஹமீட் தலைமையிலான செரண்டிப் எனும் அமைப்பும் உந்துதல் அளிக்கிறது. அவர்கள் அரசு வழங்கும் இலவச கல்வியை வியாபாரமாக்கப் பார்க்கின்றனர்.

## அரசாங்கத்தின் திட்டத்தைத் தடுக்க இடமளிக்காதீர்

நல்லாட்சி அரசாங்கத்தின் 'அருகிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை' திட்டத்திலிருந்து கொழும்பு 10 மாளிகாவத்தை தாருஸ்ஸலாம் வித்தியாலயத்தை நீக்குவதற்கு எடுக்கப்படும் முயற்சிகளுக்கு கடும் எதிர்ப்பு தெரிவித்து மேல்மாகாண சபை உறுப்பினர்கள் சிலர் மாகாண முதலமைச்சரின் செயலாளர் மற்றும் கல்வி அமைச்சரின் செயலாளர் ஆகியோருக்கு கடிதமொன்றை கையளித்துள்ளனர்.

மேல்மாகாண சபை உறுப்பினர்களான மொஹமட் பாயிஸ், அர்ஷாட் நிசாமுடீன், மொஹமட் அக்ரம், சன் குகவரதன், குருசாமி, ஜயந்த சில்வா ஆகியோரே இக் கடிதத்தில் கையொப்பமிட்டு சமர்பித்துள்ளனர்.

"மாளிகாவத்தை தாருஸ்ஸலாம் வித்தியாலயத்தை ஒரு ஜூனியர் ஸாஹிராவாக நாங்கள் கனவு கண்டோம். அதற்கான மாஸ்டர் பிளானை வரைந்தோம். பௌதீக வசதிகள், மாணவர்களின் கல்வி மேம்பாடு என அனைத்து விடயங்களையும் அதிலே உள்ளடக்கினோம். இதனை நான்கு வருடத்தில் நடத்தி முடிப்பதற்கு நாங்கள் திட்டம் வகுத்து செயற்படுத்தி வருகிறோம்."

**பௌஸுல் ஹமீட்**
**பழைய மாணவர் சங்க உறுப்பினர்**



இது தொடர்பாக அறிவதற்கு அமைச்சர் பௌசியை தொடர்பு கொண்டபோதும் முயற்சி கைகூடவில்லை. இதற்கு முன்னரும் பல தடவைகள் முயற்சித்த போதும் எல்லா தடவைகளிலும் தான் மையத்து வீட்டில் இருப்பதாகவே பதிலளிக்கப்பட்டது.

இலங்கைக்கு முஸ்லிம்கள் வந்ததிலிருந்து அவர்கள் பொருளாதார விற்பன்னர்களாக இருந்தார்கள். அரசர்களின் மருத்துவர்களாக, மதியுரைஞர்களாக அறிவிலும் மிளிர்ந்து நின்றார்கள்.

இலங்கை முஸ்லிம் சமூகம் அன்றிலிருந்து அண்மைக்காலம் வரை தேர்ந்த வியாபாரிகளாக அறியப்பட்டார்கள். பாரம்பரிய வியாபார முறையிலிருந்து முஸ்லிம் சமூகம் பரிணாமம் அடைவதற்குள் வியாபாரத்துறை முஸ்லிம்களை கைவிட்டுப் போகிறது. இனி கல்வி தான் ஒரே வழி என உணர்ந்து சமூகம் கல்வியில் கால்பதிப்பதற்குள் பல இனவாத சவால்களை அது சந்திக்க நேருகிறது. இதற்கிடையில் உள்ளுக்குள்ளேயே பூகம்பம் வெடித்தால் அதை என்னவென்பது?

மத்திய கொழும்பு மாளிகாவத்தை முஸ்லிம்களும் கல்வியில் காலூன்ற முயற்சிக்கின்ற போதுதான் கண்ணிவெடி காலைப்பதம் பார்க்கப் பார்க்கிறது.

மாளிகாவத்தை தாருஸ் ஸலாம் வித்தியாலயம் 100 வருடங்களுக்கு மேலாக கொழும்பு முஸ்லிம்களின் அறிவுக்காக எழும்பியிருக்கிறது. 86 பேர்ச் நிலப்பரப்பில் 1170 மாணவ மாணவிகள் தரம் 1 முதல் 13 வரை இங்கு கல்வி கற்கின்றனர். அண்மைக்காலம் வரை கொழும்பு முஸ்லிம்களின் கல்வியைப் போல இதனையும் யாரும் ஏறெடுத்துப் பார்க்கவில்லை.

இந்த நிலையில் தான் பாடசாலையின் பழைய மாணவர் சங்கம், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பாடசாலை நலன் புரிச் சங்கம் அனைத்திலும் உள்ள சமூக ஆர்வலர்கள் மாளிகாவத்தை முஸ்லிம் மாணவர்களின் கல்வி நிலை பற்றி சிந்திக்கிறார்கள்.

இந்தக் கனவினை நனவாக்குவதற்கு 240 மில்லியன் ரூபா தேவைப்பட்டது. அமைச்சர் பௌஸி, பௌஸுல் ஹமீட் உள்ளிட்ட பலரும் சேர்ந்து இந்தத் திட்டத்துக்கான நிதியீட்டாளராக மேமன் சங்கத்தை கொண்டுவந்தனர்.

பழைய மாணவர் சங்கம் செயற்படுத்தும் மாஸ்டர் பிளானில், பாடசாலைக்குத் தேவையான அனைத்து பௌதீக வளங்களும் உள்வாங்கப்பட்டுள்ளன. மாநாட்டு மண்டபம், பற்சிகிச்சை க்ளினிக், அதிபர், ஆசிரியர்களுக்கான விடுதி, நீச்சல் தடாகம், வாசிகசாலை என சிறந்த பாடசாலையொன்றுக்குத் தேவையான அனைத்தும் அதிலே உள்ளடக்கப்பட்டுள்ளன. [illegible]

யான கட்டடம் கடந்த வருடத்தில் கட்டி முடிக்கப்பட்டது. கேட்போர் கூடம் உள்ளிட்ட இரண்டு மாடிக் கட்டடத்துக்கான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அது நான்கு மாடியாக்கப்படக் கூடிய சாத்தியங்களும் இந்தத் திட்டத்துக்குள்ளால் உள்ளது. பௌதீக வசதிகளுக்கு மேலாக மாணவர்களை நிகழ்ச்சிகளுக்கு, போட்டிகளுக்கு அழைத்துச் செல்வதற்கான நிதி வரை அனைத்தும் இந்தத் திட்டத்துக்குள்ளால் செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

கடந்த காலங்களில் ஆளும் கட்சியில் இல்லாமல் இருந்ததனால் தனது பிரதேசத்துக்கு பெரிதாக எதுவுமே செய்ய முடியாமல் இருந்த மத்திய கொழும்பு ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தனது பிரதேசத்தில் கல்வி வளர்ச்சியில் தற்போது அக்கறை காட்டி வருகிறார்.

தற்போது நடைமுறையில் உள்ள திட்டத்தை முடிப்பதற்கு 240 மில்லியனுக்கு மேல் போனாலும் அதனைப் பெற்றுத்தருவதற்கு திட்டத்தைப் பொறுப்பேற்றவர்கள் தயாராகவிருக்கிறார்கள். அரசாங்கத்தின் உதவி மூலம் முதற் கட்டத்தில் திருத்த வேலைகளும், இரண்டாம் கட்டத்தில் கட்டட நிர்மாண வேலைகளும் மூன்றாம் கட்டத்தில் மதில், கேட் போன்றவைகளும் நடக்கவிருக்கின்றன.

இவைகள் எல்லாம் எங்களுக்கு கிடைத்திருக்கின்றன. அரசாங்கத்தின் நிதியின் மூலம், மாணவர்கள் விளையாட்டு மைதானத்துக்குச் செல்வதற்கான வழியொன்றை அமைத்துத் தந்தால் அது பேருதவியாக இருக்கும். இந்தப் பாதையை உருவாக்குவதற்கு பாடசாலையுடனுள்ள சில வீடுகளை அகற்ற வேண்டியிருக்கும். இதனை அரசாங்கத்தினால் தான் செய்ய முடியும் என பெயர் குறிப்பிட விரும்பாத சில பழைய மாணவர்கள் தெரிவிக்கிறார்கள். அல்லது தேவையுடைய மற்றுமொரு முஸ்லிம் பாடசாலையை இந்த நிதியின் மூலம் முன்னேற்றினால் நல்லது தானே என பொதுமக்கள் சொல்லுகிறார்கள்.

இதற்கிடையில் பாடசாலை வளாகத்தில் நிர்மாண பணிகளைத் துவங்குவதற்காக டோசர் பண்ணும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. வலுக்கட்டாயமாக அங்கே நிறுவுவதற்கு அது ஒன்றும் புத்தர் சிலை அல்ல. தாங்கள் இந்தத் திட்டத்துக்குள் உள்வாங்கப்பட மாட்டோமா என அல்ஹிஜ்ரா, அல் ஹிதாயா போன்ற பல பாடசாலைகள் ஏங்கிக் கொண்டிருக்கின்றன.

கொழும்பிலுள்ள முஸ்லிம் பாடசாலைகளில் ஒன்றிரண்டு தான் சிறந்த(?) பாடசாலைகளாக உள்ளன. ஒன்றையே நோக்கி கவனத்தைக் குவிப்பதை விட கொழும்பின் ஏனைய பாடசாலைகளையும் ஒவ்வொரு பாராளுமன்ற உறுப்பினர்களும் பொறுப்பெடுத்தால் யாவருக்கும் ஸலாம்.

இந்தத் திட்டத்தினூடாக நாங்கள் பல விடயங்களை சாதித்திருக்கிறோம். புலமைப் பரிசில் சித்தியை அதிகரிப்பதற்காக மாணவர்களுக்காக கருத்தரங்குகள் நடக்கின்றன. சாதாரண தர, உயர் தர மாணவர்களுக்கான கருத்தரங்குகள் நடக்கின்றன. தற்போது சித்தியடைகின்ற வீதமும் அதிகரித்திருக்கிறது. மாணவர்களுக்கான மனவலிமை, தெம்பூட்டல் நிகழ்ச்சிகள் தொடராக நடக்கின்றன. உதைபந்தாட்ட கோச்சிங் நடக்கிறது.

அண்மையில் ஹமீத் அல் ஹுஸைனி, ஸாஹிரா, சென் ஜோசப் அணிகளுடன் மோதி தாருஸ்ஸலாம் உதைபந்தாட்ட அணி சம்பியனாகியது. ரக்பி போட்டியில் ரோயல் கல்லூரியுடன் மோதி எமது மாணவர்கள் வெற்றியீட்டினார்கள். எந்தவிதப் பயிற்சியும் இல்லாமல் குறிபார்த்துச் சுடும் போட்டியில் எமது மாணவன் சார்ப் சூட்டர் ஆனான்.

ஜேர்மனியில் நடக்கவிருக்கும் ஜூனியர் ஒலிம்பியாட்டுக்கு அனுப்புவதற்காக அவரை தயார்படுத்தி வருகிறோம். அவரது திறமையைக் கண்டு நாலந்தாக் கல்லூரியில் இராணுவத்தினர் அவருக்கு பயிற்சியளிக்க முன்வந்திருக்கிறார்கள். அவருக்கென 137,000 ரூபா பெறுமதியான ரைபிளை இந்தத் திட்டத்தினூடாக பெற்றுக் கொடுத்திருக்கிறோம்.

வூஷு பயிற்சி வகுப்புக்கள் நடக்கின்றன. தெரிவு செய்யப்பட்ட 125 மாணவர்களுக்கு இலவசமாக உணவு வழங்கப்படுகிறது. தற்போது பிள்ளைகளின் வரவு அதிகரித்திருக்கிறது. இடைவிலகல்கள் குறைந்திருக்கின்றன. நல்ல பெறுபேறு கிடைக்கிறது.

**இன்பாஸ் அன்சார்,**
செயலாளர், பழைய மாணவர் சங்கம்

மாளிகாவத்தை தாருஸ் ஸலாம் வித்தியாலயத்தை ஆண்கள் பாடசாலையாகவும் அல்ஹிதாயா வித்தியாலயத்தை பெண்கள் பாடசாலையாகவும் மாற்றுவதற்கென அவர் எடுத்த முயற்சியினூடாக, கொழும்புக்கு மற்றுமொரு பெண்கள் பாடசாலை கிடைப்பதற்குரிய வாய்ப்பினை அவர் ஏற்படுத்தியுள்ளார். அந்த வரிசையிலேயே மாளிகாவத்தை தாருஸ்ஸலாம் பக்கத்துப் பாடசாலை சிறந்த பாடசாலை திட்டத்துக்குள் அவரது முயற்சியினால் 2015 செப்டம்பர் மாதமே உள்ளீர்க்கப்பட்டுள்ளது. இதன் மூலம் பாடசாலைக்கு 70 மில்லியின் ரூபா கிடைக்கவிருக்கிறது.

கொடுக்கிற தெய்வம் கூரையைப் பிய்த்துக் கொண்டு கொடுப்பது போல தற்போது 240 மில்லியனா 70 மில்லியனா என எந்தப் பக்கத்துக்கு ஸலாம் போடுவது என்று தெரியாமல் தாருஸ்ஸலாம் விழி பிதுங்கிப் போயிருக்கிறது.

## வட்டார எல்லை.... (1ம் பக்கத் தொடர்)

இது சம்பந்தமாக திருகோணமலை மாவட்ட சமூக அமைப்புகளின் கருத்துக்களை கேட்டறிந்து, உரிய அதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டு செல்வது தொடர்பான கலந்துரையாடல், கிண்ணியா நகரசபை மண்டபத்தில், இடம் பெற்றபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பெரும்பான்மையினரைக் கொண்ட கோமரங்கடவெல பிரதேச சபைக்கு 5,831 வாக்காளர்களுக்கு 13 பிரதிநிதிகள் ஒதுக்கப்பட்டுள்ள நிலையில், 21,069 வாக்காளர்களைக் கொண்ட கிண்ணியா நகர சபைக்கு 10 பிரதிநிதிகளே ஒதுக்கப்பட்டுள்ளனர்.

இதன்படி கோமரங்கடவெலவுக்கு 450 வாக்காளருக்கு 1 பிரதிநிதியும் கிண்ணியா நகர சபைக்கு 2,100 வாக்காளர்களுக்கு ஒரு பிரதிநிதியும் என பிரதிநிதித்துவம் ஒதுக்கப்பட்டு பாரபட்சம் காட்டப்பட்டுள்ளது' என்றார்.

மூதூர் பிரதேச சபையினை நகரசபையாக தரமுயர்த்துவது தொடர்பாகவும் தோப்பூர், சம்பூர் பகுதிகளில் புதிய பிரதேச சபை உருவாக்குவது தொடர்பாகவும் கலந்துரையாடல்கள் இடம் பெற்றன.

கிண்ணியா மஜ்லிஸ் ஸூராவின் தலைவர் ஏ.எம். ஹிதாயத்துல்லாஹ் மௌலவியின் தலைமையில் இடம் பெற்ற இக்கூட்டத்தில், மூதூர், கிண்ணியா, தோப்பூர், முள்ளிப்பொத்தானை, தம்பலகாமம் போன்ற பகுதிகளைச் சேர்ந்த சமூக அமைப்புக்களின் தலைவர்கள் கலந்து கொண்டனர்.


திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அப்துல்லா மஹ்ரூப், முன்னாள் கிண்ணியா நகரபிதா டாக்டர் ஹில்மி மஹ்ரூப், மதப் பெரியார்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

## மீண்டும் வருகிறது.... (1ம் பக்கத் தொடர்)

எட்கா ஒப்பந்தம் உள்ளடக்குகின்ற விடயங்கள், 2000 ஆம் ஆண்டில் செய்து கொள்ளப்பட்ட சுதந்தர வர்த்தக ஒப்பந்தத்தின் (FTA) அனுபவங்கள் போன்றவை தொடர்பாக ஆரம்ப கட்ட பேச்சுவார்த்தைகளின்போது கலந்துரையாடப்பட்டன.

எட்கா ஒப்பந்தம் மூலமாக தெரிவு செய்யப்பட்ட துறைகளில் இந்திய முதலீட்டை அதிகரிப்பதே இந்தியாவின் நோக்கமாகும். அதேபோல இந்த ஒப்பந்தம் மூலமாக இந்தியாவின் பாரிய விநியோகச் சந்தையில் நுழைவது இலங்கையின் நோக்கமாகும்.

இதன் மூலம் இந்தியாவின் பாரிய கைத்தொழிற் பேட்டைகள் இந்திய முதலீட்டாளர்களால் இலங்கையில் நிறுவப்படும். இதனுடைய உற்பத்திகள் இலங்கையுடனும் பாகிஸ்தானுடனும் வர்த்தக



உடன்படிக்கைகளைக் கொண்டுள்ள சீனா, சிங்கப்பூர் சந்தைகளுக்கு விநியோகிக்கும் வாய்ப்பை இந்தியக் கம்பனிகள் பெறும்.

எட்காவினூடாக இலங்கையில் பாரியளவு இந்தியத் தொழிலாளர்கள் குவிக்கப்படுவர் எனவும் இதனால் இலங்கையர்களுக்கு தொழில்வாய்ப்புகள் குறையும் எனவும் பரவலாக குரலெழுப்பப்பட்டது. ஆனால் இந்தியத் தொழிலாளர்களுக்கு இலங்கைத் தொழிற்சந்தையில் வாய்ப்புகள் வழங்கப்பட மாட்டாது என அரசு உத்தரவாதம் அளித்துள்ளது.

## கொழும்பு.... (1ம் பக்கத் தொடர்)

ஹங்வெல்ல, தெல்கொட, பாதுக்க, திவுலபிடிய பிரதேசங்களில் உள்ள 11 கருங் கற்பாறைகளைக் குடைந்து எடுக்கப்படவுள்ளன. இதனால் இந்தப் பிரதேச நிலம் பாதிக்கப்பட விருக்கிறது. இது தொடர்பில் சுற்றாடல் அறிக்கைகள் பெறப்படவில்லை.

அதேபோல 650 இலட்சம் கன மீட்டர் மணல் இதற்குத் தேவைப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது. நிரப்பப்படவுள்ள 675 ஏக்கர் கடல் பரப்புக்கு 2200 ஏக்கர் கடற்கரை மணல் தேவைப்படுகிறது. இந்த மணல் எடுக்கப்படும் நீர்கொழும்பு பிரதேசம் இதனால் பாதிப்படைகிறது. இவ்வளவு மணலையும் போக்குவரத்துச் செய்யும் போது முழுப் பிரதேசமும் பாதிக்கப்படுகிறது. இந்த சுற்றாடல் பாதிப்பும் கவனத்தில் கொள்ளப்படவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பள்ளியை விட்டும் இமாம்கள் ஏன் ஓட வேண்டும்?



-திக்வல்லை இனாயாஹ்-

இன்று விரல் விட்டு எண்ணக் கூடிய சில கிராமப்புற பள்ளிகளில் கடமை புரியும் இமாம்களை விட அநேகமான பள்ளிவாசல்களில் கடமை புரியும் இமாம்கள், கதீப்மார்கள் மூன்று நேரச் சாப்பாட்டுடன் தங்குமிட வசதிகளுடன் நியாயமான வேதனம் பெற்று சேவையாற்றி வருகின்றனர்.

இதுதவிர, இவர்கள் வேறு பல ஹதியாக்களையும் அன்பளிப்புக்களையும் அடைந்து கொள்கின்றனர். திருமணங்கள், நோய்கள், எதிர்பாராத செலவுகள் என வரும்போது பொதுமக்களின் உதவிகள் இவர்களுக்கு நிறையக் கிடைக்கின்றது. சொல்ல மாட்டார்கள். இது நல்ல விடயம். கொடுக்கத்தான் வேண்டும், கூட்டிக் கழித்துப் பார்க்கும் போது அரச துறையில் சேவையாற்றும் ஓர் இலிகிதரை விட ஒரு பாடசாலை ஆசிரியரை விட கூடுதலான மாதாந்த சம்பளத்தை இவர்கள் பெறுகிறார்கள். இதில் தவறில்லை.

அநேகமான பள்ளிகளில் இமாம்களின் கடமை ஐவேளைத் தொழுகையோடு நிறைவுறுகிறது. ஜும்ஆப் பிரசங்கம் நடாத்த வெளியூர்களிலிருந்து உலமாக்களை வரவழைத்து ஜும்ஆவையும் நடாத்துகிறார்கள். இந்தப் பொறுப்பும் பள்ளிவாசல் இமாம்களுக்கு இல்லை. அதேபோல் பல ஊர்களில் பள்ளிவாசல் இமாம் ஐவேளைத் தொழுகையோடு குர்ஆன் மத்ரஸா அல்லது மக்தப் வகுப்புகளை நடாத்தி வருகின்றனர். இதன் மூலமும் இவர்களுக்கு வேதனம் கிடைக்கின்றது.

நிலைமை இவ்வாறு இருக்கும் போது, இவர்கள் ஏன் பள்ளிவாசல்களை விட்டு ஓட வேண்டும். ஒரு சில பள்ளிவாசல் மௌலவிமார் வேறு வழிகளில் மேலதிக வருமானங்களை தேடிக்கொள்கின்றனர். இது இவர்களின் தனிப்பட்ட ஆளுமையைப் பொறுத்தது. ஓய்வான நேரங்களில் தனிப்பட்ட முறையில் வீடுகளுக்குச் சென்று குர்ஆன் ஓதிக் கொடுத்து பிள்ளைகளுக்கு இஸ்லாத்தைச் சொல்லிக் கொடுத்து வருவாய்களைப் பெருக்கிக் கொள்கின்றனர். அதிக வருமானங்களைத் தேடப் போய் ஜமாஅத்தாரினதும் நிர்வாகிகளினதும் விமர்சனங்களுக்கு ஆளாகி, கடமையைச் சரியாகச் செய்யாது தவறிழைக்கும் உலமாக்களும் இல்லாமல் இல்லை.

தன்னை விட கீழ் மட்டத்தில் உள்ளவர்களைப் பார்த்து தன்னை எடைபோட்டு, தன் வருமானத்தில் மன நிறைவு கொள்வதே சிறப்பான பண்பாகும். ஏனெனில், அதிகரித்து வரும் பொருட்களின் விலையேற்றம் வாழ்க்கைச் செலவின் அதிகரிப்பு என்பன காரணமாக பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை இவர்களுக்கு ஏற்படுகின்றது. இது அனைவருக்கும் பொதுவானதாகும்.

அபூ ஹுரைரா (ரழி) அவர்கள் கூறினார்கள். உங்களுக்கு கீழ் இருப்பவர்களைப் பாருங்கள். உங்களை விட மேலிருப்பவர்களைப் பார்க்காதீர்கள். அதுவே அல்லாஹ் புரிந்திருக்கும் அருட்கொடைகளை நீங்கள் குறைத்து மதிப்பிடாமலிருக்க மிகவும் ஏற்றதாகும். நூல் முஸ்லிம் (5671)

மேலதிக வருமானத்தில் மோகம் கொள்ளாது தனது கடமையில் கண்ணாக இருந்து ஏவல் விலக்கல்களையும் ஹராம் ஹலாலையும் பிரித்துக் காட்டி, சமூக உணர்வுகளுடன் இவர்கள் சேவையாற்றுவதையே மக்கள் அதிகம் விரும்புகின்றனர். நபி வழியையும் இறை கட்டளையையும் தெரிந்து கொண்டும், சமூக ஒற்றுமை பேணப்பட வேண்டும் என்ற புது நியாயம் காட்டி தவறுகளைக் கண்டிக்காது நழுவல் போக்கில் செயல்படுவது ஆரோக்கியமானதல்ல. இதுவே, பிரச்சினைகளுக்கு சமூகத்தில் அடித்தளமிடுகின்றதெனலாம். பாவத்துக்கு எந்த வகையிலும் மறைமுகமாகவேனும் துணை போகக் கூடாது.

''நம்பிக்கை கொண்ட நிலையில் மறுமையை விரும்பி அதற்காக முயற்சிப்போரின் முயற்சிக்கு நன்றி செலுத்தப்படும்.'' (திருக்குர்ஆன் 17:19)

''நாம் நாடியோருக்கு நமது அருளை வழங்குவோம். நன்மை செய்தோரின் கூலியை வீணாக்கமாட்டோம். நம்பிக்கை கொண்டு (இறைவனை) அஞ்சுவோருக்கு மறுமையின் கூலியே சிறந்தது'' (2:56-57)

தனி நபரை அன்றி இறைவனை மாத்திரம் திருப்திப்படுத்த நாம் ஒவ்வொருவரும் முயற்சிக்க வேண்டும். உலமாக்கள் மக்களின் உள்ளங்களைப் புரிந்து, அவர்களின் எதிர்பார்ப்புக்களை விளங்கி, அவர்களுக்கு சேவை செய்தால் மக்களும் அவர்களைப் புரிந்து இணங்கி அவர்களுடன் செயல்படுவார்கள். அள்ளிக் கொடுப்பார்கள். பள்ளியை விட்டும் இமாம்கள் உலமாக்கள் ஓடத் தேவையில்லை.

மார்க்கம் என்ற பெயரில் மக்கள் செய்து வந்த சடங்கு சம்பிரதாயங்களை பாரம்பரியங்களை அனுமதிக்கும் உலமாக்கள் சமூக ஒற்றுமையை மாத்திரம் கருத்தில் கொண்டு குர்ஆன் சுன்னாவை வலியுறுத்தாது நழுவிப் போவது சமூகத்தில் கருத்து வேறுபாடுகளுக்கு தூபமிடுகின்றது. இன்று மக்கள் இஸ்லாத்தை தேடிப் படிக்கிறார்கள். அதன்படியே அமல் செய்ய நாடுகின்றார்கள்.

''அல்லாஹ்வுக்கும் இத்தூதருக்கும் கட்டுப்படுங்கள், நீங்கள் புறக்கணித்தால் (தன்னை) மறுப்போரை அல்லாஹ் விரும்பமாட்டான்'' எனக் கூறிவீராக! (3:32)

''நம்பிக்கை கொண்டோரே! அல்லாஹ்வுக்கு கட்டுப்படுங்கள், இத்தூதருக்கும் கட்டுப்படுங்கள்! உங்கள் செயல்களைப் பாழாக்கிவிடாதீர்கள்.'' (47:33)

இதுபோன்ற குர்ஆன் வசனங்களை வாசித்து விளங்கும் ஓர் குடிமகன் குர்ஆன் சுன்னாவிலே அதிக விருப்பம் கொள்கிறான். இவனிடம் எதுவித மார்க்க அடிப்படையும் இல்லாத சடங்கு சம்பிராதயங்கள் தோற்றுப் போகின்ற. இதனை இன்று எம்மில் எத்தனை உலமாக்கள், கதீப்பார் விளங்கிவைத்துள்ளார்கள்? என்பது கேள்விக்குரியதாகும்.

மேலும், அல்லாஹ் தனது அருள் மறையாம் திருமறையில் சூரா ஆல் இம்ரானில் 104ஆவது வசனத்தில் இவ்வாறு குறிப்பிடுவதை மக்கள் அறிவார்கள்.

''நன்மையை ஏவி தீமையைத் தடுத்து நல்வழியில் நோக்கி அழைக்கும் சமுதாயம் உங்களிடம் இருக்க வேண்டும். அவர்களே வெற்றியாளர்கள்.'' (ஆல இம்ரான் : 104)

இன்று எல்லோரும் நன்மையை ஏவுகின்றார்கள். யாராவது தீயை தடுக்கிறார்களா? எனக்கு ஏன் இந்த வீண் வம்பு என்றே மக்கள் நினைக்கிறார்கள். நன்மையை ஏவி தீமையைத் தடுக்க யாரும் முன்வருவதில்லை. இந்நிலை மாற்றியமைக்கப்பட வேண்டும்.

குர்ஆன் எதிர்பார்க்கும் இந்தச் சமுதாயத்தை உருவாக்க உலமாக்கள் இமாம்கள் மக்களுக்க வழிகாட்ட வேண்டும் எனறே மக்கள் எதிர்பார்க்கின்றனர். அவர்களுக்கே இந்த உரிமை உண்டு. இச்சந்தர்ப்பத்தில் உலமாக்களின் தூண்டுதலும் மக்களின் ஒத்துழைப்பும் அத்தியவசியமாகின்றது. ஒவ்வொரு உலமாவும் இமாமும் தான்வாழும் பிரதேசத்தில் மக்களை ஒன்று கூட்டி குர்ஆன் கூறும் இந்தக் குர்ஆனிய சமுதாயத்தை குர்ஆனிய சமுதாயத்தில் கடமை புரியும் இமாம்களோ உலமாக்களோ ஒரு போதும் பள்ளியை விட்டும் ஓட மாட்டார்கள். மக்கள் அவர்களை ஓட விடவும் மாட்டார்கள். இதுவே யதார்த்தம்.

---

# முஸ்லிம் உம்மத்துக்கு ஹஜ் கற்றுத் தரும் பாடங்கள்

அஷ்ஷெய்க் U.L.M. பாரிஸ்
(M.A - மலேசியா)
(விரிவுரையாளர் - இஸ்லாமிய பல்கலைக்கழகம், மாலைதீவு)



நாம் கடமைக்காக மட்டும் இபாதத் செய்யாது அதில் நமக்கு என்ன அறிவுரைகள், பாடங்கள் இருக்கின்றன என்பது பற்றியும் ஆராய வேண்டும். அப்போது தான் நமது இபாதத்கள் உயிரோட்டமடையும். ஒவ்வொரு இபாதத்களும் நம் வாழ்வை சீர்செய்து கொள்ள நிறைய பாடங்களையும் படிப்பினைகளையும் தருகின்றன. குறிப்பாக ஹஜ் அம்சங்கள் முஸ்லிம் உம்மத்தின் வெற்றிக்காக பல விஷேடமான பாடங்களைத் தருகின்றன.

### 1- இறையச்சத்தை உறுதிப் படுத்தல்.

ஹஜ்ஜின்போது பாவமான காரியங்களில் ஈடுபடாது உடலுறவு வாக்குவாதம் சன்டை போன்றவற்றிலிருந்து தவிர்ந்து கொண்டு அல்லாஹ் அவனை அஞ்சுமாறு நம்மைப் பனிக்கின்றான். அவன் பின்வருமாறு கூறுகையில்;

''ஹஜ்ஜுக்குரிய காலம் குறிப்பிடப்பட்ட மாதங்களாகும். எனவே, அவற்றில் எவரேனும் (இஹ்ராம் அணிந்து) ஹஜ்ஜை தம் மீது கடமையாக்கிக் கொண்டால், ஹஜ்ஜின் காலத்தில் சம்போகம், கெட்ட வார்த்தைகள் பேசுதல், சச்சரவு - ஆகியவை செய்தல் கூடாது. நீங்கள் செய்யும் ஒவ்வொரு நன்மையையும் அல்லாஹ் அறிந்தவனாகவே இருக்கிறான். மேலும் ஹஜ்ஜுக்குத் தேவையான பொருட்களைச் சித்தப்படுத்தி வைத்துக் கொள்ளுங்கள். நிச்சயமாக இவ்வாறு சித்தப்படுத்தி வைப்பவற்றுள் மிகவும் ஹைரானது (நன்மையானது), தக்வா (என்னும் பயபக்தியே) ஆகும். எனவேநல்லறிவுடையோரே! எனக்கே பயபக்தியுடன் நடந்து கொள்ளுங்கள்.'' (ஸூரத்துல் பகராஹ் :197)

### 2- 'ஏகத்துவம்' அல்லாஹ்வை ஒருமைப்படுத்தல்

ஹாஜிகள் அல்லாஹ்வை அழைத்த வண்ணம் புனித கஃபாஹ்வைத் தவாப் செய்வார்கள். அல்லாஹ்வை நோக்கி அவர்கள் ''உனக்கு நிகராக யாருமே யில்லை, புகழும், அருளும், அரசாட்சியும் உனக்கே சொந்தம், உனக்கு (அவைகளில்) கூட்டாளியாக யாருமே இருக்க முடியாது'' என்ற ஏகத்துவ வசனங்களை ஓயாது மொழிந்து கொண்டேயிருப்பார்கள்.

இவ்வசனங்கள் அல்லாஹ்வை ஒருமையப்படுத்தும் வசனங்களாகும். இவை 'தௌஹீத்' ஏகத்துவமென்றால் என்னவென்று சொல்லித் தரும் வசனங்களாகும். இவை நம்முள்ளங்களில் எப்போதும் உதித்து நம் வாழ்க்கையின் அடிப்படை அம்சமாக அமைய வேண்டும். அப்போது தான் நமது இவ்வுலக வாழ்வு ஜெயம் பெறும், மறுமை வாழ்வு வசந்தமடையும்.

### 3-முஸ்லிம் உம்மத்தின் ஐக்கியமும், பலமும் பலப்படுத்தப்படுகின்றது

ஹஜ் என்பது புனித மக்காவில் வருடாந்தம் நிகழ்கின்ற முஸ்லிம் உம்மத்தின் சர்வதேச மாநாடாகும். தேசம், மொழி, நிறம், பதவி, அந்தஸ்து இவைகளுக்கு அப்பால் எண்ணிக்கையற்ற பல்லாயிரக் கணக்கான ஹாஜிகள் 'லெப்பைக் லெப்பைக்' என்று ஒரே மொழியில் சப்தமிட்டு அழுத வண்ணம் அல்லாஹ்வை அழைக்கின்றனர். இங்கு முஸ்லிம் உம்மத்தின் ஐக்கியமும் சக்தியும் பலமடைவதைக் காண முடிகின்றது.

இங்கு தேசம், நாடு, மொழி வேறுபட்ட போதிலும் ஈமானிய உள்ளங்கள் ஒரே இடத்தில் ஒன்று குவிந்துள்ளன. அரசியல், சங்கம், இஸ்லாமிய இயக்கம் போன்ற இன்னோரன்னவற்றில் எழுந்த சிற்சில கருத்து முரண்பாடுகளுக்காக வேண்டி நாம் வேறுபடுகின்றோம். நமக்கிடையில் விட்டுக் கொடுப்பு மிகக் குறைவாகவே காணப்படுகின்றது. நமது இப்பலவீனம் எதிரிகளின் பலமாக மாறுகின்றது. அவர்கள் இதை நமக்கெதிராக ஆயுதமாக பயன்படுத்துகின்றனர்.

மனிதர்களின் சிந்தனைக் கூர்மைக்கேற்ப கருத்து அபிப்பிராயங்கள் வேறுபட முடியும்; முரண்பட முடியும். மாறாக உள்ளங்கள் ஒருபோதும் முரண்படக் கூடாது. அவ்வாறு முரண்பட்டால் அதுவே தோல்வியின் துவக்கமாகும். நாம் ஏன் [illegible] கப்படுகின்றோம்? ஏன் நம் சமூகத்திடம் எந்த முன்னேற்றத்தையும் காண முடியவில்லை? என்ற கேள்விகளுக்கு நமது அந்தப் பலவீனமே பதிலாகும். இந்நிலை மாறவேண்டும். ஹாஜிகள் போன்று கருத்து முரண்பாடுகளுக்கு அப்பால் அனைவரும் ஒன்றுபட வேண்டும்.

''ஒன்று பட்டால் உண்டு வாழ்வு.'' எல்லோரும் உடன்பட்ட பொதுவான அடிப்படையான விடயங்களில் ஒன்றுபடுவோம்., கருத்து முரண்பட்ட விடயங்களில் பரஸ்பரம் விட்டுக் கொடுத்து சகிப்புத் தன்மையோடு நடந்து கொள்வோம்.

நபி (ஸல்) அவர்களது முப்பதாவது வயதில் குறைஷித் தலைவர்கள் கஃபாவில் யார் ஹஜருல் அஸ்வத் கல்லை வைப்பது என்ற விடயத்தில் கருத்து முரண்பட்டனர். யார் கஃபாவுக்கு அதிகாலையில் முதல் வருகின்றாரோ அவர் சொல்லும் தீர்ப்பையே அமுல்படுத்துவோம் என்ற முடிவுக்கு வந்தனர். அங்கே அதிகாலையில் கஃபாக்கு முன்னால் நபியவர்கள் நிற்பதைக் கண்ட குறைஷிகள் நியாயமான தீர்வுக்கு நபியவர்கள்தான் பொருத்தம் என உடன்பட்டனர்.

நபியவர்கள் தனது தோளிலிருந்த 'ரிதாவை' போர்வையை விரித்து அதன் நடுவில் ஹஜருல் அஸ்வத் கல்லை வைத்து அனைத்து குறைஷித் தலைவர்களும் சேர்ந்து பிடித்து கஃபாவில் அதை வைக்கும்படி சொன்னார்கள். அங்கே முரண்பட்ட தலைவர்கள் உடன்பட்டனர்; வேற்றுமையடைந்தவர்கள் ஒற்றுமைப்பட்டனர்.

இஸ்லாம் ஐக்கியத்தையும் ஒற்றுமையையும் கற்றுத் தந்த மார்க்கம். இவை முஸ்லிம்களாகிய நம்மனைவர்களது வாழ்க்கையிலும் நடைமுறைப் பண்பாக மாற வேண்டும். அப்போதுதான் முஸ்லிம் உம்மத் பலமடையும். வெற்றியை நோக்கி நகரும். உண்மையில் முஸ்லிம்கள் வரலாறு நெடுகிலும் ஐக்கியமாக பலமிக்கவர்களாகவே வாழ்ந்திருக்கின்றனர். மறைந்து போன நம் வரலாறை நாம் மீட்பது காலத்தின் தேவையாகும்.

### 4- ஹஜ் இஸ்லாமிய சகோதரத்துவத்தை வெளிப்படுத்துகின்றது

அங்கே ஹாஜிகள் தங்களுக்குல்லிருக்கும் வித்தியாசங்களைக் களைந்து விட்டு ஒரே மண்ணில் பிறந்த சகோதரர்கள் போன்று அன்பையும் பரஸ்பர ஒத்துழைப்பையும் அவர்களுக்கிடையில் பரிமாறிக் கொள்வதைக் காண முடிகின்றது. உடல் பலமுள்ளவர் நடக்க முடியாமல் சிரமப்படும் பலவீனமானவருக்கு உதவி செய்வதையும், மேலும் கீழே விழுந்து எழும்ப முடியாமல் அவதிப்படுபவரை தூக்கி எழுப்பாட்டுவதையும், உணவு-பானங்கள் உள்ளவர்கள் இல்லாதவர்களுக்குக் கொடுத்து உதவுவதையும் பார்க்க முடிகின்றது.

வாலிபர்கள், வயோதிபர்கள் கூட்டம் கூட்டமாக நின்று அறபாவிலிருந்து வரும் ஹாஜிகளை வரேவேற்று அவர்களுக்கு தண்ணீர் குடிபானங்கள் உணவுகள் கொடுத்து அவர்களுக்கு மத்தியில் ஆளமான அன்பை ஏற்படுத்துகின்ற காட்சியையும் அங்கே உற்றுநோக்க முடிகின்றது. இதற்கு முன்னர் இவர்களுக்கிடையில் எந்த அறிமுகமும் இருக்கவில்லை. இவர்களில் யாரும் யாரையும் கண்டதுமில்லை. இவர்கள் முஸ்லிம்கள் என்ற ஒரே காரணத்துக்காக வேண்டியே இவ்வாறு அன்பாக நடந்துகொள்கின்றனர்.

காஷ்மீர், பலஸ்தீன், சிரியா, எகிப்து, யெமன் போன்ற நாடுகளில் வாழும் நம் முஸ்லிம் சகோதர சகோதரிகள் நாளுக்கு நாள் கடுமையாக தாக்கப்படுகின்றார்கள்; கண்ணீர் வடிக்கின்றார்கள். இவர்கள் படுகின்ற வேதனைகளை நம்முள்ளங்கள் உணர வேண்டும். இவர்களின் விடிவுக்காக அதிகமதிகம் துஆ செய்வது நம்மீது கடமையாகும்.

### 5- இஹ்ராம் ஆடை கபன் ஆடையை நினைவூட்டுகின்றது.

இரண்டு துண்டுகளைக் கொண்ட இஹ்ராம் ஆடை வெள்ளை நிறமாக இருத்தல் அவசியமாகும்.

(பக்.14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இளம் தலைமுறையினர்... (3ம் பக்கத் தொடர்)



சமூக சீர்கேடுகளான கொலை, கொல்லை, கற்பழிப்புக்கள், போன்ற குற்றச் செயல்களில் சர்வ சாதாரணமாக ஈடுபடக் கூடியவர்களாக இருப்பதைக் காணலாம்.

அத்தோடு சில சந்தர்ப்பங்களில் மன அழுத்தங்களுக்கும் குழப்பத்திற்கும் ஆளாகுவார்கள். மாணவப் பருவத்தினராயின் கல்வியில் ஆர்வமற்றவர்களாகவும் யாருடைய அறிவுரையையும் ஏற்காத கட்டுப்பாட்டை இழந்தவர்களாகவும் காணப்படுவார்கள். இந்த நிலை உச்ச கட்டத்தை அடையுமானால் மன நோயாளிகளாகவும் உளவியல் பாதிப்புக்களுக்கு உள்ளானவர்களாகவும் எமது இளைஞர்கள் மாறிக் கொண்டிருப்பார்கள்.

போதைப்பொருளுக்கு அடிமையானவர்களுக்கு புனர்வாழ்வளிப்பதற்காக நாடளாவிய ரீதியில் நிலையங்கள் அமைக்கப்பட்டாலும் விரைவாக புனர்வாழ்வளித்து சுமுகமான நிலைக்கு திரும்பச் செய்வதென்பது இலகுவான காரியமாக இல்லை. புனர்வாழ்வு பெற்றுக் குணமடைந்தாலும் உண்மையான பூரண மனிதன் என்ற நிலையில் இத்தகையவர்களைக் காண முடியாது. அதனால் இதன் பாரதூரத்தை உணர்ந்துள்ள அரசாங்கம், இந்நாட்டின் இளம் சந்ததியினரைப் பாதுகாப்பதற்காக ஜனாதிபதியின் தலைமையில் தேசிய மட்டத்தில் இயங்கக் கூடிய ஒருசெயலணியை ஏற்படுத்தியிருக்கின்றது.

### அவசரமான பாதுகாப்பு நடவடிக்கை தேவை

இன்றைய நிலையில் முஸ்லிம் சமூகமும் இவ்வாறான போதைப்பொருள் பாவனையில் இருந்து எமது இளம் தலைமுறையினரைப் பாதுகாப்பதில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டிய அவசரத் தேவை ஏற்பட்டிருக்கின்றது. இவ்விடயத்தில் காணப்படும் கவனக் குறைவு, உதாசீனப் போக்கு, நடவடிக்கை எடுப்பதில் ஏற்படும் கால தாமதம் என்பன முஸ்லிம் சமூகம் வளமானதும் உயிரோட்டமுள்ளதுமான இளம் சந்ததியினரை இழக்க வேண்டிய நிலைக்கு தள்ளிவிடும் என்பதில் சந்தேகமில்லை.

இது தொடர்பான அறிவூட்டல்கள் பாடசாலை மட்டத்தில் அதிகமாக திட்டமிட்ட அடிப்படையில் நடைபெற வேண்டும். அத்துடன் பள்ளிவாசல் நிர்வாக சபைகள் இவ்விடயம் தொடர்பாக அதிக கவனம் செலுத்தி, இளைஞர்களைப் பாதுகாப்பதற்காக திட்டங்களை வகுத்து நடைமுறைப் படுத்த வேண்டும்.

முஸ்லிம் சமூகத்தில் விரைவாகவும் ஆழமாகவும் தாக்கத்தை ஏற்படுத்தவும் அபிப்பிராயங்களை கட்டியெழுப்பவும் ஆற்றல் மிக்கவர்களே முஸ்லிம் சமூகத்தில் உள்ள மௌலவிமார்கள், உலமாக்களாவர். அதனால் இவர்கள் இவ்விடயம் தொடர்பாக பூரண தெளிவு பெற்றவர்களாக இருக்க வேண்டியதோடு, அடிக்கடி வெள்ளிக்கிழமை ஜும்ஆப் பிரசங்கங்கள் மற்றும் ஏனைய சன்மார்க்க உபதேசங்கள் என்பவற்றின் ஊடாக எம் சமூகத்தில் இளைஞர்களை போதைக்கு அடிமையாவதில் இருந்து பாதுகாக்க கடுமையாக செயலாற்ற வேண்டும்.

அத்துடன் ஒவ்வொரு ஊரிலும் மஸ்ஜித் நிர்வாகங்கள் போதைப் பொருள் ஒழிப்பு தொடர்பாக தொடர்ச்சியாக கவனம் செலுத்தும் வகையில் செயலாற்ற செயலணியொன்றை ஏற்படுத்த வேண்டியதும் அவசியமாகின்றது. சாதாரணமான ஒரு தனி மனிதனைவிட மஸ்ஜித் நிர்வாகங்களால் கூடுதலான தாக்கத்தையும் செல்வாக்கையும் செலுத்த முடிவது இதற்கு முக்கிய காரணமாகும்.

ஒவ்வொரு ஊரிலும் தமது வயது வந்த குழந்தைகளை கண்காணிப்பது தொடர்பாக பெற்றோருக்கான அறிவூட்டல்கள், வழிகாட்டல்கள் நடைபெற வேண்டும். பெற்றோர் எப்போதும் தம் குழந்தைகளில் குறிப்பாக 15 வயதுக்கு மேற்பட்ட ஆண் பிள்ளைகள் தொடர்பாக மிக வும் அவதானமாக செயற்பட வேண்டியிருக்கின்றது. அவர்களது வழமைக்கு மாறான நடத்தை, சந்திக்கின்ற நண்பர்கள், அவர்கள் வெளியே போகின் வருகின்ற நேரம், செல்கின்ற இடங்கள், பயன் படுத்துகின்ற விலையுயர்ந்த பொருட்கள் உட்பட அனை த்து விடயங்கள் தொடர்பாகவும் கவனம் செலுத்த வேண்டும். அவர்களிடம் அதிகமாக பணப் புழக்கம் இருக்குமாயின், அல்லது விலையுயர்ந்த கைத்தொலைபேசிகள் இருப்பின் அல்லது அடிக்கடி நண்பர்கள் தொலைபேசி அழைப்புக்களை மேற்கொள்வதாயின் அவை தொடர்பாகவும் பெற்றோர் அதிகமாக கவனம் செலுத்த வேண்டும்.

எவ்வாறாயினும் இன்னும் 10 வருடங்கள் கழித்து முஸ்லிம் சமூகம் இது தொடர்பாக சிந்திப்பதைவிட இன்றே தூர நோக்கில் சிந்தித்து போதைப் பொருள் ஒழிப்புக்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டியது அவசரத் தேவையாகும். அத்துடன் அரசாங்க மட்டத்தில் முன்னெடுக்கப்படுகின்ற போதைப்பொருளுக்கு எதிரான நடவடிக்கைகளுக்கு முஸ்லிம் சமூகம் பூரணமான ஒத்துழைப்பை வழங்க வேண்டும்.

இது தொடர்பாக பொலிஸ் அதிகாரிகளுடன் இணைந்து அவசரமாக முஸ்லிம் ஊர்களிலும் பரவி வரும் போதைப் பொருள் பாவனையைக் கட்டுப்படுத்தத் தேவையான, நிலையான திட்டங்களை இப்போதிருந்தே ஆரம்பித்தால் இன்னும் 10 வருடங்களில் சிறந்த பிரதிபலனை அடையக்கூடியதாக இருக்கும்.

## ஐ.நா. செயலாளரின்.... (1ம் பக்கத் தொடர்)



கடந்த பெப்ரவரி மாதம், ஐ.நா.வின் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் ஸைத் அல் ஹுஸைன் இலங்கைக்கு விஜயம் செய்தபோது பல்வேறு தரப்பினரையும் சந்தித்ததோடு வடக்குக்கான விஜயமொன்றையும் மேற்கொண்டார். இந்த விஜயத்தினை முஸ்லிம் தரப்பினர் தமது பிரச்சினைகளை முன்வைப்பதற்காகப் பயன்படுத்திக் கொள்ளவில்லை என பரவலான குற்றச்சாட்டு நிலவியது.

இதற்கிடையில் நாட்டில் முஸ்லிம் விரோத செயற்பாடுகள் அதிகரித்திருக்கின்றன. முஸ்லிம்களுக்கென தனியான காணாமல் போனோர் அலுவகம் வேண்டப்பட்டு வருகிறது. முஸ்லிம்களுக்கு எதிரான அநியாயங்களை விசாரிக்க தனியான நீதிமன்றம் வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்படுகிறது. வடக்கு முஸ்லிம்களின் காணிப் பிர்ச்சினை, மீள்குடியேற்றப் பிரச்சினைகள் கவனிக்கப்படாமல் இருக்கின்றன.

இவை போன்ற பிரச்சினைகளுக்கு புதிய அரசியலைப்பில் தீர்வுகள் உள்ளடக்கப்படுவதற்கான சர்வதேச அழுத்தம் ஒன்றை நாடி அமைச்சர் ரிஷாத் பதியுதீன் இஸ்லாமிய நாடுகளின் ஒன்றியத்தை சந்தித்திருந்தார். இவர்களது கூட்டமொன்று அண்மையில் இந்தோனேஷியாவில் நடந்துபோது, பிரதமர் அதில் கலந்து கொண்ட போதிலும் எந்த விதமான அழுத்தமும் ரிஷாதின் கோரிக்கை தொடர்பில் இஸ்லாமிய நாடுகளின் ஒன்றியம் பிரதமரிடம் முன்வைக்கவில்லை.

முஸ்லிம்களின் பிரச்சினைகள் தொடர்பில் அக்கறையுடன் செயற்படும் தலைமைகள், தற்பொழுது வாய்த்திருக்கின்ற ஐ.நா. பொதுச் செயலாளரின் விஜயத்தினை நன்கு பயன்படுத்தி, இலங்கை முஸ்லிம் சமூகத்துக்கு நியாயம் பெற்றுத் தர வேண்டும் என்று முஸ்லிம் சமூகம் எதிர்பார்க்கின்றது.

## ஹஜ் ஒரு இபாதத்.... (7ம் பக்கத் தொடர்)



தனித்துச் செயற்படுகிறார்கள். எல்லோரும் சமுதாய நோக்கத்தில் ஒன்று பட்டு செயற்பட்டால் இதை விட பலம் அதிகமாகும். எல்லோரையும் ஒன்று சேர்க்க வேண்டும் என்பதுதான் என் னுடைய எண்ணம்.

- **முஸ்லிம் சமுகத்திற்கு எதிராக மேலெழுந்துள்ள சவால்களை முறியடிக்க முஸ்லிம் அரசியல் தலைமைகளின் கூட்டுப்பொறிமுறையொன்று ஏற்படுத்துவது குறித்த பேச்சு வார்த்தைகள் எவ்வாறுள்ளது?**

நாங்கள் ஓரிரு முறை ஒன்று கூட முயற்சித்தோம். ஆனால், எல்லோரும் அதற்கு சரியாக ஒத்துழைப்பதில்லை. ரவூப் ஹக்கீமுக்கும் ரிஷாதுக்கும் இடையில் முறுகல் இருக்கத்தான் செய்கிறது. அமைச்சர் பௌசிக்கும் முஜிபுர் ரஹ்மானுக்குமிடையில் முறுகல் நிலவுகிறது. இதனால் எமக்கே பாதிப்பு ஏற்படுகிறது. என்னைப் பொறுத்தவரையில் ஒரு பிரச்சினையும் இல்லை. நான் எல்லோருடனும் ஒன்று பட்டே செயற்படுகிறேன்.

- **நல்லாட்சி அரசாங்கத்தின் கீழால் முஸ்லிம்கள் நன்மை பெற்று வருகிறார்கள் என நீங்கள் கருதுகிறீர்களா?**

நல்லாட்சி அரசாங்கம் உருவாவதற்கு முஸ்லிம்களே கூடுதலாக பங்களித்தார்கள். இந்த அரசாங்கத்தினால் முஸ்லிம்கள் பல நன்மைகளை பெற்று வருகிறார்கள். இன்னும் அதற்குரிய வாய்ப்புக்கள் அதிகம். முஸ்லிம்கள் கல்வியில் சிறந்து விளங்கினால் மாத்திரமே ஏனைய சமூகங்களோடு தலை நிமிர்ந்து வாழக்கூடிய ஒரு நிலைமை ஏற்படும்.

கடந்த காலத்தில் கல்வியை முன்னேற்றுவதற்குரிய வாய்ப்புக்கள் வழங்கப்படவில்லை. தற்பொழுது அதற்குரிய சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. முன்னர் தேசிய பாடசாலை மாகாண பாடசாலை என்பதாக வேறுபட்டிருந்தது.

தற்பொழுது மாகாண பாடசாலைகளுக்கு தேசிய அரசாங்கத்திலிருந்து நேரடியாகவே நிதி ஒதுக்கப்படுகிறது. இதனால் பல பின்தங்கிய முஸ்லிம் பாடசாலைகள் பிரயோசனம் பெறக் கூடிய நிலையுள்ளது.

## முஸ்லிம் சமூகத்தின்.... (4ம் பக்கத் தொடர்)





கேள்வியும் இங்கு முக்கியமானது. ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணைக் குழு விடயங்கள், யுத்த குற்றங்கள் பற்றி இவர்களுக்கு என்ன தெரியும்? உலமா சபை பொறுப்புடன் நடந்து கொள்வது என்பது இதுதானா?

இந்த விஜயத்தின் பின்னர்தான் ராஜபக்ஷ அரசு முஸ்லிம்களை குறிவைக்கத் தொடங்கியது என்பதையும் யாரும் இங்கே மறந்து விடக் கூடாது.

உலமா சபையால் உருவாக்கப்பட்ட மற்றொரு மாபெரும் குழப்பம்தான் ஹலால் சம்பந்தப்பட்ட விடயம். அது ஒரு சாதாரண விடயம். ஆனால், அதற்கு சரியான விளக்கம் அளிக்க உலமா சபை தவறிவிட்டது. இதனால் இனவாத சக்திகள் சமூகத்தை சீண்டிப் பார்க்க வழியமைக்கப்பட்டது.

முஸ்லிம் சமூகத்தைப் பற்றி கூறப்பட்ட சில கருத்துக்கள் வருமாறு:

1. இஸ்லாத்தில் குருத்துவம் இல்லை. உலமாக்கள் காலம் கடந்த முறையிலான மத்ரஸாக்களில் இருந்து வெளியேறியவர்கள். 1920 களின் நடுப்பகுதியில் இவர்கள் இணைந்துதான் உலமா சபையை உருவாக்கினர். முஸ்லிம் சமூகத்தில் கல்வி அறிவு மட்டம் மிகவும் குறைவாகவும், இஸ்லாம் பற்றி போதிய அறிமுகம் இல்லாத ஒரு காலமாகவும் அது இருந்தது. பல வருடங்களாக இந்த நிலை நீடித்தது. இவ்வாறான நிலையில் தான் முஸ்லிம்களுக்கான தனிப்பெரும் சமயம் சார்ந்த ஒரு அமைப்பாக உலமா சபை திகழ்ந்தது. முஸ்லிம் சமூகமும் அதன் மீது பெரும் கௌரவம் வைத்திருந்தது.

ஆனால் இப்போது காலம் மாறி விட்டது. தற்போதைய தலைமுறை இஸ்லாம் பற்றி போதிய தெளிவுள்ள சமூகமாகக் காணப்படுகின்றது. எனவே உலமா சபை காலத்தின் தேவைக்கு ஏற்ப தன்னில் மாற்றங்களைக் கொண்டு வர வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. அந்த வகையில் சமூகத்தை வழி நடத்துபவர்களாகக் காணப்பட்ட உலமாக்களின் வாழ்க்கைத் தரத்தையும் கௌரவத்தையும் அந்தஸ்தையும் மேம்படுத்த வேண்டியதும் அவசியமாகும். அவர்களின் மாதாந்த வருமானம் சுமார் 20 ஆயிரம் ரூபாவாகவே இன்னமும் உள்ளது. வாழ்க்கை நிலையோ மிகவும் பரிதாபகரமானது.

2. உலமாக்களின் நிலை குறித்து வெள்ளிக்கிழமை தொழுகை பிரசாரத்தில் ஒரு இமாம் குறிப்பிடுகின்றபோது, உலமா சபையினதும் சமூகத்தினதும் சிந்தனையைத் தூண்டும் வகையில் உணர்வுபூர்வமாக சில விடயங்களை முன்வைத்துள்ளார்.

மீள்பார்வை இதழில் அஷ்ஷெய்க் டி.எம். முபாரிஷ் றஷாதி என்பவர் அண்மையில் எழுதியுள்ள ஒரு கட்டுரையில் உலமாக்களின் பரிதாப நிலை மேலும் விவரிக்கப்பட்டுள்ளது. அவர்களுக்கு இந்த சமூகத்தை வழிநடத்தக் கூடிய தகுதியை வழங்குவதற்காக அரசியல் உட்பட இன்னும் பல விடயங்களில் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பயிற்சிகள் வழங்கப்பட வேண்டியுள்ளன.

இலங்கையில் இப்போது ஊடுருவியுள்ள வெளிநாட்டு சக்திகள் மற்றும் உள்நாட்டு சக்திகளின் தீவிர சவால்களுக்கு முகம்கொடுக்கும் வகையில் அவர்களுக்கு இத்தகைய பயிற்சிகள் அவசியமாகின்றன. ஆனால் இந்த விடயங்களில் உலமா சபை இன்னமும் இணக்கம் காணாதவர்களாகவே உள்ளனர் என்பதே பொதுவாக புரிந்து கொள்ளப்பட்ட விடயங்களாக உள்ளன.

3. மிகத் தீவிரமான உணர்வுபூர்வமான விடயங்களில் சமூகம் இன்னமும் மார்க்க தீர்ப்புக்களை எதிர்பார்த்துள்ளது. கறுப்பு நிற அபாயா அணிதல், முகத்தை மூடுதல் என்பன இதில் சிலவாகும். பெரும்பான்மை சமூகத்தின் மத்தியில் முஸ்லிம்கள் பற்றி வெறுப்புணர்வுக்கு இவை காரணங்களாக அமைந்துள்ளன. அவர்களோடு இணக்கமாக வாழ்ந்து கொண்டுதான் நாம் எமது சமூகத்தையும் வழிநடத்த வேண்டியுள்ளது.

4. தேசிய சூறா சபை உலமா சபையின் தீர்ப்புக்காக பல விடயங்களை சமர்ப்பித்துள்ளது. ஆனால் இன்று வரை அவற்றுக்கு எந்தப் பதிலும் இல்லை.

5. தொழுகைக்கான அதானுக்காக கண்டபடி ஒலிபெருக்கிகளை பாவிப்பது இன்றும் ஒரு பிரச்சினையாகவே உள்ளது. கடந்த காலங்களில் இது பற்றி சர்ச்சைகள் எழுந்த போதும் உலமா சபை இன்னமும் இந்த விடயத்தில் கவனம் செலுத்தி உறுதியான ஒரு முடிவுக்கு வரவில்லை.

ஒரு சமூகமாக தமது இருப்பை தக்கவைத்துக் கொள்ளும் விடயத்தில் இந்த நாட்டில் உள்ள முஸ்லிம் சமூகம் இன்னமும் பிரச்சினைகளை எதிர்நோக்கியதாகவே உள்ளது. முஸ்லிம்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட மத்திய கிழக்கை இஸ்ரேலியர்கள் ஒரு கொலைக் களமாக மாற்றிவிட்டனர். இப்போது அவர்கள் இஸ்லாத்துக்கும் முஸ்லிம்களுக்கும் எதிரான தமது பூகோள ரீதியான வேலைத் திட்டத்தின் ஒரு அங்கமாக இலங்கையிலும் பிரவேசித்துள்ளனர்.

இவ்வாறான ஒரு பின்னணியில் முஸ்லிம் சமூகம் அரசியல், சமய ரீதியாக தலைமைத்துவ வெற்றிடம் உள்ள ஒரு சமூகமாக தொடர்ந்து இருக்க முடியாது. முஸ்லிம் சமூகத்தைப் பாதுகாத்து அவர்கள் ஏனைய சமூகங்களுடன் இணக்கபூர்வமாக வாழ வேண்டிய சூழலை ஏற்படுத்த எல்லா முயற்சிகளும் எடுக்கப்பட வேண்டும். சிவில் சமூகம் இந்த விடயத்தில் முன்னணி வகிப்பதே வரவேற்கத் தக்கதாகும்.

## முஸ்லிம் உம்மத்துக்கு... (12ம் பக்கத் தொடர்)

தைத்த ஆடைகளை உடலிலிருந்து அகற்றியதன் பின்னரே இஹ்ராம் அணிய வேண்டும். இஹ்ராம் அணிவதற்கு முன்னர் குளித்தலும் உடலுக்கு மனம் பூசுவதும் ஸுன்னாவாகும்.

அதேபோன்றுதான் ஒருவர் மரணித்து விட்டால் அவரைக் குளிப்பாட்டி, மனம் பூசி, வெள்ளை நிற கபனாடை அணிதல் ஜனாஸாவுடைய ஒழுங்கு முறையாகும். எனவே இங்கு இஹ்ராம் ஆடைக்குரிய ஒழுங்கும் கபன் ஆடைக்குரிய ஒழுங்கும் ஒன்றுபடுகின்றது. எனவேதான் இஹ்ராம் ஆடை கபன் ஆடைய்ய நினைவூட்டுகின்றது. ஹஜ் செய்பவர் ஹாஜ், மரணித்தவர் ஜனாஸா என்ற பெயர் மட்டுமே இங்கு வேறுபடுகின்றது.

### 6- ஹஜ் மறுமை நாளை ஞாபகப் படுத்துகின்றது.

ஹாஜிகள் மினாவிலிருந்து அறபாவுக்கு வருவதும், பின்னர் அறபாவிலிருந்து முஸ்தலிபாவுக்கு வருவதும் மரணித்தவர்கள் கப்ரிலிருந்து எழும்பி விசாரணைக்காக மஹ்ஷருக்கு வருவதைப் போல இருக்கின்றது. அல்லாஹ் பின்வருமாறு கூறுகையில்;

"நிச்சயமாக அவர்கள் (தாங்கள் ஆராதனை செய்யும்) எல்லைக் கற்களின்பால் விரைந்து செல்பவர்களைப் போல் அந்நாளில் (தங்கள்) கப்றுகளிலிருந்து விரைவாக வெளியாவார்கள்." (மஆரிஜ் :43)

### 7- ஹஜ் அல்லாஹ்வுக்கு வழிப்படுவதில் பொறுமையையும் தியாகத்தையும் கற்றுத் தருகின்றது

அங்கே ஹாஜிகள் மக்கள் வெள்ளத்துக்கு மத்தியில் நசுக்கப்படுகின்றார்கள். தாகத்துக்கு மத்தியில் பொறுமையுடன் அவர்களது கடமைகளை முடிக்கின்றனர். ஏனைய இபாதத்களை விட ஹஜ் கடமையை நிறைவேற்ற நிறைய பொறுமை தேவைப்படுகின்றது. ஹாஜர் (அலை) தனது மகனான இஸ்மாயில் (அலை) அவர்களின் தாகத்தைப் போக்குவதற்காக ஸபா-மர்வாஹ் எனும் இரு மலைகளுக்கிடையில் தண்ணீர் தேடி தடுமாறி தத்தளித்தார்கள். பொறுமையோடும் தியாகத்தோடும் கஷ்டப்பட்டதன் விளைவாகவே ஸம் ஸம் தண்ணீர் ஊற்றெடுத்தது.

அத்தியாக நிகழ்வை ஞாபகப்படுத்தும் முகமாகவே ஸபா-மர்வாஹ்க்கு மத்தியில் தொங்கோட்டம் ஓடுதல் ஹஜ்ஜின் ஒரு அம்சமாக இருக்கின்றது. இந்த ஹஜ் பயணத்தில் ஹாஜிகள் பொறுமை, தியாகம் போன்ற பயிற்சிகளைப் பெறுகின்றனர். எனவே வாழ்க்கையின் வெற்றிக்கு பொறுமை, தியாகம் அவசியமாகும்.


மீள்பார்வை **உள்நாட்டு - வெளிநாட்டு புதிய சந்தா விபரம்**


| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| மீள்பார்வை தனிப் பிரதி | ரூபா 40.00 | இந்தியா | | | மத்திய கிழக்கு நாடுகள் | 4000.00 | ஐக்கிய இராச்சியம் | 5500.00 |
| 13 இதழ்கள் | ரூபா 650.00 | தனிப் பிரதி | ரூபா 100.00 | | மலேசியா | 4000.00 | அமெரிக்கா | 6500.00 |
| 26 இதழ்கள் | ரூபா 1300.00 | ஒரு வருடம் | ரூபா 3500.00 | | ஐக்கிய அறபு இராச்சியம் | 4000.00 | அவுஸ்திரேலியா | 4700.00 |
| | | | | | | | சீனா | 4600.00 |

வங்கியில் பணம் செலுத்திவிட்டு, அதன் பிரதியையும் உங்களது பெயர், முகவரியையும் எமக்கு அனுப்பி வையுங்கள்:

MMC 49, Sri Mahinda Darma Mw, Dematagoda, Colombo 09. Hotline: 077 9207569 People's Bank A/C: 056100159078164 (Branch: Sri Sangaraja Mawatha)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கற்றலும் நினைவாற்றலும்



மனித வாழ்வில் நினைவாற்றல் இறைவனால் வழங்கப்பட்ட பேருளாகும். ஞாபக மறதி திரும்பத் திரும்ப ஒரே தவறை செய்வதற்கு காரணமாகின்றது. வாழ்க்கையை முறையாக ஒழுங்குபடுத்துவதற்கும் அடுத்த கட்டத்தை சரியாகத் தீர்மானிப்பதற்கும் நினைவே பேருதவியாக இருக்கின்றது. கற்றலில் இது மிகவும் இன்றியமையாதது.

உளவியல் நோக்கில் நினைவில் வைத்திருத்தலே கற்றல் எனப்படுகின்றது.

அந்தளவுக்கு நினைவாற்றலுக்கும் கற்றலுக்கும் இடையில் நெருங்கிய தொடர்பு உள்ளது. மனதை ஒன்றுபடுத்தல், கிரகித்தல், நினைவில் வைத்தல், மீளப் பெறல் ஆகிய நான்கு பிரதான செயற்பாடுகளிலும் நினைவில் வைத்தல் மிக முக்கியமானதாகும். அது மன ஒருமைப்பாடு, கிரகித்தலுடன் தொடர்புபட்டுள்ளது.

கவனத்திற்கும் நினைவாற்றலுக்கும் உள்ள தொடர்பை ஏற்கனவே நாம் விரிவாக விளக்கியுள்ளோம். நாம் கற்றவற்றை மனதில் தேக்கி வைத்து அவற்றினை மீளப் பெற்று பயன்படுத்துவதையே நினைவுகூர்தல் என்கிறோம். சிறப்பான கற்றலில் நிவைாற்றலின் பங்கு முதன்மையானது. கற்ற ஒன்றை கால அளவில் மீட்டிப் பெறும் ஆற்றல் எனவும் இதனை உளவியலாளர்கள் வரையறை செய்கின்றனர்.

நினைவாற்றல், கற்றல் குறித்து ஏராளமான மருத்துவ, உளவியல் ஆய்வுகள் நடைபெற்றுள்ளன. தற்காலத்திலும் அந்த ஆய்வுகள் நடைபெற்று வருகின்றன. இவை குறித்து மிக விலாவாரியாகப் பேசுவது இக்கட்டுரையின் நோக்கத்திற்கு அப்பாற்பட்டது. எனினும், ஞாபகத்தின் இயல்பை மாணவர்கள் புரிந்துகொள்ள வேண்டும் என்ற நோக்கில் நினைவாற்றல் குறித்து ஓரளவு விரவாக விளக்க முயல்கிறோம்.

நினைவாற்றல் உயிரியல் (Biological) மற்றும் உளவியல் (Psychological) அடிப்படைகளைக் கொண்டது. உயிரினங்களின் படி வளர்ச்சியில் மனித மூளை நினைவாற்றலுக்குரிய உயிரியல் அடிப்படையைக் கொண்டுள்ளது. நினைவாற்றல் குறித்து உளவியலாளர்கள் சில பொது உண்மைகளை முன்வைக்கின்றனர். அவை முக்கியமானவை.

1. நினைவாற்றல் ஒருவரது உணர்ச்சிகள் (மனவெழுச்சி) உடன் இணைந்துள்ளது.
2. மன ஒருமைப்பாட்டுக்கும் கவனத்திற்கும் நினைவாற்றலுக்கும் இடையில் நெருங்கிய தொடர்புள்ளது.
3. அக்கறை, கவனம், மன ஒருமைப்பாடு, நினைவாற்றல் என்ற படிமுறை ஒழுங்கிலேயே இது செயல்படுகின்றது.
4. மூளையில் நிகழும் உயிரியல் இரசாயன செயற்பாட்டிற்கும் (Bio Chemical Process) நினைவாற்றலுக்கும் இடையில் தொடர்புள்ளது.
5. எந்தவொரு நினைவும் காலப் போக்கில் படிப்படியாக வலுவிழந்து செல்லும்.
6. பழைய நினைவுகளை மீட்டுவதும் புதிய நினைவை உட்பதிப்பதும் வேறுபட்ட செயல்முறைகளாகும்.
7. கலக்கமற்ற தெளிவான உள்ளத்தில் நினைவாற்றல் செயற்பாடு வினைத்திறனுள்ளதாக இருக்கும்.

ஐம்புலன்களில் (கண், காது, மூக்கு, வாய், தோல்) என்பவை பார்த்தல், கேட்டல், தொடல், நுகர்தல் போன்றவற்றின் மூலம் ஒரு தகவலைப் பெறும் போது ஞாபகம் உருவாகின்றது. ஞாபகத்தில் அந்தத் தகவலை பதித்து வைக்கின்றோம். இதனை உடனடி ஞாபகம் (Immediate Memory) என்கிறோம்.

அதன்படி ஒரு வேலை நிகழ்கின்றது. எனவே ஒரு வேலை இடம்பெறும் போது செயற்படும் நினைவாற்றல் என்பதனால் இதனை இயங்கும் ஞாபகம் (Working Memory) எனவும் குறுங்கால நினைவு (Short Term Memory) எனவும் அழைப்பர்.

உதாரணமாக, உங்கள் நண்பனின் தொலைபேசி இலக்கத்தைப் பார்த்தவுடனே உடனடியாக ஏற்படும் புலனுணர்வு இவ்வகை நினைவாகும். இதே தொலைபேசி இலக்கத்தை மீள மீள பயன்படுத்தும் போது அது குறுங்கால நினைவு மையத்திலிருந்து நீண்டகால நினைவு மையத்திற்கு இடம்பெயர்கின்றது.

மாணவன் கற்கும்போது முதலில் குறுங்கால நினைவு மையத்திலும், அதே விடயம் பல முறை மீட்டப்படும்போது நீண்டகால நினைவு மையத்திலும் பதிவாகின்றது. அதுவே, பரீட்சை மண்டபத்தில் மாணவர்களால் முழுமையாகவும் தெளிவாகவும் மீட்டக் கூடியதாய் (Retrival) இருக்கும்.

எனவேதான், மீளக் கற்றல் முக்கியமானது என உளவியலாளர்கள் வலியுறுத்துகின்றனர்.

பதிவு, கற்றல், ஒழுங்குபடுத்தப்படல் இம்மூன்றும் நீண்ட கால நினைவாற்றலுடன் தொடர்புறுகின்றது. நீண்டகால நினைவாற்றலுக்கு எல்லை இல்லை. அது ஒரு தகவலை மிக நீண்டகாலத்திற்கு அல்லது வாழ்நாள் முழுவதும் நினைவில் வைக்கக் கூடியது. ஆனாலும் அவை வார்த்தைகளால் ஒருபோதும் பதிவுசெய்யப் படுவதில்லை. நமது அனுபவங்கள் தகவல்களாக பதிகின்றது. அந்தவகையில் நீண்டகால நினைவாற்றல் இரு வகைப்படும்.

1. எவற்றைப் பற்றியெல்லாம் எம்மால் பேச முடியுமோ அவை வெளிப்படையானவை அல்லது விபரிக்கக் கூடியவை.
2. எந்தெந்த நிகழ்வுகளை செய்கைகளால் அல்லது குணங்களால் வெளிப்படுத்துகின்றோமோ அவை மறைமுகமான அல்லது செயல் முறை நினைவுகளாகும்.

இத்தகைய செயல்முறை நினைவில் திறமைகள், பழக்க வழக்கங்கள், மனோநிலை என்பன உள்ளடங்குகின்றன. உதாரணமாக, வாசிப்புத் திறன், சைக்கிள் ஓட்டும் திறன் என்பவற்றைக் குறிப்பிடலாம்.

வெளிப்படை நிறைவாற்றலில் அனைத்துத் தகவல்கள், கருத்துக்கள், தனிநபர் சார்ந்த நிகழ்வுகள் அடங்குகின்றன. உதாரணமாக முதல் வகுப்பில் இருந்த நெருங்கிய நண்பனின் பெயர், இலங்கை மன்னன் ஒருவனின் பெயர்.

மேலே குறிப்பிட்ட இரண்டும் எமக்குப் பயன் தரக் கூடியதே. இவ்வாறு வகைப்படுத்திப் பார்ப்பது சரியான அணுகுமுறைதான். ஏனெனில் இவை இரண்டும் மூளையின் இரண்டு இடங்களில் முறைப்படுத்தப்படுகின்றது.

மூளையிலுள்ள ஹிப்பகொம்பஸ் பாதிக்கப்பட்ட ஒருவரால் வெளிப்படையான நினைவுகளை பதிவுசெய்ய முடியாது. ஆனால், அவரால் நீண்ட கால மறைமுக நினைவுகளை பதிவு செய்ய முடியும். அவரைத் தினமும் சந்திக்கும் மருத்துவரை அவரால் அடையாளம் காண முடியாது. புதிதாக சந்திப்பது போல் அவர் தினமும் வைத்தியரை வரவேற்கக் கூடும்.

(தொடரும்)

## சவூதியின் முதல் பெண் விமானி
## அனாதி ஸகரிய்யா அல் ஹிந்தி

பெண்கள் குறித்து மிக இறுக்கமான போக்கினைக் கடைப்பிடித்து வரும் சவூதி அறேபியாவில் வணிகம் சார் விமானக் கைத்தொழில் துறையில் அந்நாட்டின் முதல் பெண் விமானியாக அனாதி ஸகரிய்யா அங்கீகாரம் பெற்றுள்ளார்.

கடந்த ஆண்டிலேயே பெண்கள் வரலாற்றில் முதன் முதலாக உள்ளூராட்சித் தேர்தலில் வேட்பாளராகக் களமிறங்குவதற்கு அரசாங்கம் அனுமதியளித்திருந்தது. மத்திய கிழக்கு அறபு நாடுகளில் இதுவரை பெண்களுக்கு வாகன ஓட்டுனர் அனுமதிப் பத்திரம் தர மறுக்கும் ஒரேயொரு நாடு எனக் கருதப்படும் சவூதி அறேபியாவில் பெண்கள் விமானம் ஓட்டுவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளமை ஒரு வகையில் மிக முன்னேற்றகரமானது. இன்னொரு வகையில் மிகவும் முரண்பாடானது.

அனாதி 1978 செப்டம்பரில் புனித மக்கா நகரில் பிறந்தார். 38 வயதான இவர், 2005 ஜூன் 15 இல் ஜோர்தான் தலைநகர் அம்மானிலுள்ள வணிகம் சார் விமான கைத்தொழிலுக்கான மத்திய கிழக்கு எகடமியின் இறுதிப் பரீட்சையில் சித்தியடைந்தார். இளவரசர் வலீத் பின் தலாலின் வணிகக் கம்பனிகளோடு 10 வருட ஒப்பந்தமொன்றை மேற்கொண்டுள்ள இவர், அவரது தனிப்பட்ட விமானத்தில் விமானியாகப் பணியாற்றுவதற்கு உள்ளீர்க்கப்பட்டுள்ளார்.

ஒப்பீட்டு ரீதியில் இளவரசர் வலீத் பின் தலால் சவூதி அறேபியாவில் பெண்களுக்கு அதிக உரிமை வழங்கப்பட வேண்டும் என குரல் கொடுத்து வருகின்றார். அந்த வகையில் அனாதியின் விமானத் துறை பயிற்சிக்கு வலீதே நிதி ஆதரவு வழங்கினார். அவர் பட்டம் பெற்று வெளியேறியபோது உரையாற்றிய வலீத், அனைத்துத் துறைகளிலும் சவூதி பெண்கள் பணியாற்றுவதற்கு தான் முழு ஆதரவு அளிக்கப் போவதாக கருத்து வெளியிட்டிருந்தார்.

ஆனால், தலாலின் இந்நடவடிக்கை குறித்து கருத்து வெளியிட்டுள்ள ஊடகங்கள், பூமியில் கார் ஓட்டுவதற்கு



அனுமதிக்கப்படாத பெண்கள், இந்நாட்டில் வானத்தில் விமானம் ஓட்டுவதற்கு அனுமதிக்கப்பட்டிருப்பது மிகப் பெரும் முரண் நகை எனச் சுட்டிக்காட்டியுள்ளன.

2014 இல் அனாதி விமானிக்கான அனுமதிப் பத்திரத்தைப் பெற்றார். ஆண்கள் போன்று பெண்களும் இதுபோன்ற துறைகளில் பணியாற்றலாம் என்கின்றார் அவர். ஆரம்பக் கல்வியை உம்முல் குரா பல்கலைக்கழகத்தில் கலைத் துறையிலேயே பூரணப்படுத்திய இவர், பின்னர் விமானத் தொழில் துறைக்கு மாறினார்.

இதேவேளை, இவரைத் தொடர்ந்து யாஸ்மின் முஹம்மத் அல் மைமானி எனப்படும் சவூதி அறேபியப் பெண் ஜோர்தான் விமானக் [illegible] குறிப்பிடத்தக்கது.

## இலங்கையிலுள்ள பல்கலைக்கழகங்களும் வளாகங்களும்

இலங்கையில் 1978 இன் 16 ஆம் இலக்க திருத்தப்பட்ட பல்கலைக் கழக சட்டங்களின்படி மொத்தமாக 15 அரச பல்கலைக்கழகங்கள் இயங்குகின்றன. அவற்றுக்கு வருடாந்தம் 25,000 மாணவர்கள் உள்ளீர்க்கப்படுகின்றனர். தற்போது 70,000 மாணவர்கள் பல்கலைக்கழகங்களில் உள்வாரி மாணவர்களாக கல்வி பயில்கின்றனர்.

**கொழும்பு மாவட்டத்தில் உள்ள பல்கலைக்கழகங்களும் வளாகங்களும்**
- கொழும்பு பல்கலைக்கழகம்
- மொரட்டுவை பல்கலைக்கழகம்
- ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்
- இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
- சுதேச மருத்துவ நிறுவகம்
- கொழும்பு பல்கலைக்கழக கணனிக் கல்லூரி
- ஸ்ரீ பாளி வளாகம்
- கற்புல அரங்கேற்ற கலைகள் பல்கலைக்கழகம்

**கம்பஹா மாவட்டம்**
- களனி பல்கலைக்கழகம்
- கம்பஹா விக்ரமாராச்சி ஆயுர்வேத நிறுவகம்

**கண்டி மாவட்டம்**
- பேராதனைப் பல்கலைக்கழகம்

**குருனாகல் மாவட்டம்**
- வயம்ப பல்கலைக்கழகம்

**இரத்தினபுரி மாவட்டம்**
- இலங்கை சம்பரகமுவ பல்கலைக்கழகம்

**மாத்தறை மாவட்டம்**
- ருஹுனு பல்கலைக்கழகம்

**யாழ்ப்பான மாவட்டம்**
- யாழ்ப்பான பல்கலைக்கழகம்
- இராமநாதர் நுண்கலைக் கழகம்

**மட்டக்களப்பு மாவட்டம்**
- கிழக்கிலங்கை பல்கலைக்கழகம்
- சுவாமி விபுலானந்தர் அழகியல் கல்லூரி

**அம்பாறை மாவட்டம்**
- இலங்கை தென் கிழக்குப் பல்கலைக்கழகம்

**அனுராதபுர மாவட்டம்**
- இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம்

**பதுளை மாவட்டம்**
- ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்

**திருகோணமலை மாவட்டம்**
- திருகோணமலை வளாகம்

**வவுனியா மாவட்டம்**
- வவுனியா வளாகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீள்பார்வை

தவிர்க்க முடியாத காரணங்களினால் வைகறை, பயணம், சர்வதேசப் பார்வை சஞ்சிகைகளின் கடந்த சில இதழ்களை வெளியிடமுடியவில்லை என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கின்றோம். இவற்றின் தொடர்ச்சியான வெளியீட்டுக்கு வாசகர்களின் ஒத்துழைப்பினை வேண்டி நிற்கின்றோம்.

# வீட்டுக்கே பரக்கத் வந்த மாதிரி இருக்கு



ஏனோ தெரியாது, இந்த ஜுப்பா தொப்பி என்றாலே ஒருவித அலர்ஜி எனக்கு! அதுவும் மத்ரஸாக்கள் என்றாலே பொம்மைகள் தயாரிக்கும் பெக்டரி போலவே உணர்வேன்.

சில தினங்களுக்கு முன் ஒரு பேஸ்புக் நண்பரிடமிருந்து ஓர் அழைப்பு

' ப்ரோ எங்கட மத்ரசாவை சேர்ந்த குழந்தைகளை ஒங்கட காட்ன பார்க்க கூட்டி வரவா?'

'வீட்டுக்கு விசிட்டர் வருவது பரக்கத் தானே? '

'சரி கூட்டி வாங்களே!'

என்றேன் உளப்பூர்வமாக,

நேற்று ஒஸ்தாத், ஹிப்ழு ஓதும் 12 சிறார்கள் மற்றும் ஒரு மத்ரஸாவை நிர்வகிக்கும் சகோதரர் ரிஸான் முபாரக் ஆகியோர் எனது வீட்டுக்கும் கார்ட்னுக்கும் (வீட்டு மேல்மாடி தோட்டம்) வருகை தந்து அவர்களோடு அளவளாவிக்கொண்டிருந்த போது,

ஒஸ்தாத் மற்றும் ரிஸான் அவர்கள் மாணவர்களை வழிநடத்தும் விதம் பிடித்துப்போனது எனக்கு. அந்த 24 கண்களிலும் நம்பிக்கை துளிர் விட்டிருந்தது. ஒரு அறிவார்ந்த சமூகத்துக்கான வித்துகள் என் பக்கத்தில்!

திடீரென ஒஸ்தாத் அவர்கள் என்னிடம், சிறுவர்களை மோட்டிவேட் பண்ணும் விதமாக அவர்களோடு உரையாடுமாறு அன்புக்கட்டளையிட்டதும், நான் தயார் நிலையில் இல்லாவிட்டாலும் என்னால் இயன்றவரை அவர்களை மோட்டிவேட் பண்ணினேன்.

அழகாக கதைத்தன அந்த மொட்டுக்கள், சம்பிரதாய ஆலிம்களாக இல்லாமல் சவால்களுக்கு முகங்கொடுக்கக் கூடியவர்களாகவும் வர வேண்டியதன் அவசியத்தை உணர்த்தினேன்.

சிங்கள, ஆங்கில மொழியின் அவசியம், அஹ்லாக்குகளின் முக்கியத்துவம், நன்மையை ஏவுவது போலவே தீமையை எதிர்த்தல், அல்லாஹ்வுக்கு மட்டுமே பயப்படுதல், நவீன சவால்களை எதிர்நோக்கல், வாசிப்பின் மகத்துவம் போன்றவற்றை அவர்களோடு பகிரக்கிடைத்தது பாக்கியமே ..!

அப்போது ஒரு சிறுவன், 'உங்களை பற்றி கொஞ்சம் சொல்லுங்களே!' என்றதும் 'என்னைப்பற்றி என்ன சொல்ல ? '

வெறும் பத்தாம் வகுப்பு படிச்ச அதுவும் O/L கூட எடுக்காத என்னைப் பற்றி சொல்ல எதுவுமே இல்லை' என்றதும் வித்தியாசமாக பார்த்தார்கள் என்னை. அந்திசாயும் வேளை 'எங்களுக்காக துஆ செய்யுங்க'

என்று ஒவ்வொருவராக என்னிடம் கேட்டபோது கண்கலங்கியது ..!

அவர்கள் புறப்பட்டு செல்லும் போது மனைவி என்னிடம், 'வீட்டுக்கே பரக்கத் வந்த மாதிரி இருக்கு, ஒருவித திருப்தியா இருக்குதில்லையா?' என்றதும், நானும் சொல்ல பாத்தேன் நீங்க சொல்லிட்டீங்க' என்றேன்

யா அல்லாஹ்!

இந்த 12 பேரையும் எமது சமூகத்தை வழி நடாத்தக் கூடிய நல்ல ஆளுமைகளாக ஆக்குவாயாக !

# உயர்ந்த மினாரத்துகள் கூரான எம் துப்பாக்கி முனைகள்

எம் பள்ளிவாசல்களின் குவிமாடங்கள் எங்கள் தலைக்கவசங்கள். பள்ளிவாசல்களே எம் இராணுவக் குடியிருப்புகள்.

இறைவிசுவாசிகளே எங்களின் இராணுவச் சிப்பாய்கள்.'' இது அர்துகானால் வாசிக்கப்பட்ட ஒரு பிரபலமான துருக்கியக் கவிதை. இந்தக்கவிதை துருக்கியின் வாக்காளர் மனங்களில் எவ்வாறான தாக்கங்களை ஏற்படுத் தியிருக்கும் என்பதை இலகு வாக ஊகிக்கலாம். ''ஆதவன் எழுந்து வந்தான்'' பாடல் முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவாளர்களுக்குள் ஏற்படுத்திய அதே தாக்கம்! இந்தப் பதிவின் நோக்கம் ஒரு ஒப்பீடைச் செய்வதல்ல. மாறாக, கவர்ச்சிகரமான் சுலோகங்கள் எவ்வாறு மக்களின் உணர்ச்சிகளைத் தூண்டவல் லவை என்பதைக் காட்டுவதே.

ஆழமான புரிதல் இல்லாத, மேலோட்டமான உணர்ச்சிகள் நிரந்தரமான மாற்றங்களுக்கு வழி வகுக்காது. உணர்ச்சிகள் ஆதிக்கம் செலுத்துகின்ற மனங்களில் ஆழமான புரிதல் ஏற்படாது.

- அல் கலாம்

# வாழ்க்கையின் அர்த்தம்

வேலையிழந்த ஆணிடமும்,
குழந்தை இல்லாத பெண்ணிடமும்,
முதியோர் இல்லத்தில் தள்ளப்பட்ட
பெரியவர்களிடமும் கேட்டுப்
பாருங்கள்... வாழ்க்கையின் அர்த்தம்
புரியும்!

- முனீரா அபூபக்கர்

# வாப்பா என்னைப் பார்க்க வந்திருந்தார்

எண்ணெய் பூசி படிய வாரிய தலையில் முக்காடு முளைத்திருக்க யாருடனோ கதைத்துக் கொண்டிருந்த நான் ஓடி வருகிறேன். வெறும் 10 வயது. உம்மா,ஏதேதோ எல்லாம் எனக்காக கொண்டு அனுப்பியிருக்கிறார்.

நானே விரும்பி சண்டை பிடித்துத் தான் இங்கு வந்தேன்.

ஹொஸ்டல் வாழ்க்கை மிக மிகப் புதினமாய் இருக்கிறது.

தண்ணீர் வாளியைத் தூக்கிக் கொண்டு குளியலறை செல்வதும், இரவில் கேட்கும் சக மாணவிகளில் கூக்குரல்களும்,ஜின் கதைகளும், கால் இடற அபாயா அணிந்து கொண்டு காலையில் வகுப்புக்கு ஓடுவதும் மெதுவாகப் போனதால் இல்லாமல் போன பாண் துண்டும் கிழங்கு ஆணமும் எல்லாமே புதிது. மதியம் அரை மணி நேரம் ஓய்வு. உறங்கும் சிறுமிகளுக்கு மத்தியில் எத்துணை புரண்டாலும் உறக்கம் வராத பொழுதுகள்.

நான் எங்கிருக்கிறேன்;என்ன நடக்கிறதென்பதையெல்லாம் பகுத்துப் பார்க்கத் தெரியவில்லை;அல்லது அதற்கான நேரம் இல்லை. உள்ளுக்குள் யாரோ ஓட ஓட விரட்டிக் கொண்டிருப்பது மாதிரியானதோர் விராண்டல்.

இங்கு தான் என் எதிர்காலம் கழியப் போகிறதென்று அறுதியாய் தீர்மானித்தாகி விட்டது.

சாஹிராவின் வகுப்புக்களும் தோழிகளும் மணி அடித்தவுடன் வீட்டை நோக்கி ஒட்டமும் நடையுமாக முதலில் வந்து சேர்வதும்,உம்மாவின் தேநீர் ஊற்றும் அதி மதுரமான சப்தங்களுமென சம்பந்தா சம்பந்தமில்லாத நினைவுகள் சம்பந்தமேயில்லாத வேளைகளில் முளைத்து இரகசியமாகத் தொந்தரவு செய்கின்றன. யன்னல் வழிக்காற்றும் சிலும்பும் முடிக்கற்றைகளுமாய் கல் எலியவி லிருந்து மாவனல்லை வரையான அந்த நீண்ட பயணம் கல்வெட்டாய் மனசுள் பதிந்து விட்டது.அப்போது தமிழ் பாடம் நடந்து கொண்டிருக்கிறது. எல்லோரும் திரும்பிப் பார்க்கிறார்கள்.

இப்படியாக என் பிரியத்துக்குரிய சாஹிராவில் திருப்பவும் புதிதாக வாழ்க்கை ஆரம்பமானது.

- சமீலா யூசுப் அலி




*தன் பொக்கிஷங்களை இழந்து*
*மனிதம் சொல்லிக் கொடுக்கின்றது*
*சிரிய தேசம்..!*
*கடந்த வருடம் அய்லான்*
*குர்த்தியை இழந்து முழு*
*உலகையும் தன் பக்கம் இழுத்தது*
*இம் மண்...!*
*ஒம்ரான் இவ்வருட*
*கதாநாயகனாகின்றான்..!.*

- பின்த் தாஜுடீன்

# வைத்தியர்

ஒரு சிறுவன் ஆசையாக செல்லப் பிராணி ஒன்று வளர்த்தான், ஒரு நாள் திடீரென்று அந்த செல்லப்பிராணி இறந்து விட்டது. சிறுவன் விடாமல் அழுதுகொண்டே இருந்தான். வீட்டில் எவ்வளவோ ஆறுதல் சொல்லிப் பார்த்தார்கள். ஒன்றும் நடக்கவில்லை. அழுகையும் நின்றபாடில்லை.

எனவே, ஒரு மனோதத்துவ வைத்தியரிடம் அழைத்து சென்றார்கள். அவரும் பல ஆறுதல் வார்த்தைகளை சொல்லிவிட்டு கடைசியில் அவனிடம், ''இதோ பார் இந்த சின்ன விடயத்திற்காக ஏன் இப்படி அழுகிறாய்? எனது அப்பா கூட கடந்த வாரம் இறந்துப் போனார். நான் என்ன அழுகிறேனா பார்'' என்றார்.

## வாய் மூடினார்

உடனே அந்தப் சிறுவன் ''நீங்க என்ன, என்னை மாதிரி குட்டியில இருந்தா உங்க அப்பாவை வளர்த்தீங்க?'' என்றான் கோபத்தோடு. வைத்தியர் வாயே பேசவில்லை.



# இலக்குகளை அடைய ஆறு வழிகள்

மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவருக்கும் வாழ்க்கையில் இலக்கு என்பது அவசியம். இலக்கு இல்லாத மனிதன் மாலுமி இல்லாத படகு போல தத்தளிப்பான். மனிதன் நிர்ணயிக்கும் இலக்குதான் பிற்காலத்தில் அவன் வாழ்க்கையை மாற்றியமைக்கப்போகும் திருப்புமுனை. அதேபோல் இலக்கைத் தேர்வு செய்வதிலும், தேர்வு செய்த இலக்கை அடைவதிலும் மிகுந்த கவனம் செலுத்த வேண்டும். இல்லாவிட்டால், வாழ்க்கையில் தோற்றவர்களின் பட்டியலில் உங்களின் பெயரும் இடம்பெற்றுவிடும்.

அதற்காக நீங்கள் தேர்ந்தெடுக்கும் இலக்கு மிகப்பெரிய அளவில் இருக்க வேண்டிய அவசியம் இல்லை. எப்போதும் உங்கள் சக்திக்குத் தகுந்ததாகவும், உங்கள் பொருளாதார வசதிக்கு ஏற்றதாகவும் இருக்கும்படி பார்த்துக் கொள்வது சிறப்பு. இப்படி இலக்குகளை வகுத்துக்கொண்டு அதை சிறிது சிறிதாக அடைய முயற்சி செய்யலாம்.

இங்கே இலக்குகளை வகுத்து அவற்றை அடைவதற்காகப் பயணம் மேற்கொள்ள 10 வழிகளைக் கூறுகிறேன். நிச்சயம் உங்களுக்கு அவை வழிகாட்டும் என்பது எனது நம்பிக்கை.

student @ மீள்பார்வை

தொகுப்பு: ஏ.ஸீ.எம். நதீர்

### 1. இலக்கை நிர்ணயித்தல்

உங்கள் இலக்குகளை ஒரு குறிப்புப் புத்தகத்தில் தெளிவாக எழுதுங்கள். இலக்குகளை எழுதிப் பார்த்து, அவற்றை அடிக்கடி படித்து மனதில் பதிய வைத்துக் கொள்ளுங்கள். அப்படி மனதில் பதிய வைத்தவர்களில் 80 சதவிகிதம் பேர் வெற்றி பெற்றிருக்கிறார்கள் என்று புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

### 2. திட்டமிடல்

திட்டமிடத் தவறுவது, தோல்விக்குத் திட்டமிடுவதற்கு ஒப்பாகும். எனவே, திட்டமிடல் அவசியம். அப்படி நீங்கள் இலக்குகளை அடைய வகுக்கும் திட்டங்கள் சிறியதாக இருக்கும்படியும், எளிதில் செயல்படுத்தக் கூடிய வகையிலும் வகுத்துக் கொள்ள வேண்டும்.

### 3. காரணங்களை எழுதுங்கள்

உங்களுடைய இலக்குகளுக்கான காரணங்களை எழுதுங்கள். அந்த இலக்குகளை' அடைவதற்கு உங்களை உந்தும் காரணிகளையும் எழுதி வையுங்கள். அவை உங்கள் மனதிற்கு ஊக்கக் கிளர்ச்சியையும், புத்துணர்ச்சியையும் அளிப்பவையாக இருக்கும்படி பார்த்துக் கொள்ளவும்.

### 4. நேர்மறை எண்ணங்கள்

நேர்மறையான எண்ணங்களை உள்ளத்தில் உருவாக்கும் பொருட்டு பல புதிய நேர்மறை வாக்கியங்களை உங்களுக்கென்று உருவாக்கி எழுதி வையுங்கள். 'என்னால் முடியும்', 'என்னால் முடியாவிட்டால் வேறு யாரால் முடியும்', 'ஒரு வாரத்திற்குள் முடித்துவிடுவேன்' போன்ற நேர்மறையான எண்ணங்களை உள்ளத்தில் உருவாக்கிக் கொண்டு தன்னம்பிக்கையைக் கொடுக்கக் கூடிய பல புதிய நேர்மறையான வாக்கியங்களை உங்களுக்காகவே உருவாக்கிக் கொள்ளுங்கள்.

### 5. உருவகம் செய்யுங்கள்

எப்போதும் உங்கள் மனதில் தோன்றும் இலக்குகளை உருவகம் செய்யப் பழகிக்கொள்ளுங்கள். தெளிவாகவும், எளிமையாகவும் கூறினால் கனவு காணுங்கள். நீங்கள் என்னவாக விரும்புகிறீர்களோ அது குறித்து அடிக்கடி மனதில் கற்பனை செய்யுங்கள்.

### 6. செயல்படுதல் / அமுல்படுத்துதல்

இதுவரை சொல்லப்பட்ட நடைமுறைகளை அன்றாட வாழ்க்கையில் அமுல்படுத்த காலையில் எழுந்தவுடனே உங்களுடைய இலக்குகளை மனதில் அசைபோடுங்கள்.

- நாகராஜ் கே.

# நாய் வால் பிடித்தல்



ஆற்றில் வெள்ளம் கரை புரண்டு ஒடுகிறது. இக்கரையில் இரண்டு பேர் நின்று கொண்டிருக்கிறார்கள். ஓடம் இல்லை. எப்படி அக்கரைக்கு செல்வது என யோசித்துக் கொண்டிருந்தார்கள்.

அந்த நேரத்தில் ஒரு காளை மாடு அங்கே வந்தது. அதுவும் அக்கரைக்குப் போக வேண்டும். ஆனாலும், அதற்கு ஓடம் எதுவும் தேவைப்படவில்லை. அப்படியே ஆற்றில் பாய்ந்து, நீந்த ஆரம்பித்தது. இதைப் பார்த்த இரண்டு பேரில் ஒருவர் ஆற்றில் குதித்தான். அந்தக்காளை மாட்டின் வாலைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டான். காளை மாடு சுலபமாக அவனை இழுத்துச் சென்று அக்கரையில் சேர்த்துவிட்டது. அடுத்தவன் பார்த்தான். எனக்கும் ஒரு 'வால்' கிடைக்காதா என்று எதிர் பார்த்தான். இந்த நேரம் ஒரு நாய் வந்து ஆற்றில் குதித்தது. இதுதான் நேரம் என்று இவனும் ஆற்றில் விழுந்து அந்த நாயின் வாலைப் பிடித்துக் கொண்டான்.

இந்த மனிதனை இழுத்துக்கொண்டு நாயால் ஆற்றில் நீந்த முடியவில்லை, திணறியது. ஒரு கட்டத்தில் நாய், குரைக்க ஆரம்பித்து விட்டது. விளைவாக, இருவருமே ஆற்று நீர் போகும் திசையிலேயே மிதந்து போய்க் கொண்டிருக்கின்றனர்.

கரை சேர நினைக்கிற மனிதர்களின் கதை இதுதான். சிலர் கரையிலேயே நின்று விடுகிறார்கள். சிலர் காளையின் வாலைப் பிடித்துக் கொள்கிறார்கள். சிலர் நாயின் வாலைப் பற்றிக் கொள்கிறார்கள்.

# இரவல் கொடுத்தல்

முல்லாவின் தெருவில் குடியிருக்கும் ஒருவர் முல்லா வீட்டுக்கு வந்தார். ''முல்லா, உங்கள் வீட்டுக் கொடியை எனக்கு இரவல் தரமுடியுமா?'' என்று கேட்டார். முல்லா, ''முடியாது'' என்றார்.

தெருக்காரர், ''ஏன் முடியாதென்கிறீர்கள் முல்லா?'' என்றார்.

''கொடியில் மாவு உலரப் போட்டிருக்கிறேன். தரமுடியாது'' என்றார் முல்லா. தெருக்காரர், ''கொடியில் மாவை உலரப் போட முடியுமா?'' என்றார். முல்லா, ''இரவல் தருவதை விட அதுவொன்றும் சிரமமான காரியம் இல்லை'' என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Published by [illegible] Media (Pvt) Ltd. 49, Sri Mahinda Dharma Mawatha, Colombo 09.